# புதிய முன்னோடி

ஓட்டும் வேட்டும் ஆயுதமல்ல! மக்களே ஆயுதம்!


# இந்துத்துவா பயங்கரவாதத்தின் வளர்ச்சி

ஒருபக்கம், இந்துத்துவா பயங்கரவாதத்தின் வளர்ச்சி மறுபக்கம் இராஜஸ்தான் மாநில இடைத் தேர்தல்கள் சற்றே ஆறுதலாக இருக்கின்றன. இருந்தாலும், இதன் வீச்சு இந்தியாவெங்கும் இருக்கும் என்று உறுதியாக சொல்ல முடியாது. ஓட்டு வங்கி பலம் ஒருபக்கம் ஏறி இறங்கிக் கொண்டிருந்தாலும் மறுபக்கம் இந்துத்துவ பயங்கரவாத வளர்ச்சியை யாரும் மறுக்கமுடியாது.

பா.ஜ.க. இன்று 19 மாநிலங்களில் நேரிடையாக அதிகாரத்தில் உள்ளது. இந்த மாநிலங்களில் பார்ப்பனிய பண்பாட்டு அம்சங்கள் தெளிவாக புகுத்தப்படுகின்றன. பாடத் திட்டங்களில் வரலாறு புரட்டப்படுகின்றது. மாநில நிர்வாக எந்திரங்கள் பாசிசமயமாக்கப்படுகின்றன.

“காங்கிரஸ் இல்லாத இந்தியா”, கம்யூனிஸ்டுகள் இல்லாத இந்தியா” என்று எதிர்க்கட்சிகளின் மீது பா.ஜ.க. தாக்குதலை தொடுக்கிறது. எதிர்க்கட்சிகள் ஆட்சி உள்ள மே. வங்கம், கர்நாடகா, திரிபுரா, கேரளா மாநிலங்களில் எல்லாவிதமான பார்ப்பன கயமைத்தனங்களை கையாள்கிறது. மே. வங்கத்தில் மார்க்சிஸ்ட் கட்சியை பின்னுக்கு தள்ளுகிறது. திரிபுராவில் எம்.எல்.ஏக்களை விலைக்கு வாங்குகிறது. கேரளாவில் யாத்திரை நடத்தியது. சுதந்திரநாள், குடியரசுநாளில் R.S.S. தலைவர் மோகன் பகவத் வலிந்து கொடியேற்றினார்.

ஒரு பக்கம் எதிர்க்கட்சிகளை அழிக்க எத்தனிக்கும் அதே வேளையில் மறுபக்கம் மாநிலக்கட்சிகளை ஒழிக்கும் வேலையில் இறங்கி உள்ளது. “கழகங்கள் இல்லாத தமிழகம்” என்று திராவிடக் கட்சிகள் அழிந்தது போன்ற போலியான பாசிச பிம்பத்தை தமிழகத்தில் கட்டி அமைக்க முயற்சிக்கிறது. ஒட்டுமொத்தத்தில், இந்தியாவில் எந்த அரசியல் கட்சியும் இல்லாமல் பி.ஜே.பி.


ஆசிரியர்
**துரைசிங்கவேல்**
90034 90422
நிர்வாக ஆசிரியர்
பாஸ்கர்
99405 76027

**தொடர்பு முகவரி**
பாஸ்கர், C/o. ஹமீத்,
4, அம்பேத்கர் தெரு, அண்ணா சாலை,
வல்லாஞ்சேரி, கூடுவாஞ்சேரி,
அஞ்சல் எண்: 603 202
மின்னஞ்சல்: puthiyamunnodi@gmail.com
www.puthiyamunnodi.blogspot.in

**5**
ஏப்ரல்
2018
நன்கொடை- ரூ.20/-

மட்டுமே இருக்க வேண்டும் என்ற ஒரு முழுமையான பாசிச சூழ்நிலையை உருவாக்க முயற்சிக்கிறது. இந்தச் சூழலில் இந்துத்துவ பயங்கரவாதத்தை எதிர்க்க வேண்டிய போராட்டக் களமோ எதிர்க்க தயாரில்லாமல் பலவீனமாக உள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன் மாவோயிஸ்டு கட்சியின் பொதுச் செயலர் கணபதி பெயரில் வந்த பத்திரிகைச் செய்தியில் இந்து பாசிசத்திற்கு எதிரான அனைவரும் ஓரணியில் திரள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். ஆனால் அதற்கு செயல்பூர்வமான முயற்சி இருந்ததாகத் தெரியவில்லை. மாவோயிஸ்டு கட்சியிடமாவது கொள்கையளவில் முயற்சி இருந்தது. ஆனால், மார்க்சிஸ்டு கட்சியிடம் அது கூட இல்லை.

சமீபத்தில் மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச்செயலர் சீதாராம்யெச்சூரி முன்வைப்பு பிரகாஷ் காரத்தால் பெரும்பான்மை என்ற பெயரில் முறியடிக்கப்பட்டது.

கடந்த பல ஆண்டுகளாக பிரகாஷ் தலைமை குறுங்குழுவாத, தூய்மைவாதத்தை முன்நிறுத்துகிறது. இப்போக்கு சொந்த கட்சியையும் பலப்படுத்தவில்லை; உருவாக்கவில்லை. "கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக" கட்சி கரைந்து இந்து பாசிசம் வளர்வதற்கு பிரகாஷ் தலைமை துணை செய்கிறது.

மேற்கண்டவாறு நிலைமை இருக்க, பலத்தில் சிறியதாக இருந்தாலும் புரட்சிகர சக்திகளும் சனநாயக சக்திகளும் ஒன்று திரள வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர். தமிழகத்தில் ஓரளவு சரியாகவே இச்சக்திகள் செயல்படுகின்றனர். ஆனால், ஓரணியில் திரளவில்லை.

தமிழகத்தில் அ.தி.மு.க. மூலம் குறுக்குவழியால் அதிகாரத்தை செலுத்தும் பி.ஜே.பி. கமல் மற்றும் ரஜினியை அரசியலில் இறக்கியதன் மூலம் எதிர்கால அதிகாரத்தை குறிவைக்கிறது. இத்தகைய பி.ஜே.பி.யின் சதிகளை முறியடித்து இந்துத்துவா பாசிசத்தை தமிழகத்தில் வேறூன்றாமல் செய்ய அனைத்து புரட்சிகர சக்திகளும் சனநாயக சக்திகளும் இந்துத்துவா பயங்கரவாத எதிர்ப்பு அணியில் திரளவேண்டிய கட்டாயமும் கடமையும் உள்ளது.

தோழமையுடன்,

ஆசிரியர்

## எல்லா பாஸிஸ்டு வெகுஜன ஸ்தாபனங்களிலும் கம்யூனிஸ்டுகள் நுழைய வேண்டும்

குறிப்பிட்ட நாட்டில் பாஸிஸ்டுகளுக்கு ஏகபோகமாக சட்ட பூர்வமாக செயல்படுவதற்கு உரிமையுள்ள அந்த நாட்டில் அந்தப் பாஸிஸ்டு வெகுஜன ஸ்தாபனங்களில் கம்யூனிஸ்டுகள் நுழைய வேண்டும். அதிலுள்ள சட்ட பூர்வமான, அரைகுறைச் சட்டபூர்வமான நிலைகளையும் மிகச் சிறிய அளவில் இருந்தாலும்கூட அதையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த ஸ்தாபனங்களுக்குள் வேலை செய்ய வேண்டும். அதிலிருந்து கொண்டே அதில் பாஸிஸ்டுகளின் கொள்கைகளுக்கு எதிரிடையாக மக்களுடைய நலவுரிமைகளை முன் வைக்க வேண்டும். அதன்மூலம் பாஸிஸ்டுகளின் வெகுஜன அடிப்படையை கீழறுக்க வேண்டும். உழைக்கும் மக்களுடைய மிக அவசரமான அன்றாடத் தேவைகளுக்காக சாதாரண ஆக ஆரம்ப நிலையிலான ஆட்சேபனை இயக்கங்களிலிருந்து தொடங்கி கம்யூனிஸ்டுகள் மேலும் மேலும் அதிகமான விரிவான மக்கள் பகுதிகளை இயக்கத்திற்குக் கொண்டு வருவதற்கு நெளிவு சுழிவான உபாயங்களைப் பயன்படுத்த வேண்டும்.

- ஐக்கிய முன்னணி தந்திரம், டிமிட்ரோவ் (தமிழில்: ஏ.சீனிவாசன்), பக்.226, பிப்ரவரி 1976

# இடதுசாரி தலித் இயக்கம் - காலத்தின் தேவை

- பழனி

சாதி ஒழிப்பிற்கான போராட்டக் களத்தில் இடதுசாரி கண்ணோட்டத்தில் தலித் இயக்கங் களை கட்டியமைக்க வேண்டியது மிக மிக அவசியமாகும். இத்தேவையை பெரும்பாலான இடதுசாரி இயக்கங்கள் புறக்கணிக்கவே செய்கின்றன. இதற்கு அடிப்படைக் காரணம் இடதுசாரி இயக்கங்கள், இடதுசாரி அறிவுஜீவி களிடம் சாதியம் குறித்த சிக்கலில் உள்ள புரிதலின்மையே ஆகும்.

இதனாலேயே மண்ணுக்கேற்ற மார்க்சியம், அம்பேத்கரியம், பெரியாரியம் என்ற கருத்துக் கள் முன்னுக்கு வருகின்றன.

“மண்ணுக்கேற்ற மார்க்சியம்” என்ற சொல் லாடலை கேட்டாலே எனக்கு நகைப்புதான் வரும். மார்க்சியத்தில் மண்ணுக்கேற்ற மார்க் சியம், மண்ணாங்கட்டி மார்க்சியம் எல்லாம் இல்லை. மார்க்சியம் என்பதே “சமூகமாக இருக்கட்டும், இயற்கை மற்றும் எதுவாக இருக்கட்டும்... புறத்தை மிகச் சரியாக உள்வாங்கிக் கொள்வது என்பதும் அப்புறத்தின் மீது மிகச் சரியாக வினையாற்றி, புறம் எதுவாக மாறக் கூடியதோ அதுவாகப் பார்வையை முன்வைத்துள்ளதே மார்க்சியம் ஆகும். அதுதான் இயங்கியல் பொருள் முதலியல், வரலாற்றுப் பொருள் முதலியல், அரசியல் பொருளாதாரம், விஞ்ஞான சோசலிசம்” என்ற மார்க்சிய கோட்பாடுகள் ஆகும். இக்கோட்பாடு களை மார்க்ஸ் உருவாக்கினார். லெனினும் மாவோவும் மேலும் வளர்த்தெடுத்துள்ளனர்.

இந்திய துணைக்கண்டத்தில், தமிழகத்தில் உள்ள பெரும்பாலான மார்க்சிஸ்டுகள் இங்குள்ள புறத்தை மார்க்சிய அறிவியல் அடிப்படையில் ஆராயாமல் அகநிலை அடிப்படையிலும் சீனா மற்றும் ரஷ்யாவை வரட்டுத்தனமாக இங்கு பொருத்துவதன் அடிப்படையிலும் சாதியம் மற்றும் தமிழ் சமூகம், இந்திய துணைக்கண்டம் குறித்த கருத்துக்களை முன்வைக்கின்றார்கள் என்றால் அது மார்க்சியத்தின்பால் உள்ள சிக்கல் இல்லை. மாறாக மார்க்சிஸ்டுகள் என்று கூறிக் கொள்பவர்களிடமும் கட்சிகளிடமும் உள்ள சிக்கலே ஆகும்.

மார்க்ஸ் புராதன பொதுவுடமைச் சமூகம், ஆண்டான்-அடிமைச் சமூகம், நிலவுடமைச் சமூகம், முதலாளிய சமூகம், சோசலிச சமூகம்- என்று வரலாற்றுப் பொருள் முதலியல் கண்ணோட்டத்தில் வரையறுத்துள்ளதை அப்படியே இங்கு வாந்தியெடுக்கின்றனர்.

பெரும்பாலான இடதுசாரி இயக்கங்களிடம் சாதியம் பற்றிய ஆய்வில் “வர்க்க சுருக்கல் வாதமே” உள்ளது. அதாவது வர்க்கப் பிரச்ச னையை தீர்த்தால் சாதிய சிக்கல் தீர்ந்துவிடும் என்று பார்க்கின்றனர். சாதியம் இங்கு அதற்கே யுரிய தனித்த பண்புடன் இயங்கிக் கொண்டிருப் பதைக் காணத் தவறுகின்றனர். இதனால் மாவோ சுட்டிக்காட்டியது போல முரண்பாட்டினுடைய குறித்த தன்மையைப் பார்க்க மறுக்கின்றனர். இதனாலேயே சாதியத்தின் குறித்த தன்மையை பார்க்கத் தவறுகின்றனர்.

சி.பி.ஐ, அதன் பின்வந்த சி.பி.ஐ. (எம்), பின்பு வந்த சி.பி.ஐ. (மா-லெ) இவற்றில் எந்த இடது சாரி இயக்கமும் இந்தியத் துணைக்கண்டம் குறித்து பருண்மையான சமூகப் பகுப்பாய்வு செய்து தங்கள் திட்டங்களை முன்வைக்கவில்லை என்னால் உறுதியாகச் சொல்லமுடியும். இதில் சி.பி.ஐ, சி.பி.ஐ. (எம்) போன்ற கட்சிகள் சொல்லில் சோசலிசம், செயலில் முதலாளியச் சுரண்டல் நலனைக் காப்பவர்கள் என்ற அடிப்படையில் திரிபுவாதிகளாகவே உள்ளன.

புரட்சிகர இயக்கமான சி.பி.ஐ. (மா-லெ) இயக்கம் கூட இந்திய துணைக்கண்டத்தை சமூகப் பகுப்பாய்வு செய்யாமல் சீனாவின் சமூக நிலையை வரட்டுத்தனமாக இந்திய துணைக் கண்டத்திற்கு பொருத்தியது என்பதுதான் உண்மை. சி.பி.ஐ. (மா-லெ) இயக்கம் பின்பு பல கட்சிகளாக பிளவுண்ட நிலையில் ஒரு சில இயக்கங்கள் சாதியம் குறித்த சிக்கலில் கவனம் செலுத்தத் தொடங்கின.

1980-களில் உருவான இ.க.க. (மா-லெ) மக்கள் யுத்தக் கட்சி (தற்போதைய மாவோயிஸ்ட் கட்சி) தனது அடிப்படை ஆவணத்தில் சாதியம் அடிக்கட்டுமானம், மேல் கட்டுமானம் ஆகிய இரண்டிலும் உள்ளது என்று முன்வைத்தது. மக்கள் யுத்தக் கட்சியின் பண்பாட்டுப் பிரிவாக இருந்த புரட்சிகர பண்பாட்டு இயக்கம் (பு.ப.இ.) சென்னையில் நடத்திய "சாதியும்-வர்க்கமும்" என்ற கருத்தரங்கு சாதியச் சிக்கலில் சில முக்கிய முடிவுகளை எடுத்தது.

மக்கள் யுத்தக் கட்சியிலிருந்து தமிழ்த் தேசியச் சிக்கலை முன்வைத்துப் பிரிந்து சென்ற தோழர் தமிழரசன் மீன்சுருட்டி மாநாட்டில் சாதியம் குறித்த அறிக்கையை முன்வைத்தார். சாதியம் குறித்த திட்டவட்டமான ஆய்வுகளை மேற் கொண்ட போதிலும் திட்டவட்டமான முடிவு களையும் வந்தடையாமலே இருந்தனர்.

இடதுசாரி ஆய்வாளரான தோழர் கோ.கேசவன் "அம்பேத்கரும் சாதி ஒழிப்பும்" என்ற நூலில் சாதியம் குறித்த மிக ஆழமான ஆய்வுகளை முன்வைத்துள்ளார். இவர் சாதியம் ஒரு சமூக அமைப்பு. அது சமூக உற்பத்தி, அரசியல், பண்பாடு என அனைத்து தளங்களிலும் உள்ளது என்று முன்வைத்தார்.

சாதி ஒழிப்பிற்காக ஒடுக்கப்பட்ட சாதிகளுக் கான தனித்தனி சாதி அமைப்புகளையும் அனைத்து ஒடுக்கப்பட்ட சாதிகளை ஒன்றிணைக்கும் முன்னணிகளையும் வர்க்க அமைப்புகளையும் கட்ட வேண்டியதன் அவசியத்தை முன்வைத்தார்.

அடிப்படையில் சாதி ஒழிப்பிற்காக அனைத்து ஒடுக்கப்பட்ட சாதிகளும் ஒன்றிணைவதோடு, ஆதிக்க சாதியில் உள்ள உழைக்கும் வர்க்கத்துடன் ஐக்கியப்பட்டு உருவாகும் ஐக்கிய முன்னணியை கட்டியமைக்க வேண்டியதன் அவசியத்தை முன்வைத்தார்.

தோழர் கேசவனின் சாதி குறித்த ஆய்வை எந்த இடதுசாரி இயக்கங்களும் உள்வாங்கி கொள்ள வில்லை. தோழர் கேசவனின் ஆய்வை விவாதிக்க விருப்பம் இல்லாதவர்களாய் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தனர்.

அம்பேத்கர், பெரியாரின் சாதி குறித்த ஆய்வு களை பரிசீலிக்கவும் தயாரற்றவர்களாகவே தமிழகத்தில் உள்ள பெரும்பாலான இடதுசாரி சக்திகள் உள்ளனர்.

முதன்முதலில் லிபரேசன் கட்சியின் சார்பாக தலித் மக்களுக்கான அமைப்புக் கட்டப்பட்டது என்பது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். மக்கள் யுத்தக் கட்சியின் தலைமையில் தமிழ்நாட்டில் சாதி ஒழிப்பு சமத்துவ முன்னணி 1990களில் கட்டப்பட்டது. ஆனால் இவ்வமைப் புகள் பரந்துபட்ட தலித் மக்களை அணிதிரட்டு வதில் தோல்வியையே தழுவின. மேலும் சாதி குறித்த முழு புரிதல் வந்தடைவதிலும் சிக்கல் இருந்தது.

தமிழகத்தின் மார்க்ஸ், மாவோ என்று அவரது அணிகளால் பூஜிக்கப்படும் கட்சி கலைப்புவாதி ஏ.எம். கோதண்டராமன் தலைமையிலான போல்ஷ்விக் கட்சியோ, "இந்திய" புரட்சிக்கே தனது கட்சிதான் அரசியல் வழகாட்டுதலின் நம்பிக்கை நட்சத்திரம் என்ற குட்டி முதலாளிய இறுமாப்புடன் இருக்கும் மாநில அமைப்பு கமிட்டியோ (எஸ்.ஓ.சி), தனது கட்சியின் அணிகளே புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு மாபெரும் திட்டங்களை முன்வைத்த "மாபெரும் ஆசான்" கார்முகில் தலைமையிலான தமிழ்நாடு மார்க்சிய-லெனினிய கட்சியோ இந்தியத் துணைக்கண்டம் குறித்தோ தமிழ்ச் சமூகம் குறித்தோ சாதியம் குறித்தோ முழுமையான பகுப்பாய்வு செய்யாமலே உள்ளன. வர்க்க சுருக்கல்வாதமே இவர்களிடம் உள்ளது. சோசலிசப் புரட்சி என்று புதிதாக முளைத்துள்ள சில "சோசலிஸ்ட் புரட்சியாளர்கள்" சாதிய, தமிழ்த்தேசிய சிக்கலை முற்றாக திசைதிருப்பவும் மூடிமறைக்கவுமே தங்களது சோசலிஸ்ட் முழக்கத்தை முன்வைத்துள்ளனர். இவர்கள் அனைவரும் இடதுசாரிகள் தலைமையிலான தலித் இயக்கத்தின் தேவையை உணராமலே உள்ளனர். இதன் பலனே பல்வேறு பிழைப்பு வாத தலித் இயக்கங்களின் தோற்றமாகும்.

இ.க.க. (மா-லெ) மக்கள் யுத்தக் கட்சியின் தமிழ் மாநில செயலாளராக இருந்த தோழர் துரை சிங்கவேல் மக்கள் யுத்தக் கட்சியில் ஏற்பட்ட அரசியல் முரண்பாட்டால் அக்கட்சியிலிருந்து விலகி இந்திய துணைக்கண்டத்தை, தமிழ்ச் சமூகத்தை மார்க்சிய-லெனினிய-மாவோவிய அடிப்படையில் பகுப்பாய்வு செய்தார். இது "நமது பொது திட்டம் (வரைவு)" என்ற தலைப்பில் "புதிய போராளி" இதழில் வெளிவந்தது. மேலும் "சுருக்கமான தமிழக வரலாறு" என்னும் குறு வெளியீட்டில் இருந்த இந்திய துணைக்கண்டம்

மற்றும் தமிழ்ச் சமூகம் குறித்த மார்க்சிய அடிப் படையிலான ஆய்வு நாம் கவனிக்க வேண்டிய ஒன்றாகும். சாதி குறித்த தோழர் துரை சிங்க வேலின் முன்வைப்புகள், தோழர் கேசவன் முன்வைப்பிற்கு பிறகு மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். மேலும் தோழர் கேசவன் சாதி ஒழிப்பிற்கு முன்வைத்த திட்டங்களுக்கு நடைமுறைரீதியாக அமைப்பு வடிவங்களை தோழர் துரைசிங்கவேல் முன்வைத்துள்ளார்.

**தமிழ்த்தேசிய இயக்கங்களின், ஆர்வலர்களின் கவனத்திற்கு**

தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட் டத்தை ஒட்டியும் முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையை கண்டித்தும் அதை யொட்டி வெளிவந்த பாலச்சந்திரன் படுகொலைக் கெதிராகவும் காவிரி நதிநீர் உரிமைக்காகவும் முல்லைப்பெரியாறு சிக்கலை ஒட்டியும் பேரறிவாளன் உள்ளிட்ட மூவர் விடுதலைக் காகவும்... நடந்த பல்வேறு போராட்டங்களின் ஊடாகவும் ஜல்லிக்கட்டு, அனிதா படுகொலைக்கு காரணமான நீட்தேர்வுக்கு எதிராக நடந்த தமிழகம் தழுவிய கிளர்ச்சியை தொடர்ந்தும் தமிழ்த் தேசிய உணர்வானது தமிழக இளை ஞர்கள், மாணவர்கள் மத்தியில் முன்னுக்கு வருகின்றது.

இதன்போக்கில் பல்வேறு தமிழ்த் தேசிய இயக்கங்கள் தோன்றியுள்ளன. இவ்வியக்கங் களுக்கு தலைமையேற்கும் சக்திகள் பெரும் பாலும் குட்டி முதலாளிய சக்திகளாகவும் இடை நிலை ஆதிக்க சாதி பின்னணி கொண்டவர் களாகவுமே உள்ளனர்.

தமிழக மக்களின் முக்கியச் சிக்கலாக உள்ள சாதி குறித்த சிக்கலில் இவர்கள் அக்கறையற்றவர் களாகவே உள்ளனர். உதட்டளவில் சாதி ஒழிப்பு பேசினாலும் சிந்தனையளவில் தங்கள் சொந்த சாதி அடையாளத்தை பிரதிபலிப்பவர்களாகவே உள்ளனர்.

“தமிழகத்தை தமிழன்தான் ஆளவேண்டும்” என்று இனவாதம் பேசும் சீமான் ஒருபக்கம் தேவர் ஜெயந்தி விழாவிற்குச் சென்று முத்து ராமலிங்க தேவர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்துகிறார். மறுபக்கம் இமானுவேல் சேகர னுடைய நினைவு நாளில் அவருக்கு அஞ்சலி செலுத்துகிறார்.

ஆதிக்க சாதிவெறி கொலைகாரரையும் ஒடுக்கப்பட்ட சாதி மக்களின் உரிமைக்கு போராடியதால் கொலை செய்யப்பட்ட வரையும் ஒரே மாதிரி அணுகும் “மாபெரும்” தன்மான தமிழன் சீமான், தருமபுரி இளவரசனை படுகொலை செய்து தலித் கிராமங்களை தீக் கிரையாக்கிய வன்னியர் சங்க நிறுவனர் ராம தாசை தமிழன் என்பதால் முதல்வராக சொல்வாரா?

தமிழகத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் தமிழராக அடையாளப்படுத்தப்படுவதில்லை. சாதியாகவும் இந்தியராகவுமே அடையாளப் படுத்தப்படுகின்றனர். தமிழன் இன்னொரு தமிழனை மணம் முடிப்பதில்லை. சாதிய அடிப் படையிலேயே திருமணங்கள் நடக்கின்றன. ஆதிக்க சாதிவெறி சக்திகள் ஒடுக்கப்பட்ட சாதி (தலித்) மக்களை கொடூரமான சாதிய ஒடுக்கு முறைக்கு உள்ளாக்குகின்றனர். தமிழர்கள் என்று அனைவரும் ஒரே இடத்தில் குடியிருப்ப தில்லை. ஊர்த்தெரு, சேரித் தெரு என்றுதான் பிரிந்திருக்கிறது. ஏன்? மரணமடைந்து சுடு காட்டிற்குப் போனால் கூட பிணத்தின் மீதும் சாதி அடையாளம். சாதி சுடுகாடுதான் தமிழ கத்தில் உள்ளது. அரசியல், தொழில், உறவு... என்று எங்கும் சாதி நீக்கமற நிறைந்திருக்கிறது.

இடதுசாரிகளில் பலர் நேரடி வர்க்க வடிவத்தில் வெளிப்படும் “வர்க்க”ச் சிக்கலை தீர்த்தாலே அனைத்துச் சிக்கலும் தீர்ந்துவிடும் என்று வர்க்கச் சிக்கலின் வேறு வடிவிலான சாதியச் சிக்கலை, மீனவர் சிக்கலை, மதச் சிறுபான்மையினர் சிக்கலை, பழங்குடிகள் சிக்கலை, பெண்கள் சிக்கலை, தமிழ்த் தேசிய சிக்கலை... என்று இச்சமூகத்தில் புறவயத்தில் இருக்கும் சிக்கல் களை குறித்த ஆய்வுகளையும் தீர்வுகளையும் முன்வைத்துப் போராட வேண்டியதன் அவசி யத்தை உணர மறுக்கின்றனர். அதேபோல் இனவாதிகள் “தமிழன்” என்று சொன்னாலே “தமிழ்த் தேசிய சிக்கலை” முன்கொண்டு சென்றாலே அனைத்துச் சிக்கல்களும் தீர்ந்து விடும் என்று இனவாதத்தில் மூழ்கியுள்ளனர்.

**பெரியாரிய இயக்கங்களின் கவனத்திற்கு**

“நாம் சாதி வித்தியாசத்தை ஒழிக்க முற்படு கையில் மதமென்பதும் ஒழிந்து போகுமே யென்றால் அந்த மதம் நமக்கு வேண்டாம்; அது இப்போதே அழிந்து போகட்டும். மதத்தை பொசுக்கும்போது வேதமும் பொசுங்கிப்

போவதாயிருந்தால் அந்த வேதம் என்பதும் இப்போதே வெந்துபோகட்டும். வேதத்தை ஓதும்போது கடவுளும் ஓடிவிடுவாரென்றால் அந்த கடவுள் என்பதும் இந்த நிமிடத்திலேயே ஓடி விடட்டும்; அப்பேற்பட்ட கடவுள் நமக்கு வேண்டவே வேண்டாம்.'' "தந்தை பெரியார் இன்றும் - என்றும்'' (பக்-177) சாதி குறித்த பார்வையில் அம்பேத்கரிடம் உள்ள சிக்கலே தந்தை பெரியாரிடமும் உள்ளது.

தமிழகமும் இந்தியத் துணைக்கண்டமும் அதற்கேயுரிய சமூகக் கட்டங்களை கடந்து வந்துள்ளது. வட இந்தியாவில் முதலில் வர்க்கச் சமூகமாக "சூத்திர நிலவுடமை சமூகம்'' (வர்ண சமூகம்) உருவானது, பின் "சாதி நிலவுடமை சமூகம்'' கட்டமைக்கப்பட்டது.

தமிழகத்தில் வர்ணச் சமூகத்தின் தாக்கம் இருந்ததே ஒழிய வர்ண சமூகம் கட்டமைக்கப் படவில்லை. பல்லவர் காலத்தில் சாதிய நிலவுடைமைச் சமூகம் தமிழகத்தில் கட்டமைக்கப் பட்டது. சாதிய நிலவுடைமைச் சமூகத்தின் கருத்தியலான பார்ப்பனியம். "இந்துமதம்'' பிரிட்டிஷ் வருகைக்கு பின்பே உருவாகிறது. குறிப்பாக "முதலாளிய வர்க்க உருவாக்கம்'' இந்துமதம் உருவாவதற்கான அடிப்படையாகும்.

அம்பேத்கரை போலவே பெரியாரும் சாதியத்திற்கான அடிப்படையாக "பார்ப்பனியம்'' மற்றும் "இந்துமதத்தை'' பார்க்கிறார். தந்தை பெரியாரின் வார்த்தையிலேயே சொன்னால்,

"சாதிக்கு அடிப்படையாகயிருப்பது எது? 'இந்துமதம்'. அதை ஆதரித்து நிற்பவைகள் எவை? வேதம், இதிகாசம், சாஸ்திரம், புராணம் முதலிய கட்டுக்கதைகள். இவைகளுக்கு அடிப்படையாக உள்ளவைகள் எவை? இந்து மத கடவுள்கள் என்று கூறப்படும் முழுக் கற்பனைகள்'' (மேலது ப.182)

சாதி ஒழிப்பு குறித்து பேசும் போதெல்லாம் மேற்கூறிய கருத்தையே தந்தை பெரியார் தொடர்ந்து வலியுறுத்துகிறார்.

இதனாலேயே தந்தை பெரியாரின் முழுக் கவனமும் "இந்துமத எதிர்ப்பு'', "பார்ப்பனிய எதிர்ப்பு'', 'கடவுள் மறுப்பு' என்பதிலேயே குவிக்கப்பட்டிருந்தது.

திராவிடர் கழகம் தொடக்கத்திலிருந்தே பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதவர் அணுகுமுறையை கொண்டிருந்தது. பார்ப்பனரின் முதன்மை ஆதிக்கத்தை ஒழித்து அவ்விடத்தில் ஆளும் வர்க்கங்களாக, இடைநிலை ஆளும் வர்க்கங்களாக இருந்த ஆதிக்க சாதியில் உள்ள ஆதிக்க சக்திகளின் அதிகாரத்திற்கான போட்டியாக ஆரம்பத்திலிருந்தே தி.க. செயல்பட்டது.

தமிழகத்தில் சாதிச் சமூகம் உருவாக்கப் படுவதற்கு மூலகர்த்தாவாக இருந்த பார்ப்பனியத்தை வட இந்தியாவிலிருந்து தமிழகத்துக்கு கொண்டு வந்த வெள்ளாளர்களையே (சூத்திரர் என்று) சாதி ஒழிப்புக் களத்திற்கு அழைப்பது பெரியாரின் பார்வையில் உள்ள முக்கியச் சிக்கலாகும். இது வர்க்க சமரசம் மட்டுமல்ல; சாதியச் சமூகத்தை உருவாக்கி கட்டிக்காக்கும் ஆளும் வர்க்கங்களை (சாதிய நிலக்கிழார்களை) மக்களுக்கு அடையாளம் காட்டுவதில் உள்ள சிக்கலும் ஆகும். பார்ப்பனரை கூட்டுச் சேர்த்து தமிழகத்தில் சாதி சமூகத்தை கட்டியமைத்த வெள்ளாளர் சாதியை சூத்திரர் என்று பார்ப்பனிய எதிர்ப்பிற்கு அறைகூவி அழைப்பது சாதி ஒழிப்புக் களத்தில் எதிரியை மக்களுள் அடையாளம் காட்டத் தவறுவதாகும்.

"தொண்டை மண்டல வேளாளர்-தாங்கள் சூத்திரர்கள் அல்லவென்றும் தங்களுக்கும் வருணாசிரமத்திற்கும் சம்பந்தமில்லையென்றும் வெகுகாலமாகவே கூப்பாடு போட்டிருக்கிறார்கள் மற்றும் பலர் தங்களை சூத்திரர்கள் அல்லவென்றும் 'சத்சூத்திரர்கள்' என்றும் 'பட்டுக் குஞ்சம் கட்டிக் கொள்வது போல்' சொல்லிப் பார்த்திருக்கிறார்கள். என்ன செய்தும் அதை மாற்ற முடியாமல் போய்விட்டது. அப்படியிருக்க அய்யோ பாவம்! உலக வாழ்க்கையில் எவ்வளவோ கீழான நிலையில் வைக்கப்பட்டு எவ்வித ஆதரவும் சவுகரியமும் இல்லாத நீங்கள் பறைத் தன்மையை ஒழித்து விடுவதோ மறைத்துவிடுவதோ என்றால், அதுவும் மதசம்பந்தமான வைதீக வேசத்தை போட்டுக் கொண்டு ஒழித்து விடுவது என்றால் அது சமுத்திரத்தை சிட்டுக்குருவி வற்றடிக்க முயற்சித்தது போலதான் ஆகுமே ஒழிய வேறில்லை.'' (மேலது, பக்கம். 173-174)

சாதியச் சமூகம் இறுகிப்போயிருந்த கிராமப் பகுதிகளில் சாதிய ஆதிக்கத்தை செய்பவர்களாகவும் சாதியச் சமூகத்தை கட்டிக் காப்பவர்களாகவும் இருந்த ஆதிக்க சாதி பண்ணையார்களை "சூத்திரர்'' என்று சாதி ஒழிப்பு போராட்டக் களத்திற்கு அழைப்பது, பார்ப்பனிய எதிர்ப்பிற்கு

அழைப்பது, சாதியை கட்டிக் காத்த ஆதிக்க சாதி பண்ணையார்களுக்கு சேவை செய்வதாகவே அமைந்தது. ஆதிக்க சாதிகளில் உள்ள வர்க்க வேறுபாட்டை வரையறுத்து அச்சாதிகளில் உள்ள உழைக்கும் மக்களை சாதி ஒழிப்பு போராட்டத்தில் ஐக்கியப்படுத்த வேண்டும் என்ற தெளிவை புறக்கணிப்பதாகவே அமைந்தது.

இது சாதி சமூகத்தினால் பலனடையும், சாதி சமூகத்தை கட்டிக்காக்கும் ஆளும் வர்க்கத்திற்கு (ஆதிக்க சாதியில் உள்ள சாதி நிலக்கிழார்களுக்கு, ஆதிக்க சக்திகளுக்கு) துணை போகவே உதவியது.

சாதியச் சிக்கலில் தந்தை பெரியாரின் முக்கியப் பங்களிப்பாக நாம் பார்ப்பது சாதி சமூகத்தைக் கட்டிக்காக்கும் கருத்தியலான "பார்ப்பனியம்", "இந்து மதம்" - "இந்து மதக் கடவுள் எதிர்ப்பே" ஆகும். இதில் தந்தை பெரியார் இறுதிவரை உறுதியாக நின்று போராடியதோடு தனது கருத்துக்களை மக்கள் மயப்படுத்துவதில் முழுமையாக இல்லையென்றாலும் பகுதியளவில் சாத்தியமாக்கியதே பெரியாரின் பங்களிப்பாகும்.

தந்தை பெரியாரின் வழிவந்த பெரியார் இயக்கங்களும் மேற்கூறிய மூன்று அம்சங்களிலேயே அதிக கவனம் செலுத்துகின்றன.

சாதியம் தோன்றியதிலிருந்தே சாதிய நிலவுடமை சமூகமாகவும் இச்சமூகத்தைக் கட்டிக் காக்கும் கருத்தியலாக பார்ப்பனியமும் இச்சமூகத்தை கட்டிக்காக்கும் மதங்களாக சைவ, வைணவ மதங்களும் இச்சமூகத்தைக் கட்டிக்காக்கும் அரசியல் அதிகாரமாக தமிழகத்தில் பல்லவர், பிற்காலச் சோழர், பாண்டியர், நாயக்கர், பாளையக்காரர் ஆட்சியும் இசுலாமியர் ஆட்சியும் (ஆற்காடு நவாப்) இருந்தன. அதன் பின் பிரிட்டிஷ் அரசிடமிருந்து இன்று அதிகாரத்தை தன் கைவசம் வைத்துள்ள இந்திய பெருமுதலாளிய அரசும் உள்ளது. இது குறித்து விரிவான கருத்துக்கள் "தலித் இயக்கங்களின் கவனத்திற்கு" என்ற தலைப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது.

தந்தை பெரியாருக்குப் பின் கி. வீரமணி தந்தை பெரியாரின் பண்பாட்டுத் தளத்திலான வீரியமிக்க செயல்பாட்டை கைவிட்டு தந்தை பெரியாரால் சேர்க்கப்பட்ட அமைப்புச் சொத்தை அனுபவிப்பதிலேயே கவனம் செலுத்தி வருகிறார்.

கி. வீரமணியின் துரோகத்தை எதிர்த்து தி.க.விலிருந்து விலகி சென்றுள்ள தோழர் கொளத்தூர் மணியின் தலைமையிலான திராவிடர் விடுதலைக் கழகம் சாதியத்தின் பால் எழும் பல்வேறு சிக்கல்களில் ஒப்பீட்டளவிலான ஊக்கத்துடன் தலையீடு செய்து வருவது வரவேற்கத்தக்கதாகும்.

**தலித் இயக்கங்களின் கவனத்திற்கு**

"இழந்த உரிமைகளை மீண்டும் பெறுதலுக்கான ஓர் உக்கிரமான போராட்டத்தில் ஈடுபட வேண்டுமேயொழிய பிச்சை கேட்பதன் மூலமோ கொடுமையாளர்களின் மனசாட்சிக்கு வேண்டுகோள் விடுப்பதன் மூலமோ பெற இயலாது."

- அண்ணல் அம்பேத்கர்

நமது தமிழகத்தில் இயங்குகின்ற பெரும்பாலான தலித் இயக்கங்கள் குறிப்பிட்ட சாதியை அடையாளப்படுத்தும் இயக்கங்களாகவே உள்ளன. தலித் என்பது "ஒடுக்கப்பட்ட சாதிகளை" குறிப்பிடும் பொது அடையாளமாக இருக்கின்றது. ஆனால் எந்த தலித் இயக்கமும் ஒடுக்கப்பட்ட சாதிகளை ஒருங்கிணைக்கும் பணியில் குறைந்தபட்ச வெற்றியைக் கூட ஈட்டாத நிலையிலேயே உள்ளது.

அம்பேத்கரிஸ்டுகள் என்று கூறிக்கொள்ளும் இவர்கள் அம்பேத்கரின் சாதி குறித்த திறனாய்வுகளை அவர் முன்வைத்துள்ள தீர்வுகள் குறித்து படித்தறிந்து அம்பேத்கரின் கருத்துக்களை சாதி ஒழிப்பு போராட்டக் களத்தில் பிரயோகிப்பதற்கு பதில் அம்பேத்கரை வழிபாட்டுக்குரியவராக அம்பேத்கரின் கருத்தியலை குழித் தோண்டி புதைத்துள்ளனர். அம்பேத்கர் மீதான கண்மூடித்தனமான பக்தியை வளர்க்கின்றனர். தலித் மக்கள் அம்பேத்கர் மீது வைத்துள்ள அளவு கடந்த பாசத்தை தங்கள் பிழைப்புவாத அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

அம்பேத்கர் தலித் மக்களின் இதயங்களில் ஒப்பற்றத் தலைவராக, ஏன் கடவுளாகவே குடிகொண்டிருக்கிறார் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

இத்தகைய பெருமையானது அம்பேத்கர் சாதி ஒழிப்பிற்காகவும் ஒடுக்கப்பட்ட சாதி மக்களுக்காகவும் தன் வாழ்வையே அர்ப்பணித்தவர் எனவும் இந்திய துணைக்கண்டத்தில் உள்ள சாதிய இழிவை இவ்வுலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டிய மாபெரும் தலைவர் எனவும் தன் வாழ்நாள் முழுவதும் ஒடுக்கப்பட்ட சாதி மக்களை அச்சாதி ஒடுக்குமுறையிலிருந்து

மீட்பதற்கான வழியை அறிவுப்பூர்வமாக தேடியவர் எனவும் சாதி குறித்த ஆய்வோடு நிற்காமல் ஒடுக்கப்பட்ட சாதி மக்களின் மீதான சாதிய ஒடுக்குமுறைக்கெதிராக தொடர்ந்து போராடியவர் எனவும் அம்மக்கள் கருதுவதால் கிடைத்த ஒன்றாகும்.

தலித் மக்களும் இயக்கங்களும் அறிவு ஜீவுகளும் அம்பேத்கரை விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவராகவும் சிலர் கடவுளாக அவரை அடையாளப்படுத்துவதும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

அண்ணல் அம்பேத்கர் சாதி குறித்தும் சாதி ஒழிப்பு குறித்தும் முன்வைத்துள்ள கருத்துக்களை மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய தேவை இன்றைய சூழலில் உள்ளது.

இந்நிலையில் சாதி ஒழிப்புக் களத்தில் உள்ள தலித் இயக்கங்கள், தலித் அறிவுஜீவிகள் கோட்பாட்டுரீதியான சிக்கல்களை களைவதற்காக தம்மை சுய பரிசீலனைக்கு உள்ளடக்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

**தலித் இயக்கங்கள்-அம்பேத்கரிஸ்ட்களிடம் உள்ள சாதி ஒழிப்பு குறித்த பார்வைச் சிக்கல்கள்**

"ஒரு தீமை அழிக்கப்பட வேண்டுமெனில் தீமையின் வேரை கண்டறிந்து அதை முற்றாக களைந்து எறிய வேண்டும்."

- அண்ணல் அம்பேத்கர்

சாதியம் இச்சமூகத்தின் தீமையாகும். எனவே சாதியம் அழிக்கப்பட வேண்டுமெனில் சாதியத்தின் வேரை கண்டறிந்து அதை முற்றாக களைந்து எறிய வேண்டும்.

பார்ப்பனியம், இந்துமதம் குறித்த ஆய்வை ஆழமாக முன்வைத்துள்ள அம்பேத்கர் சாதியம் குறித்த ஆய்விலும் தீர்விலும் முன்வைத்துள்ள கருத்துகளில் உள்ள சிக்கல்களை காண்போம்!

**அ. சாதியம்**

சாதியம் என்பது ஒரு சமூக அமைப்பு. தமிழகத்தில் வெள்ளாளர் மற்றும் பார்ப்பனர்களால் பல்லவர் ஆட்சிக் காலத்தில் சாதிய சமூக அமைப்பு கட்டமைக்கப்பட்டது. இந்திய துணைக்கண்டத்தில் நிலவுடமைச் சமூகமானது சூத்திர நிலவுடமை மற்றும் சாதிய நிலவுடமைச் சமூகமாக கட்டமைக் கப்பட்டது. தமிழகத்திலோ சாதிய நிலவுடமைச் சமூகமாக மட்டுமே கட்டமைக்கப்பட்டது. தமிழகத்தில் வெள்ளாளர், பார்ப்பனர் சாதியினர் நிலவுடமையாளர்களாக இருந்தனர். தலித் மக்கள் சாதிய அடிமைகளாக்கப் பட்டிருந்தனர். எத்தகைய உழைப்பின் பலனும் கிட்டாமல் மனிதத் தன்மையற்ற மிக கொடூர மான உழைப்புச் சுரண் டலுக்கு உள்ளாக்கப் பட்டிருந்தனர். மட்டுமல்லாமல் கல்வி மறுக்கப் பட்ட சமூகமாக, சொத்துரிமை கருவி, (ஆயுதம்) ஏந்தும் உரிமை மறுக்கப்பட்டவர்களாக மனிதனை மனிதனாக மதிக்காத தீண்டாமைக்குள்ளான வர்களாக இருந்தனர். பெண்களுக்கும் சொத்துரிமை, கல்வி உரிமை ஆகியன மறுக்கப்பட்டு குடும்ப அமைப்பிற்குள் முழு அடிமைகளாக்கப் பட்டனர்.

சாதிய நிலவுடமைச் சமூகத்தை, வெள்ளாளர் மற்றும் பார்ப்பனர்-சாதிய நிலவுடமையாளர் களின் சுரண்டலை கட்டிக் காக்கும் கருத்தியலாக 'பார்ப்பனியம்' இருந்தது.

இச்சாதிய நிலவுடமைச் சமூகத்தை கட்டிக் காக்கும் அதிகார அமைப்பாக பல்லவப் பேரரசு, அதன்பின் வந்த சோழப் பேரரசு, விஜய நகரப் பேரரசு, இசுலாமிய ஆட்சி மற்றும் பாளையக் காரர் ஆட்சி இருந்தன.

சாதியமானது பொருளாதாரம் (சமூக உற்பத்தி), அரசியல், பண்பாடு என்று மூன்று தளங்களிலும் வினையாற்றியது. அம்பேத்கர் சாதியத்தை 'பார்ப்பனியம்' என்ற கருத்தியல் தளத்தில் மட்டும் சுருக்கிப் பார்த்தார். இதுவே அவரை "இந்துமதம் இருக்கும் வரை சாதியம் இருக்கும்" என்று ஒற்றை பரிமாணத்தில் பார்க்க வைத்தது. எனவே இதற்கு மாற்றாக புத்த மதத்தை முன்வைத்தார்.

"பார்ப்பனர்கள் இல்லையெனில் இந்து சமயம் இல்லையென்றும் இந்து சமயம் இல்லையெனில் சாதியம் இல்லையென்றும் அம்பேத்கர் முடிவிற்கு வருகிறார்." (கோ. கேசவன், அம்பேத்கரும் சாதி ஒழிப்பும் - பக்கம்.23)

**ஆ. புத்தமதம் குறித்த சிக்கல்**

"மதத்தை வைத்துக் கொண்டு சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று புறப்பட்ட ஒருவர் கூட இதுவரையில் சிறிதளவும் வெற்றி பெற முடியாமலே போய்விட்டது!

- தந்தை பெரியார்.

இந்து மதத்தை ஒழிக்க புத்த மதத்தை முன்வைத்த அம்பேத்கர் இன்னும் ஒரு படி மேலே போய் 'புத்தமானது சாதியை மட்டு மல்லாமல் தனிவுடமையை ஒழிக்கும் வழிகாட்டி எனவும் சோசலிச சமூகத்தை கட்டியமைப்பதற் கான சிறந்த தத்துவம்' என்றும் முன்வைக்கின்றார்.

சமூக வளர்ச்சியை அறிவியல் அடிப்படையில் ஆய்ந்து முதலாளிய சமூகம் தனக்கேயுரிய தன்மையில் உற்பத்தியை சமூகமயமாக்கி உற்பத்தி காரணிகளை (மூலப்பொருள், இயந் திரம், பணம்... உள்ளிட்டவை) தனிவுடமையாக்கி வைத்துள்ளது. இம்முரண்பாட்டின் விளைவாக உற்பத்தி எப்படி சமூகமயமாகியுள்ளதோ அது போல் நாளை உற்பத்திச் சாதனங்களும் சமூக மயமாக்கப்படும் என்றும் இதுவே சோசலிச சமூகத்தின் அடிப்படை என்றும் மார்க்ஸ் முன் வைத்ததை புத்தரின் பார்வையோடு பண்டைய (புராதன பொதுவுடமைச் சமூகம்) பழங்குடி சமூகத்திலிருந்து தனியுடமை தோன்றும்போது பண்டைய பழங்குடி சமூகப் பார்வையிலிருந்து தனியுடமையை எதிர்த்த புத்தரின் பார்வையை... ஒப்பிட்டு அன்றைய தனியுடமை சமூக உருவாக்கச் சூழலில் புத்தர் முன்வைத்ததையும் இணைத்துப் பார்க்கும் அம்பேத்கரின் பார்வை சமூக வளர்ச்சி பற்றிய கோட்பாட்டில் அவரிடம் உள்ள சிக்கலையே வெளிப்படுத்துகிறது.

சாதிய அமைப்பினால் பலனடையும் சாதிய நிலவுடமையாளர்கள், இன்றைக்குள்ள இந்திய பெருமுதலாளிகள், ஏகாதிபத்திய முதலாளிகள் மற்றும் பார்ப்பனர்கள் மற்றும் ஏனைய ஆதிக்க சாதிகளிலுள்ள வளர்ந்த பிரிவினர் தங்கள் சுரண் டலை, அதிகாரத்தை எத்தகைய பலாத்காரத் தையும் பிரயோகிக்காமல் உபந்நியாசம் செய் வதன் மூலமே விட்டுக் கொடுப்பார்கள் என்ற கற்பனாவாதத்தை அம்பேத்கர் முன்வைத்துள்ளார்.

இதன் எதிர்வினையாக பலாத்காரத்தை பிரயோகிக்காமல் சுரண்டும் வர்க்கத்தின், ஆதிக்க சக்திகளின் சுரண்டலை, அதிகாரத்தை ஒழிக்க முடியாது என்ற மார்க்சியத்தை அம்பேத்கர் மறுதலித்தார்.

ஆதிக்கச் சாதிவெறியன் ராமதாசையே உபந் நியாசம் செய்து மாற்ற முடியாது. அப்படியிருக்க இச்சமூகத்தின் மொத்த பலனையும் அனுபவிக்கும் சாதியை, தனியுடமையை, சுரண்டலை கட்டிக் காக்கும் பெரும் கார்ப்பரேட் முதலாளிகள், ஏகாதிபத்திய முதலாளிகள், சாதிய நிலவுடமை யாளர்கள், அதிகாரவர்க்க முதலாளிகள், பார்ப் பனர்கள் தங்கள் சுரண்டலை அதிகாரத்தை அவர் களாகவே எப்படி விட்டுக் கொடுப்பார்கள்?

அம்பேத்கரின் புத்தமத மாற்றத்தை, புத்தரின் கோட்பாடுகளை, சரியாகச் சொன்னால், அம்பேத்கர் முன்வைத்த "புத்தரின் கோட்பாடு களை" கண்மூடித்தனமாக பின்பற்றும் அம்பேத் கரிஸ்டுகள் புத்தரின் சிலையை தன் வீட்டில் வைத்து வழிபட்டுக் கொண்டிருப்பதை தவிர, "சாதி ஒழிப்புக் களத்தில்" எந்த ஒரு குறிப்பிட்ட நகர்வையும் செய்யாதவர்களாகவே உள்ளனர். 'அன்பு', 'கொல்லாமை' ஆகியவற்றை முன் வைத்த புத்தமதம் தான் தோன்றிய காலத்தில் இருந்த தன் முற்போக்கு பாத்திரத்தை இழந்து, இன்று இலங்கையில், மியான்மரில் இனப்படு கொலைகளுக்கு துணைபோகும் கருத்தியல் கட்டமைப்பைக் கொண்டதாக மாறி "ரத்த பலி வாங்கிக் கொண்டிருக்கிறது."

"இழந்த உரிமைகளை மீண்டும் பெற ஓர் உக்கிரமான போராட்டத்தில் ஈடுபடவேண்டும்" என்று சொல்லும் அம்பேத்கர், "கொடுமையாளர் களின் மனசாட்சிக்கு வேண்டுகோள் விடுப்பதன் மூலம் உரிமையை பெற இயலாது" என்று சொல்லும் அம்பேத்கர், இன்னொருபுறம் சுரண்ட லாளர்களின், சாதிவெறியர்களின் மனசாட்சியை உபந்நியாசம் மூலம் மாற்றச் சொல்கிறார். அம்பேத்கரை முன்னிறுத்தும் தலித் இயக்கங் களே! சாதி ஒழிப்பு போராளிகளே! "உக்கிரமான போராட்டம்", "உபந்நியாசம்" இதில் எந்த வழியை தேர்ந்தெடுக்கப் போகிறீர்கள்?

**இ. இந்து மதம் - பார்ப்பனியம் குறித்த சிக்கல்**

"பிறவி வழி வேலைப்பிரிவினை, அகமண முறை, படிநிலை வரிசை, தீண்டாமை ஆகியன வற்றை சாதியத்தின் அம்சங்கள் என்பர்".

*(அம்பேத்கரும் சாதிய ஒழிப்பும், கோ. கேசவன், பக்கம். 60)*

"வேலைப் பிரிவினை, வர்ணக் கலப்பு, புதிய தாக போரில் இணைக்கப்படும் இனக்குழுக்கள் இவைகளே சாதிகளாக பகுக்கப்பட்டன.

இவைகளுக்கு வர்ண அடிப்படையில் படி நிலைத் தகுதி பிராமணர்களால் வழங்கப்பட்டன. சாதி நிலவுடமை முறையிலேயே நிலக்கிழாரியம்

உருவானது. சாதி நிலக்கிழார் களே இடைநிலை ஆளும் வர்க்கங்களாக இருந்தனர்.

*(புதிய போராளி- சிறப்பிதழ்:1 பக்.10)*

தோழர். துரைசிங்கவேல்

சாதியம்- ஒரு சமூக அமைப்பு. அதாவது சாதி நிலவுடமையாகும். இது சமூக உற்பத்தி, அரசதிகாரம், பண்பாடு என்ற மூன்று தளங்களிலும் உள்ளது. எனவே சாதி ஒழிப்புப் போராட்டத்தை இம்மூன்று தளங்களிலும் நாம் முன்னெடுக்க வேண்டும். ஆனால் அம்பேத்கர் இந்துமத- பார்ப்பனிய எதிர்ப்பில் மட்டுமே சாதிய எதிர்ப்பை குவிமையப்படுத்துகிறார் (அ) சுருக்குகிறார். பார்ப்பனிய எதிர்ப்பில் அம்பேத்கர் சமரசம் அற்ற போராட்டத்தை முன்னெடுத்த அதே வேளை நவீன பார்ப்பனிய கருத்தியலான இந்தியா-இந்தி-இந்து என்ற கூறுகளுக்கு துணை போகின்றார். இதை புரிந்து கொள்ள பார்ப்பனியம் குறித்த வரலாற்றை சுருக்கமாக முன்வைக்கின்றேன்.

## பார்ப்பனியம் - சுருக்கமான வரலாறு

### அ. பண்டைய பார்ப்பனியம்

மௌரிய பேரரசின் கடைசி மன்னனை வீழ்த்தி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிய பிராமணன் புஷ்யமித்திர சுங்கன், ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த பிறகு பௌத்தத்தை முற்றாக அழித்ததோடு, வர்ணத்தை பரம்பரையாக்கினான். பார்ப்பனர்களின் அதிகாரத்தை, சுரண்டலை உறுதிப்படுத்தினான். பார்ப்பன, சத்திரியர், வைசியர் வர்ணத்தார் சுரண்டும் வர்க்கமாகவும் சூத்திர வர்ணம் எத்தகைய உரிமையும் அற்ற சுரண்டப்படும் வர்க்கமாகவும் மாற்றப்பட்டது. பெண்களும் இரண்டாம்தர பிரஜைகள் ஆக்கப்பட்டனர். வைசியர் சுரண்டுபவராகவும் சுரண்டப்படுபவராகவும் இருந்தனர். வர்ணச் சமூக அமைப்பை முறைப்படுத்தவும் நியாயப்படுத்துவதற்குமான கருத்தியலாக 'மனுதர்மம்' என்ற நூல் படைக்கப்பட்டது. இந்நூல் கி.மு.170-க்கும் கி.மு 150-க்கும் இடைப்பட்ட காலத்தில் இயற்றியிருக்க வேண்டும் என்று அம்பேத்கர் முன்வைக்கின்றார்.

சூத்திரர் மீதான சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட நிலவுடமை சமூகத்தை (வர்ணச் சமூகத்தை) கட்டிக்காக்கும் கருத்தியலாக மனுதர்மம் விளங்கியது. 'மனுதர்மமே!' பண்டைய பார்ப்பனியம் ஆகும்.

### ஆ. இடைக்கால பார்ப்பனியம்

மௌரியர்களுக்குப் பிறகான குஷான மற்றும் சாதவாகனர்களின் அரசுகள் வீழ்ச்சியடைந்தன. ரோம் உடனான வணிகம் தடைபட்டதானது கடும் சமூக நெருக்கடியை கொண்டு வந்தது. நகரங்கள் வீழ்ச்சியடைந்தன, கைவினைஞர்கள் கிராமங்களை நோக்கித் திரும்பினர். மேலும் சூத்திரர்களின் கலகங்கள், வர்ணக் கலப்புகள் போன்றவை ஏற்பட்டன.

குப்தப் பேரரசு (கி.பி. 335-455) உருவான பிறகே மேற்கூறிய சிக்கல்கள் தீர்க்கப்பட்டு வர்ணச் சமூகம் வீழ்ச்சியுற்று சாதிய நிலவுடமை சமூகம் கட்டமைக்கப்பட்டது. சாதிய நிலவுடமை சமூகத்தின் கருத்தியலாகவும் மனுதர்மமே நீடிக்கிறது.

தமிழகத்திலோ வர்ணப் பிரிவினையானது ஒரு சமூகமாக கட்டமைக்கப்படவில்லை, வர்ண சமூகத்தின் தாக்கமே இருந்தது. வணிக வீழ்ச்சிக்கு பிறகான சமூக நெருக்கடியை ஒட்டி உருவான கலப்பிரர் ஆட்சியானது இந்நெருக்கடியை தீர்த்து அடுத்த கட்ட சமூக வளர்ச்சியை நோக்கி நகராமலே இருந்தது. தமிழகத்தில் பெரும் வேளாண் குடிகளான வெள்ளாளர்கள் சாதி நிலக்கிழாரிய சமூகத்தை கட்டியமைக்க பார்ப்பனர்களை வட இந்தியாவிலிருந்து தமிழகத்திற்கு அழைத்து வந்து சாதி நிலவுடமை சமூகத்தை கட்டியமைத்தனர்.

"சோழர் ஆட்சிக்காலம் மனுவின் அடிப்படையில் நடைபெற்றது" என்று சோழ அரசே அறிவித்துக் கொள்கிறது. சோழர் காலம் சாதியச் சமூகம் நிலை நிறுத்தப்பட்ட காலமாகும். தலித்துகள் சாதி அடிமைகளாக்கப்பட்டு மிகக் கொடூரமான சுரண்டலுக்கும் சமூக (சாதிய) ஒடுக்குமுறைக்கும் உள்ளாக்கப்பட்டனர். தமிழகத்தில் வெள்ளாளர், பிராமணர் சாதிகளே ஆளும் சாதிகளாக, சாதிய நிலக்கிழார்களாக இருந்தனர்.

சாதியச் சமூகத்தை கட்டிக் காக்கும் பார்ப்பனியமே இடைக்கால பார்ப்பனியமாகும். பார்ப்பனியத்தின் மூன்று முக்கிய கூறுகளாக சாதி, பெண்ணடிமை, மூடநம்பிக்கை இருந்தது.

### இ. நவீன பார்ப்பனியம்

பிரிட்டிஷ் வருகைக்குப் பின் சாதிய நிலவுடமையாளர்கள் பணப்பயிரிடுதல் மூலம் முதலாளிய சந்தையோடு விவசாயத்தை இணைக்கின்றனர்.

சில தொழில்களில் மில் முதலாளிகளாக, முதலீடு செய்து "மூலதன சாதி நிலவுடமையாளர் களாகின்றனர்." பிரிட்டிஷ் அரசு தனது சுரண் டலுக்கு, தேவைக்கேற்ப சாதிய நிலவுடமையில் மாற்றத்தைக் கொண்டு வருகிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்த பெரும் வணிகர்கள் படிப் படியாக தங்கள் வணிக மூலதனத்தை தொழில் துறையில் இடுகின்றனர். மேலும் இயல்பாக வளர்ந்து வந்த கைத்தறி வளர்ச்சியானது அரசால் அழிக்கப்படுகிறது. படிப்படியாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனது அதிகாரத்தின் கீழ் இந்திய பிராந்தியத்தை கொண்டுவந்து அதை முழுக்க தனது சுரண்டல் மற்றும் சந்தைக்காக பயன்படுத்து கின்றது. இந்திய பிராந்திய சந்தையை, சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட இந்திய பிராந்திய முதலாளிகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் கூட்டு மற்றும் பேரம் என்ற வகையில் உறவை வைத்து வளர்கின்றனர். இந்திய பிராந்திய முதலாளி களின் கட்சியாக காங்கிரசு கட்சி இருந்தது.

1947- ஆகஸ்டு 15இல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் திடமிருந்த அரசியல் அதிகாரம் இந்திய பிராந்திய பெரு முதலாளிகளின் கைகளுக்கு மாறுகிறது. இந்திய பிராந்திய பெருமுதலாளிகள், மூலதன-சாதி- அரைநிலக்கிழார்களையும் ஏகாதிபத்திய முதலாளிகளையும் தங்களின் கூட்டாளி களாக்கிக் கொள்கின்றனர். இந்நிலையில் இந்திய பிராந்திய பெருமுதலாளிகள் தங்கள் சுரண்டல் மற்றும் சந்தைக்காக இந்திய பிராந் தியம் முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முனைகின்றனர். இதற்காக வளர்ந்து வரும் தேசிய இனங்களின் உரிமையை முற்றாக மறுத்து 'போலியான இந்திய தேசி யத்தை' கட்டியமைக்கும் வேலையைத் துவங் கினர். இல்லாத 'இந்திய தேசியத்தை' கட்டி யமைத்த இந்திய பெருமுதலாளி வர்க்கம், இல்லாத 'இந்திய மொழியை' இந்திய தேசி யத்தின் மொழியாக உருவாக்க முயற்சிக்கின்றது.

குலக்குழுக்களாக இருந்தபோது மக்களிடம் குலதெய்வ வழிபாடே இருந்தது. பிறகு குலக் குழுக்கள் (பழங்குடி சமூகம்) சாதிய நிலவுடமை யுடன் இணைக்கப்பட்டு, பேரரசுகள் கீழ் இணைக் கப்படும்பொழுது பெருங்கடவுளர்கள் உருவாக் கப்பட்டு சைவம்-வைணவம் என்ற பெரும் மதங்கள் உருவாகின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத் தியம் இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள மக்களை வகைப்படுத்தும் நோக்கில் கிறித்துவம், முஸ்லிம் அல்லாதவர்களை "இந்துக்கள்" என்று வகைப்படுத்துகிறது.

இல்லாத 'இந்திய தேசியத்தை', 'இந்தி மொழியை' உருவாக்கிய இந்திய பிராந்திய பெரு முதலாளிகள் இந்தியாவின் மதமாக இல்லாத "இந்து மதத்தை கட்டியமைக்கிறது." இது குல தெய்வங்கள், சைவ, வைணவ கடவுள்கள் அனைத் தையும் இணைப்பதற்கு ஒவ்வொரு கடவுளுக் கும் உறவை ஏற்படுத்தி அனைத்து கடவுள்களை யும் "இந்து கடவுள்கள்" என்று அடையாளப் படுத்துகிறது. இதோடு நிற்காமல் ராமன், சிவன், விநாயகர் போன்றவர்களை இந்தியத் துணைக் கண்டம் முழுக்க பிரபலமாக்கி இந்திய தேசி யத்தின் மதமாக இந்துமத கடவுள்களாக முன் நிறுத்த முயற்சித்து வருகின்றது.

இந்திய பெருமுதலாளிகள் தங்கள் சுரண்ட லுக்காக, சந்தைக்காக கட்டமைக்கப்பட்டுள்ள "இந்திய தேசம்", "இந்திய மொழி", "இந்து மதம்" இவற்றை மக்களிடம் கொண்டு செல்லவும் இக்கருத்தியலை மக்களின் கருத்தியலாக உருவாக்கவும் புதிய ஆளும் வர்க்கங்களான இந்திய பிராந்திய பெருமுதலாளிகள், மூலதன சாதி நிலக்கிழார்கள், ஏகாதிபத்திய முதலாளிகள் மற்றும் அதிகார வர்க்க முதலாளிகளின் சுரண் டலை கட்டிக்காக்கவும் பார்ப்பனர்களால் உருவாக்கப்பட்டுள்ள கருத்தியலே "இந்தியா" "இந்தி" "இந்து"-என்ற நவீன பிராமணியமாகும்.

ஏனெனில் அம்பேத்கர் பார்ப்பனியத்தை வரலாற்று பொருள்முதலியல் அடிப்படையில் காணத் தவறுகிறார். வர்ணச் சமூகத்தில் பண்டைய பார்ப்பனியம், சாதிய நிலக்கிழாரிய சமூகத்தில் இடைக்காலப் பார்ப்பனியம், இன்றைய முதலாளிய அரசு அதிகாரத்திற்கான, சுரண்டலுக் கான நவீனப் பார்ப்பனியம் என்று ஆளும் வர்க் கங்களின் மாற்றத்திற்கேற்ப (அ) சமூக மாற்றத்திற் கேற்ப பார்ப்பனர்களால் பார்ப்பனிய கருத்தியலும் மாற்றப்பட்டுக் கொண்டே வருகிறது என்பதை காணத் தவறுகிறார். மார்க்சியம்தான் ஒவ்வொரு சமூகத்தையும் முழுவதுமாக புரிந்து கொள்வதற் கான அறிவியல் கண்ணோட்டத்தை வழங்கியுள்ளது.

## பார்ப்பனிய-இந்துமத எதிர்ப்பில் தலித் இயக்கங்கள்

அண்ணல் அம்பேத்கர் இந்துமத எதிர்ப்பில் மிக உறுதியாக இருந்தார். பஞ்சாபில் நடந்த

மாநாட்டிற்கு வைத்த கட்டுரையில் இந்துமதம் குறித்த கருத்தினை திருத்தக் கோரியபோதும் அதை ஏற்க மறுத்து அம்மாநாட்டையே புறக் கணித்தார். இந்துமதமே சாதியத்திற்கு அடிப் படை என்று கூறினார். இந்துமதம் இருக்கும் வரை சாதியத்தை ஒழிக்க முடியாது என்றார். இந்து மதத்தை சாதி இந்துக்களின் மதம் என்றார். தலித் மக்களை இந்துமதம் மனிதனாகக் கூட மதிக்கவில்லை என்று முழங்கினார்.

இன்றைய தலித் தலைவர்களில் சிலர் "இந்து மதவெறியை", "இந்துமதவெறி பாசிசத்தை" அடித்தளமாகக் கொண்டு இயங்கும் பா.ஜ.க-வுடன் இணைந்து பிழைப்புவாத அரசியல் செய் கின்றனர். பீகாரில் ராம்விலாஸ் பஸ்வான் பா.ஜ.க-வுடன் கூட்டணி வைத்துள்ளார். தமிழகத்தில் இந்துமதவெறி கும்பலோடு சேர்ந்துள்ள கிருஷ்ணசாமி படுகேவலமாக இந்துத்துவா கருத்துக்களை பேசி வருகிறார். காஞ்சி சங்கராச்சாரியின் காலில் விழுந்து அரசியல் நடத்திய 'தடா' பெரியசாமி, தலித் இயக்கங்களை இணைத்து இந்து மதவெறி கட்சியின் தலைவன் அமித்ஷாவை-அழைத்து கூட்டம் நடத்த முயல் கிறார். பதவிக்காக இந்து மதவெறி கும்பலுடன் கரம் கோர்க்கும் இத்தகைய தலித் விரோதிகளை அம்பேத்கரின் இந்துமத எதிர்ப்பை முனை மழுங்க வைக்கும் அம்பேத்கர் விரோதிகளை தலித் மக்கள் உடனடியாக தூக்கியெறிய வேண்டும்.

தமிழகத்தில் இயங்கும் தலித் இயக்கங்களின் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் இந்துமத சடங்குகளில் கலந்து கொள்வதோடு இந்துமத கடவுள் ஐயப்பனுக்கு மாலைபோட்டு தன்னைத் தீவிர இந்துமத பற்றாளனாக காட்டிக்கொள் கின்றனர். அண்ணல் அம்பேத்கர் "நான் சாகும் போது இந்துவாக சாகமாட்டேன்" என அறிவித்து பல்லாயிரக்கணக்கான தலித் மக்களை அணி திரட்டி இந்துமதத்திற்கு அடி கொடுக்கும் வகையில் புத்த மதத்திற்கு மாறி கலகம் செய்தார். இதை உயர்த்திப் பிடிக்கும் அம்பேத்கரிஸ்டுகள் அத்தகைய பெரிய மக்கள் திரள் நடவடிக்கைக் காக எத்தகைய முயற்சியையும் எடுத்ததாகத் தெரிய வில்லை.

அம்பேத்கரிஸ்டுகள் என கூறிக்கொள்ளும் தலித் அமைப்புகள், அறிவு ஜீவிகள் அம்பேத்கர் நடத்திய பார்ப்பனிய - இந்துமத எதிர்ப்பு கலகங் களை, கருத்தியல் போராட்டங்களை எடுப்பதில் ஆர்வம் குன்றியவர்களாகவே உள்ளனர்.

தமிழகத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி யின் தலைவர் தொல். திருமாவளவன் இந்து மதவெறிக்கெதிராக அரசியலை மேற்கொள்வது வரவேற்கத்தக்கது என்றாலும் தனது அமைப்பை அரசியல்படுத்துவதில் தோல்வியைக் கண்டவ ராகவே உள்ளார். கீழ்மட்ட அணிகளை தயார் செய்வது சற்றுக் காலம் ஆகும் என்பதை நாம் ஏற்கலாம். ஆனால் மாவட்ட, ஒன்றிய பொறுப் பாளர்களே தீவிர இந்துமத பற்றாளர்களாக இருப்பதைக் கூட அவரால் மாற்றியமைக்க முடியவில்லை என்பது அவரது தலைமையின் பலவீனத்தையே வெளிப்படுத்துகிறது.

இத்தகைய சூழலானது இந்து மதவெறிக் கும்பலுக்கு மிகச் சாதகமாக உள்ளது. தங்களுடைய இந்துமதவெறி அரசியலுக்கு தலித் தலைவர் களையும் தலித் மக்களையும் மிக எளிதாக உள்வாங்குகின்றனர்.

தலித் மக்களை மனிதர்களாகக் கூட மதிக்காத பார்ப்பனியத்திற்கும் இந்துமதத்திற்கும் தலித் துகள் பலியாகி வருவதும் இந்துமதவெறி சக்தி களாக மாறிவிடுவதும் நாம் மிகவும் கவனத் துடன் கையாள வேண்டிய ஒன்றாகும்.

**அரசியல் அமைப்பு சாசனத்தின் மீதான பக்தி**

"என் கைகளை வைத்து எழுதிக் கொண் டார்கள்" ; "என் சமூக மக்களின் விடியலுக்கு அரசியல், அமைப்பு சாசனம் உதவவில்லை என்றால் அரசியல், அமைப்பு சாசனத்தை எரிக்கும் முதல் ஆள் நானாகத்தான் இருப்பேன்." (அண்ணல் அம்பேத்கர்)

பெரும்பாலான தலித் இயக்கங்கள் அம்பேத் கரை சாதி ஒழிப்புப் போராளியாக அடையாளப் படுத்துவதை விட அரசியல் அமைப்பு சாசன சிற்பியாக அடையாளப்படுத்துவதில் பெருமிதம் கொள்கின்றன. அம்பேத்கர் சிலையை நிறுவும் போதோ (அ) அம்பேத்கர் படத்தை பேனரில் போடும் போதோ அவர் கையில் அரசியல் அமைப்பு சாசன புத்தகத்தை வைத்திருப்பது போல் "இந்தி யாவிற்கே எங்கள் தலைவர்தான் அரசியல் அமைப்பு சாசனம் உருவாக்கிக் கொடுத்தார்" என்று மார் தட்டிக் கொள்கின்றன. இது சுருக்குக் கயிறு. தன் கழுத்தில் மாட்டிக் கொண்டு "சுருக்கு கயிறு எவ்வளவு அழகாக இருக்கிறது பார்" என்று ஏமாளியாக கூத்து ஆடுவது போல் உள்ளது.

இந்திய அரசும் அரசியல் அமைப்பு சாசனமும் இந்திய பெருமுதலாளிகளுக்கும் சாதி நிலக் கிழார்களுக்கும் ஏகபோக கார்ப்பரேட் முதலாளி களுக்கும் பார்ப்பனர்களுக்கும் ஆதிக்க சாதி வெறி சக்திகளுக்கும் இந்து மதத்திற்கும் பார்ப் பனியத்திற்கும் சேவகம் செய்கின்றது என்பதை உணராமலே உள்ளனர். நம்மைச் சுரண்டும் கூட்டம், நம்மை ஏமாற்றத்தான் நம்மில் ஒருவரை வைத்து அரசியல் அமைப்பு சாசனத்தை இயற்றியது. இதனாலேயே நாம் அரசியல் அமைப்பு சாசனம் நமக்கானது என்று கண் மூடித்தனமாக நம்புகிறோம்.

தோழர் லெனின் ''அரசு என்பது ஒரு வர்க் கத்தின் ஒடுக்குமுறைக் கருவி. எந்த வர்க்கம் அதிகாரத்தில் உள்ளதோ அந்த வர்க்கத்திற்கு அது சேவை செய்யும்'' என்று அரசு பற்றி வரை யறுத்துக் கூறியுள்ளார்.

இன்று அதிகாரத்தில் உள்ளது கார்ப்பரேட் முதலாளித்துவ வர்க்கம். அதற்குத்தான் இந்த அரசு சேவை செய்யும். இதை புரிந்துகொள்ளும் போதுதான் தலித் இயக்கங்கள் அ.அ. சாச னத்தைப் பற்றி புரிந்து கொள்ள முடியும்.

அம்பேத்கர் அரசியல் அமைப்பு சாசனத்தை இயற்றும்போது நமக்காக சில சீர்த்திருத்தச் சட்டங்களை அதாவது இட ஒதுக்கீடு, தனித் தொகுதி, சட்டத்தின் முன் அனைவரும் சமம், பெண்களுக்கு சொத்துரிமை... என்று போராடிப் பெற்றார். அச்சட்டங்களைக் கூட இந்த அரசு படிப்படியாக செல்லாததாக மாற்றி வருகிறது. அதை திரும்பப் பெற போராட வேண்டியச் சூழலில் உள்ள நாம் அதற்கான போராட்டங் களை முன்னெடுக்காமல் அ.அ. சாசனத்தைப் பூஜித்துக் கொண்டிருக்கிறோம்.

**சாதி சுருக்கல்வாதம்**

வர்ணச் சமூகத்தில் வர்க்கங்களே வர்ணங் களாக இருந்தன. ஆனால் சாதி முறையில் ஒவ்வொரு வர்க்கமும் பல சாதிகளாக பிளவு களுக்கு உள்ளாகின. நுண் பிளவு வர்க்கங்கள் அல்லது பிளவுள்ள வர்க்கங்களின் சமூகமாக சாதிய நிலவுடமைச் சமூகம் மாறியது. (புதிய போராளி. சிறப்பிதழ்-1, பக். 10, தோழர் துரைசிங்கவேல்)

பெரும்பாலான இடதுசாரிகள் அனைத் தையும் சுருக்கவாதப் பார்வையில் நேரடி வடிவிலான வர்க்க சிக்கலாக சுருக்கிப் பார்ப்பது போல், அம்பேத்கர் அனைத்துச் சிக்கல்களையும் சாதியச் சிக்கலாகவே சுருக்கிப் பார்க்கின்றார். இதனாலேயே பெரும்பாலான தலித் இயக்கங்கள் வர்க்கச் சிக்கலில் கவனம் செலுத்த மறுக்கின்றன. சாதிய சிக்கலையும் வர்க்கச் சிக்கலையும் எப்படி கையாள்வது, ஒன்றின் போராட்டத்தை மற்றொன்றின் போராட்டத்தோடு எப்படி இணைப்பது, சாதி, வர்க்கம் இவை இரண்டுக்கு மான உறவை மிகச் சரியாக புரிந்து கொள்வது என்பதை நாம் கற்றுணர்வதோடு நடைமுறை யிலும் இதை சாதிக்க வேண்டியுள்ளது.

**இடதுசாரி தலித் இயக்கத்தின் தேவை**

தமிழகத்தில் உள்ள பரந்துபட்ட மக்கள் மீது இரண்டு விதமான ஒடுக்குமுறை உள்ளது. ஒன்று வர்க்க ஒடுக்கு முறை, மற்றொன்று சமூக ஒடுக்கு முறை, வர்க்க ஒடுக்குமுறைக்கு உள்ளான வர்க்கங் களாக தொழிலாளர்கள், விவசாயிகள், குட்டி முதலாளிகள், தேசிய முதலாளிகள் உள்ளனர். சமூக ஒடுக்குமுறைக்கு உள்ளான மக்களாக பெண்கள், தலித்துகள், மீனவர்கள், மதச்சிறு பான்மையின மக்கள், பழங்குடிகள் உள்ளனர். புரட்சி என்பது மக்களை அனைத்துவிதமான ஒடுக்குமுறையிலிருந்து விடுவிப்பதற்கே ஆகும். புரட்சியின் தேவை அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் உள்ளது. புரட்சியை நடத்த விரும்பும் எந்த ஒரு கட்சியும் அனைத்து ஒடுக்கப் பட்ட மக்களையும் அணிதிரட்ட வேண்டும். அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களையும் அணி திரட்ட வேண்டுமென்றால், அவர்களின் ஒடுக்கு முறைக்கேற்ற அமைப்பு வடிவங்கள் தேவைப் படுகிறது.

சமூக ஒடுக்குமுறைக்கு உள்ளாகியுள்ள தலித் மக்களை அணிதிரட்ட தலித் அமைப்பு தேவைப் படுகின்றது. அதனடிப்படையிலேயே இடது சாரி அமைப்புகள் தலித் மக்களை அமைப்பாக அணிதிரட்ட வேண்டியுள்ளது.

இக்கருத்தை நாம் முன்வைக்கும் போது ஏன் மக்களை சாதியாக பிரிக்கிறீர்கள் என்கின்ற கருத்தை நம்முன் வைக்கின்றனர். இது வர்க்க ஒற்றுமையை சிதைக்கும் செயல் என்கின்றனர். நாம் அவர்களை பார்த்து பெண்கள் அமைப்பை கட்டுகிறீர்களே, இது ஆண்-பெண் ஒற்றுமையை, வர்க்க ஒற்றுமையை சிதைக்கும் செயலாகாதா, பழங்குடிகள் அமைப்பைக் கட்டும்போது

பழங்குடிகள்-பழங்குடி அல்லாதவர் என பிரிக்கும் செயலாகாதா- என கேட்டால் முழிக் கின்றனர்.

பெண்கள், பழங்குடிகள் ஆகியோரின் மீதான சமூகச் சுரண்டலை, ஒடுக்குமுறையை புரிந்து கொண்ட இவர்களால் தலித்துகள், மீனவர்கள், மதச்சிறுபான்மையினர் மீதான சமூக சுரண்டலை, ஒடுக்குமுறையை புரிந்து கொள்ள முடிய வில்லை என்பதுதான் உண்மை.

அனைத்து இடதுசாரி இயக்கங் களும் தலித் இயக்கங்களை தங்கள் இயக்கத் தலைமையின் கீழ் உடனடியாக கட்டி தலித் மக்களை சாதி யத்தின் அனைத்து ஒடுக்குமுறையிலிருந்தும் விடுதலையை அடைய வேண்டும்.

அதே போல அனைத்து தலித் இயக்கங்களும் அம்பேத்கரின் பார்ப்பனியம் - இந்துமதம் - குறித்த ஆழமான ஆய்வை, எதிர்ப்பை உள் வாங்கிக் கொள்வதோடு சாதியம் குறித்த ஆய்வையும் உள்வாங்கி அதை (இடதுசாரி சிந்தனையில்) மார்க்சிய அடிப்டையில் மறு பரிசீலனைக்கு உள்ளாக்கி சாதி ஒழிப்பிற்கான தெளிவான திட்டத்தை மார்க்சிய அடிப்படையில் முன்வைத்துப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இத்தகைய பணியை முழுமையாக இல்லா விட்டாலும் ஒப்பீட்டளவில் சில தலித் இயக்கங் கள் செய்ய முன்வந்துள்ளது மிகவும் வரவேற்கத் தக்க ஒன்றாகும். குஜராத்தில் மாட்டு அரசியலை ஒட்டி முன்வந்த தலித் இயக்கத்திற்கு தலைமை தாங்கும் ஜிக்னேஷ் மேவானி முன்வைக்கும் கருத்துகளை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டி யுள்ளது.

ஒரு பேட்டியில் ஜிக்னேஷ் மேவானி சொன்ன கருத்துகளில் சிலவற்றைக் கீழே அப்படியே தருகிறேன்.

⋆ ஒவ்வொரு தலித் குடும்பத்திற்கும் 5-ஏக்கர் நிலம் என்ற முழக்கம் முக்கிய முழக்கமாக முன் வைக்க வேண்டும்.

⋆ தலித் அரசியல்-அடையாள அரசியலில் முடங்கிக் கிடக்கிறது.

⋆ தற்போதைய சவால் சமூக நீதி மற்றும் பொருளாதார நீதிக்காகப் போராடவும் அடை யாள அரசியலை பொருளாதார கோரிக்கை களுடன் இணைக்கவும் வேண்டும் என்பதுதான்.

⋆ இடதுசாரிகளை நான் நிச்சயமாகக் கூட்டாளி யாகவே பார்க்கிறேன். இது இடதுசாரிகள் தலித்து களுடன் சேருவதாகவோ தலித்துகள் இடதுசாரி களுடன் சேருவதாகவோ எடுத்துக் கொள்ளாமல் **தலித்துகள் இடதுசாரியாக மாறுவது**-என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இதன் பொருள் அவர்கள் வர்க்கப் போராட்டம் குறித்து முழுமை யான புரிதல் கொள்வதுதான். ஒரு வர்க்கமில்லாத சமூகத்தை நாம் அமைக்க முடியவில்லை என்றாலும்கூட குறைந்த பட்சம் நாம் தற் போதைய சமுதாயத்திலுள்ளதை விட குறை வான ஏற்றத்தாழ்வுகள் கொண்ட ஒரு சமூகத் தினை உருவாக்குவதை நமது குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். பொருளாதார பிரச்சனை களே தலித் அரசியலின் இதயம் போன்றவை.

**“நீங்கள் பசுவின் வாலைப் பிடித்து கொள்ளுங்கள்!**

**எங்களுக்கு நிலங்களை கொடுங்கள்!”**

-என்ற முழக்கத்தை முழங்குவோம். இதில் “தலித்துகள் இடதுசாரியாக மாறவேண்டும்”, “பொருளாதார பிரச்சனைகளே தலித் அரசிய லின் இதயம் போன்றவை” என்ற ஜிக்னேஷ் மேவானியின் கருத்துகள் நாம் கூர்ந்து கவனிக்கத் தக்கவை ஆகும்.

மேற்கு உத்திரப்பிரதேசத்தில் “பீம் படை”- என்ற தலித் அமைப்பின் நடவடிக்கைகளும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியதாக உள்ளது.

தெலங்கானாவில் சி.பி.எம். உட்பட பல கம்யூனிஸ்ட் அமைப்புகளும் தலித் அமைப்பு களும் முஸ்லீம் அமைப்பு உள்ளிட்டு (மொத்தத்தில் சுமார் 28 அமைப்புகள்) இணைந்து Bahujan Left Front என்ற முன்னணி அண்மையில் தொடங்கப் பட்டுள்ளது. தெலங்கானாவின் பெரும்பாலான கிராமங்களில் இம்முன்னணியின் அலகு அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. இதுபோன்ற ஒரு முன்னணியானது தமிழகம் உட்பட இந்தியாவெங்கும் கட்டப்பட வேண்டும். இம்முன்னணியானது சாதி ஒழிப்பை உள்ளடக்கி ஆனால் சாதி ஒழிப்புக்கான பிரத்யேக முன்னணி அல்ல. அத்துடன் குஜராத்தில் டாக்டர் சுரேஷ் மானே என்பவரது தலைமையில் இந்திய பகுஜன் சோலிச கட்சி தோன்றியுள்ளது.

மேலும் பகுஜன் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் வட இந்தியாவில் தோன்றியது.

தமிழகத்தில் உள்ள சில சிறு தலித் இயக்கங்கள் தலித் மக்களின் சிக்கலோடு தங்களை சுருக்கிக் கொள்ளாமல் தமிழ்த் தேசிய சிக்கல், வர்க்கச் சிக்கலோடு தங்களை இணைத்துக் கொள்வதற் கான கருத்தியல்களை முன்வைக்கின்றனர். இது நல்ல முன்னேற்றமாகும்.

தலித் இயக்கங்கள் மார்க்சியத்தின் தேவையை உணர்ந்து இடதுசாரி அரசியலை நோக்கி பயணிக்கத் தொடங்கியுள்ளன. சில இடதுசாரி இயக்கங்கள் தலித் இயக்கத்தின் அவசியத்தை உணர்ந்து தலித் இயக்கங்களை கட்டத் தொடங்கியுள்ளன.

டெல்லி ஜே.என்.யூ. மாணவர் தலைவர் கண்ணையகுமார் சிறையிலிருந்து விடுதலை யாகி வந்ததும் அவரை வரவேற்ற மாணவர்கள் - "ஜெய் பீம்", "லால்சலாம்" - என்ற முழக்கங் களை விண்ணதிர முழங்கினர். ஆம் இன்றைய இளைஞர்களும் மாணவர்களும் தலித்துகளும் அறிவு ஜீவிகளும் இடதுசாரிகளும் இடதுசாரி இயக்கங்களும் தலித் இயக்கங்களும் தமக்கிடையே கருத்தியல் வேறுபாடு இருந்தாலும் பரந்துபட்ட மக்களின் பொதுக் கோரிக்கைகளுக்காக இணைந்து செயல்படுவதற்காக,

"ஜெய்பீம்", "லால்சலாம்"

என்ற முழக்கங்களை முழங்கினர்.

நாமும் அத்தகைய வரலாற்றுக் கடமையை உணர்ந்து இடதுசாரி அரசியலின் தலைமையில் தலித் இயக்கங்களைக் கட்டியமைப்போம். தலித் மக்களை அனைத்து சாதிய ஒடுக்குமுறை யிலிருந்தும் விடுவிப்போம்! சாதி சமூகத்திற்கு முடிவுகட்டுவோம்!

❖

## தேர்தல் பிரச்சார இயக்கங்கள்

*தேர்தல் பிரச்சார இயக்கங்கள் பாட்டாளி வர்க்கத்தின் போராட்ட ஐக்கிய முன்னணியை மேலும் வளர்ப்பதற்கும் வளப்படுத்துவதற்கும் பயன்படுத்த வேண்டும். கம்யூனிஸ்டுகள் தேர்தல்களில் ஈடுபட சுயேச்சையாக முன்வர வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத் திட்டத்தை மக்களுக்கு முன்பாக வெளிப்படுத்த வேண்டும். சமூக - ஜனநாயகக் கட்சிகளுடனும் தொழிற் சங்கங்களுடனும் (உழைக்கும் விவசாயிகள் கைத்தொழிலாளர்கள் முதலியவர்களுடைய ஸ்தாபனங்களோடும் சேர்ந்து) ஒரு ஐக்கிய முன்னணியை ஸ்தாபிக்க முயற்சி செய்ய வேண்டும். பிற்போக்கு பாஸிஸ்டு வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல் தடுப்பதற்கு எல்லாவித முயற்சிகளையும் செய்யவேண்டும். பாஸிஸ்ட் ஆபத்தை எதிர்நோக்கும்போது கம்யூனிஸ்டுகள் தங்களுடைய அரசியல் கிளர்ச்சிக்கும் விமர்சனத்திற்கும் உள்ள தனி உரிமையைப் பாதுகாத்துக் கொண்டே பாஸிஸ்ட் எதிர்ப்பு முன்னணியில் ஒரு பொதுத் திட்டத்தின் கீழ் ஒரு பொதுவான சின்னத்தில் தேர்தல் இயக்கத்தில் பங்கு கொள்ளக்கூடும். இது பெரும்பாலும் ஐக்கிய முன்னணி இயக்கத்தின் வளர்ச்சியையும் வெற்றியையும் பொறுத்தும் செயலில் உள்ள தேர்தல் முறைகளைப் பொறுத்தும் இருக்கிறது.*

*பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின்கீழ் உழைக்கும் விவசாயிகள் 'நகர்ப்புறத்து குட்டி பூர்ஷுவாக்கள்' ஒடுக்கப்பட்ட தேசீயஇனங்களின் உழைக்கும் வெகுஜனங்கள் ஆகியோருடைய போராட்டத்தை ஒன்றுபடுத்த முயற்சித்துக் கொண்டே, அதில் கம்யூனிஸ்டுகள் பாட்டாளிவர்க்க ஐக்கிய முன்னணியின் அடிப்படையில் ஒரு பரந்த பாஸிஸ்டு எதிர்ப்பு மக்கள் முன்னணியை ஸ்தாபிப்பதைக் கொண்டு வர முயற்சிக்க வேண்டும். இதில் பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படை நல உரிமைகளோடு இசைவாக உள்ள பல்வேறு பகுதி பாட்டாளிகளின் எல்லாவித குறிப்பிட்ட கோரிக்கைகளையும் ஆதரிக்கும்.*

**- ஐக்கிய முன்னணி தந்திரம், டிமிட்ரோவ் (தமிழில்: ஏ.சீனிவாசன்), பக்.219, பிப்ரவரி 1976**

# வைதீக மதச்சார்பின்மையும் முஸ்லிம் அடையாள அரசியலும்

- ஆசிர் முகமது

சென்ற 2016இல் தவ்ஹீத் ஜமாஅத் நடத்திய ஷிர்க் ஒழிப்பு மாநாட்டுக்குப் பிறகு தமிழ் இந்துவில் சமஸ் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதன் தலைப்பு இதுதான், “இந்துத்துவம் அடிப்படைவாதம் என்றால் வஹ்ஹாபிசத்திற்கு என்ன பெயர்?” இந்தக் கட்டுரை முஸ்லிம், முற்போக்கு, இந்துத்துவ வட்டாரங்கள் அனைத்திலும் பலத்த விவாதத்தைக் கிளப்பியது. அதாவது மதச்சார்பற்ற, இடதுசாரி முகாம்கள் இந்துத்துவம் என்ற இந்து அடிப்படைவாதத்திற்கு இணையாக வஹ்ஹாபிசம் என்ற முஸ்லிம் அடிப்படைவாதத்தையும் எதிர்க்க வேண்டும். இரண்டுக்கும் பெரிய வேறுபாடு கிடையாது. இரண்டும் ஒரு நாணயத்தின் இருவேறு பக்கங்கள்தான். அதனால் முற்போக்காளர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்வோர் இந்துத்துவத்தை மட்டும் தேர்ந்தெடுத்து எதிர்க்காமல் இஸ்லாமிய அடிப்படைவாதத்தையும் எதிர்க்க வேண்டும் என்பதுதான் அந்தக் கட்டுரையின் சாரம்.

மேம்போக்காக பார்ப்பதற்கு இது சரியான பார்வையாகத் தோன்றலாம். இத்தகைய பார்வைதான் இப்போது வெகுவாக பரவிக்கொண்டும் வருகிறது. சமூக ஊடகங்களில் இயங்கும் முற்போக்காளர்கள் பலர் இத்தகைய நிலைப்பாட்டை எடுப்பதை நாம் பரவலாக காண்கிறோம். இந்தப் பார்வை எந்தளவு சரி? முஸ்லிம் அமைப்புகள் எல்லாமே அடிப்படைவாத அமைப்புகள், முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகள் எல்லாமே வகுப்புவாத அமைப்புகள், முஸ்லிம் வகுப்புவாத அமைப்புகள் எல்லாமே இந்துத்துவத்துக்கு சற்றும் குறைவில்லாதவர்கள் என்ற ஒரு பொதுப்புத்தி இன்று சர்வ சாதாரணமாக ஏற்பை பெற்றுள்ளது. சில முற்போக்காளர்கள் தங்களது அரசியல் சரித்தன்மையை நிரூபித்துக் கொள்ளும் அவசரத்தில் இத்தகைய நிலையை எடுக்கிறார்கள். மிதவாத முஸ்லிம்கள் (Moderate Muslims) என்று அறியப்படுவோரில் சிலரும் தாம் சார்ந்த சமூகத்தின் பக்கச் சார்பு இல்லாமல் நியாயமாக பேசக்கூடியவர்கள் என்ற அடையாளத்தை பேணிக்கொள்ளும் வகையில் இவ்வாறு செயல்படுகிறார்கள்.

முதலில் இந்துத்துவத்தை அடிப்படைவாதம் என அழைப்பது சரியா என்று பார்ப்போம். தொண்ணூறுகளில் தமிழ்நாட்டிலிருந்து உருவான ஒரே ‘தேசிய இயக்குனரான’ மணிரத்னம் இந்தப் பேசுபொருள் குறித்து ‘பம்பாய்’ என்ற ஒரு படம் எடுத்தார். அது பேசிய அடிப்படையானவாதம் இதுதான். இந்த நாட்டின் மதச்சார்பற்ற தன்மைக்கு பெரும் ஆபத்து இந்து மற்றும் முஸ்லிம் மதவாதிகளால்தான் என்பதுதான் அந்தப் படம் பேசிய சாராம்சமான கருத்து. அந்தப் படம் பல தரப்பினரின் பாராட்டைப் பெற்ற படம். தமிழ்நாட்டில் கூட ஒரு பாராளுமன்ற கம்யூனிஸ்டு கட்சி ஒன்றின் கலை, இலக்கிய பிரிவின் விருதைப் பெற்றது.

முதலில் இத்தகைய கருத்து இந்துத்துவத்தை குறைத்து மதிப்பிடுவதாகவும் ஏற்கெனவே ஒடுக்கப்படும் முஸ்லிம் சமூகத்தின் அரசியலை இந்துத்துவத்துக்கு ஒத்த மதவாதமாக ஒப்பிட்டு இன்னொரு வகையில் முஸ்லிம் ஒடுக்குமுறைக்கு வலுவூட்டுவதாகவும் அமைகிறது. இந்துத்துவம் போதிக்கும் இஸ்லாமிய வெறுப்பு வெளிப்படையானது என்றால் இது கொஞ்சம் நுண்மையாகச் செயல்படும் இஸ்லாமிய வெறுப்பு (Islamophobia) ஆகும். தலித் அடையாள அரசியல் செய்யும் அமைப்புகளையும் கட்சிகளையும் ஆதிக்க சாதி, உயர்சாதி அரசியலோடு சமப்படுத்தி அவற்றை சாதியக் கட்சிகள் என்று அழைப்பது எவ்வளவு ஆபத்தான அரசியலோ அவ்வளவு ஆபத்தானது இத்தகைய பார்வை. இதன்மூலம் முஸ்லிம்கள் மேலும் தனிமைப்படுவதும் இந்து மதவாதத்தை வளர அனுமதிப்பதும் தவிர வேறு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

இந்துத்துவத்தை குறைத்து மதிப்பிட்டு அதை வளரவிட அனுமதிப்பது என்றால் என்ன? இந்தியாவில் இந்துத்துவத்தை வேறு எந்த மதத்தைச் சேர்ந்த மதவெறியுடனும் ஒப்பிட்டு இந்து அடையாளத்தை முன்னிறுத்தி அரசியல் செய்பவர்களை வெறும் ‘வகுப்புவாதிகளாக’ச் சித்தரிப்பது. அதிகபட்சமாக ‘இந்துமதவெறியும் மற்ற மதவெறி போல்தான் என்றாலும் இந்துக்கள்

பெரும்பான்மையாக இருப்பதால் இந்து மதவெறியால் அதிக பாதிப்பு இருக்கிறது' என்று சொல்வார்கள். இது குறித்து ஆந்திர மனிதவுரிமைச் செயற்பாட்டாளர் தோழர் பாலகோபால் இவ்வாறு கூறுவார். "ஆர்எஸ்எஸ் வெகுஜன அமைப்புகள் இயங்குவது தமது வர்க்க சமரச சித்தாந்தங்களை பிரச்சாரம் செய்வதற்கல்ல. தாம் விரும்புகிற 'தேசிய ஐக்கிய'த்திற்கு பிரதான எதிரிகளாக கருதப்படுகிற முஸ்லிம்களை, கம்யூனிஸ்டுகளை அடக்குவதற்கே. ஆர்எஸ்எஸ் வெறும் மதவாத நிறுவனம் என திரித்தல்வாதிகள் பிரச்சாரம் செய்வதால் அதன் முஸ்லிம் எதிர்ப்பு பிரபலமடைந்தது. அது முன்வைப்பது நிலப் பிரபுத்துவ இந்துத்துவம் அல்ல, ஃபாசிஸ்டு இந்து தேசியம் என அங்கீகரித்தால், அது பிற மதத்தவர்களான முஸ்லிம்களுக்கு எந்தளவு எதிரியோ, சர்வதேசியவாதிகள், அதைவிட முக்கியமாக வர்க்க போராட்ட சித்தாந்தத்தை ஏற்ற கம்யூனிஸ்டுகளுக்கும் அதே அளவு எதிரியென புரிந்துவிடும்" என்கிறார். இந்தியப் பெருமுதலாளி வர்க்கத்தினால் நிதியளிக்கப்பட்டு வளர்க்கப்பட்டு ஆட்சியில் அமரவைக்கப்பட்ட இந்துத்துவம் வெறும் முஸ்லிம்களுக்கு மட்டும் எதிரியாக இருக்க முடியுமா? மாறாக அது தொழிலாளிகள், விவசாயிகள், சிறு, குறு வணிகர்கள், பழங்குடிகள், தேசிய இனங்கள் என எல்லாவற்றுக்கும் எதிராகத் தானே இருக்க முடியும். பிறகு அதை எப்படி வெறும் மத அடிப்படைவாதம் என சுருக்க முடியும். மாறாக அதை இந்து ஃபாசிஸம் என அழைப்பதே தகும்.

இந்து அடையாள அரசியலும் முஸ்லிம் அடையாள அரசியலும் எத்தகைய பொருளாயத அடிப்படையிலிருந்து உருவாகிறது என்ற வேறுபாட்டை அங்கீகரிக்காமல் வெறுமனே எல்லா மத அடிப்படைவாதங்களையும் எதிர்க்கிறோம் என்று சொல்வதற்கு இடதுசாரிகள் எதற்கு? அதற்குதான் மணிரத்னம் இருக்கிறாரே! ஆனால் மைய நீரோட்ட கம்யூனிஸ்டு கட்சிகளும் இத்தகைய பிரச்சினை உள்ளவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஒருமுறை ரோஹித் வெமுலா தனது முகநூல் பக்கத்தில் ஏபிவிபியையும் முஸ்லிம் மாணவர் அமைப்பான எஸ்ஐஓவையும் (SIO) சம அளவிலான மதவாத அமைப்புகள்தான் என்ற நிலைபாட்டை முன்வைத்து வரும் எஸ்எஃப்ஐ போன்ற இடதுசாரி அமைப்புகளை விமர்சித்து எழுதியிருந்தார். இதனால்தான் SIO போன்ற முஸ்லிம் அமைப்புகள் தலித் அமைப்புகளோடு கூட்டமைப்பாக செயல்படுவது கல்வி வளாகங்களில் அதிகரித்து வருகிறது. தலித் அமைப்புகளோடு இணைந்து செயல்படுவதற்கான முன் நிபந்தனையாக அவர்கள் முஸ்லிம் அமைப்புகளை விலக்க வேண்டும் என்ற கோரிக்கையும் மைய நீரோட்ட இடதுசாரி அமைப்புகளால் வைக்கப்படுகிறது. இவ்வாறுதான் முஸ்லிம் பிரச்சினை என்று வரும்போது பாராளுமன்ற இடதுசாரிகளும் கூட தாராளவாத நிலைப் பாட்டை எடுக்கிறார்கள்.

ஆனால் இதற்கு மாறாக தெலங்கானாவில் சிபிஎம் அண்மையில் அமைத்துள்ள Bahujan Left Frontஇல் Majlis Bachao Tehreek என்ற முஸ்லீம் அமைப்பு உறுப்பு அமைப்பாக இருக்கிறது. இப்புதிய போக்கின் வளர்ச்சி கட்டம் எவ்வாறு போகிறது என்பதை இனி காணவேண்டும்.

வேறு எந்த சமூகத்தையும் விட முஸ்லிம் சமூகம் தான் இந்தியாவின் மதச்சார்பின்மையை தனது மத, கலாச்சார, அரசியல் மற்றும் பௌதீக இருப்புக்கே அவசியமாகக் கருதுகிறது. முஸ்லிம் அடையாள அரசியல் பாஜகவுக்கு எதிராகவும் முஸ்லிம்களின் உரிமைகளை வலியுறுத்தியும் மட்டுமே இந்தியாவில் அரசியல் செய்ய முடியும். அத்தகைய மக்கட்பிரிவினரின் அரசியலை, அதை முன்னெடுக்கும் சில தலைவர்கள் பேசும் மதமொழியை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு மதவாத ஃபாசிஸத்துடன் சமப்படுத்துவது எந்த வகையில் நியாயம்? இதையெல்லாம் அங்கீகரித்த பிறகே முஸ்லிம் அடையாள அரசியலில் உள்ள குறைபாடுகளை பேச முடியும்.

❖

இதழில் உள்ள படைப்புகள் மீது உங்களது விமர்சனங்களை வரவேற்கிறோம்.

உங்களது படைப்புகளை அனுப்பி, ஆக்கப்பூர்வமான பங்களிப்பைச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

- ஆசிரியர் குழு

# 11ஆம் ஆய்வுரையில் வாழ்தல்

**- ரிச்சர்ட் லெவின்ஸ்***

*"தத்துவ வாதிகள் உலகத்தைப் பல்வேறு வழிகளில் புரிந்துக்கொள்ள முயற்சித்துள்ளனர். ஆனால் அதை மாற்றியமைக்க வேண்டும் என்பதே விடயம்."*

-கார்ல் மார்க்ஸ்,

ஃபாயர்பாக் பற்றிய 11ஆம் ஆய்வுரை

நான் சிறுவனாக இருந்தபொழுதே, பெரியவனாக வளர்ந்ததும் ஒரு விஞ்ஞானியாகவும் ஒரு இடதுசாரியாகவும்தான் மாறுவேன் என்று நம்பியிருந்தேன். எனது சமூக செயற்பாடுகளையும் எனது துறைசார் பாண்டித்தியத்தையும் எவ்வாறு இணைப்பது என்பதைக் காட்டிலும் அதை பிரித்துப் பார்ப்பது என்பது எனக்கு மிகப்பெரிய சவாலாக இருந்திருக்கும்.

நான் படிப்பதற்கு கற்றுக்கொள்ளும் முன்பே, எனது பாட்டி,மோசமான ஆயராக கருதப்பட்ட பிரவுனின் "சிறுமியர் மற்றும் சிறுவர்களுக்கான அறிவியல் மற்றும் வரலாறு" என்ற புத்தகத்தை எனக்கு அறிமுகப்படுத்தியிருந்தார். எனது தாத்தா, குறைந்தபட்சம் ஒவ்வொரு சோஷியலிச வாதியும் அண்டவியல், பரிணாம வளர்ச்சி மற்றும் வரலாற்றை நன்கு அறிந்திருத்தல் அவசியம் என்பதை நம்புபவர். நான் எப்பொழுதுமே, நாம் அனைவரும் முனைப்புடன் செயல்படும் பங்கேற்பாளராக திகழும் வரலாற்றையும் பொருள்கள் எவ்வாறாக அமைந்துள்ளது என்பதை கண்டடையும் அறிவியலையும் பிரித்துப் பார்த்ததே இல்லை. எனது குடும்பம், நிறுவனமயப்பட்ட மதத்தினுடனான தொடர்புகளை ஐந்து தலைமுறைகளுக்கு முன்பே முறித்திருந்தனர். ஆனாலும் என் தந்தை ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையிலும் நடக்கும் 'பைபிள் வாசிப்பு' கூட்டத்திற்கு அழைத்துச் செல்வார். ஏனெனில், நாங்கள் வாழ்ந்த சுற்றுப்புற கலாச்சாரத்திலும் சரி, அங்கு வாழ்ந்த நிறைய மனிதர்களின் வாழ்க்கையிலும் சரி, பைபிள் ஒரு முக்கிய பங்கு வகித்தது. அது மாறிவரும் சூழல்களுக்கு ஏற்ப கருத்துகள் எவ்வாறு வளர்ச்சி கொள்கின்றன என்பதன் அற்புத தொகுப்பு. மேலும் ஒவ்வொரு நாத்திகனும் ஆத்திகர்கள் அளவிற்கு அதன் கருத்துகளில் புலமை பெற்றிருப்பது அவசியம்.

என் ஆரம்பப் பள்ளியின் முதல்நாளில், என்னுடைய பாட்டி, "அவர்கள் (ஆசிரியர்கள்) கற்றுக்கொடுக்கும் அனைத்தையும் கற்றுக் கொள். ஆனால் அனைத்தையும் அப்படியே நம்பி விடாதே" என்று அறிவுரை கூறினார். அவள் 1930களின் ஜெர்மெனியில் பிரபலமடைந்திருந்த இனவெறியை ஆதரிக்கும் அறிவியலையும் அது இனத்தூய்மைவாதத்திற்கு கொடுக்கும் நியாயத்தையும் எங்கள் மண்ணிலே மிக பிரபலமான ஆணாதிக்க சிந்தனை பற்றியெல்லாம் நன்கு அறிந்திருந்தாள். அவளது இந்த அணுகுமுறை அறிவியலை அதிகாரத்திற்காகவும் இலாபத்திற்காகவும் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்ற புரிதலில் இருந்தும் மற்றும் தொழிலாளர்களுக்கிடையே பொதுவாக நிலவும் ஆளும் வர்க்கத்தின் மேல் எழும் அவநம்பிக்கையாலும் ஏற்பட்டிருந்தது. அவளது இந்த அறிவுரையை எனது கல்விசார் வாழ்வின் நிலைப்பாடாக முழு உணர்வோடு பல்கலைக்கழகத்தில் (முழு உணர்வுடைய பல்கலைக்கழகத்தில் அல்ல) உருவாக்கிக் கொண்டேன். நான் வளர்ந்தது ப்ருக்கீலினின் இடதுசாரி சிந்தனையை கொண்டவர்கள் வசித்த ஒரு குடியிருப்புப் பகுதியில். மே தினம் என்றாலே பள்ளிகள் வெறிச்சோடி காணப்படும். என்னுடைய 12ஆம் வயதில்தான் இடதுசாரியல்லாத (குடியரசுக் கட்சியை ஆதரிக்கும்) ஒரு நபரை நான் முதன் முதலில் சந்திக்க நேர்ந்தது. அறிவியல், அரசியல் மற்றும் கலாச்சார பிரிச்சனைகள் பற்றிய கடுமையான விவாதங்கள் நிரந்தர குழுக்களாக ப்ரைட்டன் கடற்கரையோர நடைபாதைகளில் நடந்தேறியது. இந்த உரையாடல்களே எங்கள் உணவு இடைவேளைகளுக்கும் தீனியாய் அமைந்தது. அரசியல் அர்ப்பணிப்பு என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்தது. ஆனால் அந்த அர்ப்பணிப்பின் மீது எவ்வாறு செயல்படுவது என்பது கடுமையான விவாதத்துக்குட்படுத்தப் பட்டது.

---

*அமெரிக்காவைச் சேர்ந்த இக்கட்டுரையாளர் இறக்கும்வரை Harvard T.H.Chan School of Public Health ல் பேராசிரியராக இருந்தார்.*

எனது பதின்ம வயதில் சோவியத் விஞ்ஞானி லிஸென்கோவின் (Lysenko) ஆய்வுகளால் ஈர்க்கப் பட்டு, மரபியலில் (Genetics) ஆர்வமுற்றேன். ஆனால் அவருடைய கருத்துகள் மிக மோசமான அளவிற்கு தவறானவைகள் என பிற்காலத்தில் தெரியவந்தது, குறிப்பாகத் தத்துவார்த்த கொள்கை களிலிருந்து உயிரியல் முடிவுகளை அடைய அவர் செய்த முயற்சிகள். ஆனாலும் அவரின் சமகாலத் தில் நடந்த மரபியல் ஆய்வுகளின் மீது அவர் வைத்த விமர்சனங்கள் என்னை வாடிங்டன் மற்றும் ஷ்மால்ஹஸென் (Waddington and Schmal hausen) மற்றும் பலரின் ஆய்வுகளை நோக்கித் திருப்பியது. 'சோவியத் விஞ்ஞானிகள் செய்வது அறிவியலே கிடையாது என அவர்களை பொருட் படுத்தாமல் இருப்பது' அன்றைய பனிப்போர் பாணி. ஆனால் இவர்கள் அனைவரும் லிஸென் கோ வைத்த விமர்சனங்களுக்கு, உயிரினத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையே நடக்கும் பரஸ்பரச் செயல்பாடுகளின் மீதான ஆழமான பார்வைகளை உருவாக்கி பதிலளித்திருந்தனர்.

என் மனைவி, ரோசாரியோ மொராலஸ் (Rosario Morales) எனக்கு ப்யூர்டோ ரீக்கோ தீவை (Puerto Rico) 1951இல் அறிமுகம் செய்தார். நான் அங்கு வாழ்ந்த அந்த பதினொரு ஆண்டுகள் எனது அரசியலுக்கு லத்தின் அமெரிக்க கண்ணோட் டத்தை அளித்தது. தென் அமெரிக்காவில் இடது சாரிகள் வென்றெடுத்த வெவ்வேறு வெற்றிகள் அன்றைய இறுக்கமான காலகட்டத்தில் நன்னம் பிக்கை கொள்ளச் செய்தது. ப்யூர்டோ ரீக்கோவில் எஃப்.பி.ஐ (FBI)-இன் கண்காணிப்பு நடவடிக் கைகள் எனக்கு அங்கு வேலை கிடைக்கப் பெறாமல் தடுத்தது. இறுதியில் வாழ்வாதாரத் திற்காக அத்தீவின் மேற்கு மலைத்தொடர்களின் காய்கறி பண்ணை ஒன்றில் சேர்ந்தேன்.

கார்னல் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பள்ளியில் ஒரு இளங்கலை பட்டதாரியாக எனக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டதெல்லாம் அமெரிக்க விவசாயத்தின் முதன்மை பிரச்சனை விவசாய உபரியைக் களைவது எவ்வாறு என்பதே. ஆனால் ப்யூர்டோ ரீக்கோவின் ஏழை விவசாயியாக விவசாயம் என்பது மக்களின் வாழ்வில் எவ்வளவு முக்கியப் பங்காற்றுகிறது என்பதை உணர்ந்தேன். அந்த அனுபவம் எனக்கு வறுமையின் யதார்த்தத்தை அறிமுகம் செய்தது. வறுமை எவ்வாறு ஆரோக்கியத்தை சீர்குலைக் கிறது; ஆயுட்காலத்தை குறைக்கிறது; எல்லாவித வாய்ப்புகளையும் அடைத்துவிடுகிறது; தனிநபர் வளர்ச்சி என்பதையே வீணாக்குகிறது மற்றும் கிராமப்புற ஏழைகளினிடையே ஒரு குறிப்பிட்ட வகையான பாலின வேறுபாட்டை வளர்க்கிறது என்பதையெல்லாம் உணர நேர்ந்தது. காபி தோட்டத்தின் நேரடி தொழிலாளர் ஒருங்கிணைப்புக் கூட்டங்களோடு வாசிப்புக் கூட்டங்களும் இணைந்தது. ரோசாரியோவும் நானும் இணைந்து ப்யூர்டோ ரீக்கோ கம்யூனிஸ்ட் கட்சியின் விவசாயத்திற்கான செயற்திட்டத்தை உருவாக்கி னோம். அதில் நாங்கள், சூழலிய உற்பத்தி முறை, பன்முகத்தன்மை, பாதுகாத்தல் மற்றும் கூட்டுறவுகள் பற்றி நேரடியாக சேகரித்த சில நுண்ணறிவைக் கொண்டு கற்றுக்குட்டித் தனமான பொருளாதார சமூக ஆய்வை அதில் மேற்கொண்டோம்.

நான் முதன்முதலில் 1964ஆம் ஆண்டு, கியூபா தனது இனத்தொகை மரபியலை (population genetics) வளர்த்தெடுக்க உதவுவதற்காக அங்கு சென்றேன். கியூப புரட்சியையும் காண நேர்ந்தது. அதன் பிறகான ஆண்டுகளில் சூழலிய விவசாயத் திற்காகவும் நேரிய, சமத்துவ மற்றும் நிலைத் திருக்கக் கூடிய ஒரு பொருளாதார முன்னேற்றத் திற்கான சூழலிய பாதையை கண்டடைய நடந்து கொண்டிருந்த கியூபப் போராட்டத்தில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். சோஷலிச மரபில் மிகவும் சக்திவாய்ந்தது முன்னேற்றப் போக்கு கொள்கைச் சிந்தனை (progressivism). அது வளரும் நாடுகள் வளர்ந்த நாடுகளை எட்டிப் பிடிக்க வேண்டும் என்றால் அவைகள் நவீனமயமாக்கல் என்ற ஒற்றை வழிப்பாதையில் மட்டுமே பயணிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தது. உயர் தொழில் நுட்பப் பாதையில் வளரும் தொழிற்துறை சார்ந்த விவசாயத்தை விமர்சிப்பவர்களை, கருத்து முதல் வாதிகள் (idealists) எனவும் எப்போதுமே நிலவியிருக்காத ஒரு கற்பனாவாத நாட்டுப்புறப் பொற்காலத்திற்காக உணர்ச்சிப் பாங்கோடு ஏக்கம் கொள்ளும் நகர்ப்புறத்தார் எனவும் புறந் தள்ளுகிறது. ஆனால் ஒவ்வொரு சமூகமும் தாங்கள் எவ்வாறு தங்களை இயற்கையோடு தொடர்பு படுத்திக் கொள்ளவேண்டும், தங்கள் நிலங்களை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும், தங்களுக்கு ஏற்ற தொழில்நுட்பங்கள் என்ன, தங்கள் சமூகத்திற்கான இயக்குதிறனின் (efficiency) அடிப்படை என்ன என்பதையெல்லாம் தாமே உருவாக்கிக்கொள்ளும் எனும் இன்னொரு கண்ணோட்டமும் நிலவியது. 1970களின்

கியூபாவில் இவ்விவாதங்கள் மேலோங்கி யிருந்தது. 1980களில் சூழலிய மாதிரி வெற்றி பெற்றது. இருப்பினும் அதை செயல்படுத்துவது என்பது ஒரு நீண்ட நிகழ்முறையாக காணப் பெற்றது. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு உயர் தொழில்நுட்ப சாதனங்கள் கிடைக்கப் பெறாமல் கியூபா பொருளாதார நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருந்த அந்த விசேஷ கால கட்டம், சூழலிய மாதிரியின் மேல் உறுதியான நம்பிக்கை கொண்டவர்களால், காலத்தின் கட்டாயத்தால் சூழலியலாளர்களாக ஆனவர் களையும் அதை ஏற்றுக்கொள்ளச் செய்ய முடிந்தது. இந்த நெருக்கடி காலத்திற்கு முன்பே சூழலியலாளர்கள் தங்களுக்கான பாதையை தயார்படுத்தி வைத்திருந்ததால் மட்டுமே அவர் களால் அந்த வரலாற்றுத் தருணத்தை பயன் படுத்திக் கொள்ள முடிந்தது.

நான் இயங்கியல் பொருள்முதல்வாதத்தை (Dialectical Materialism) என்னுடைய இளம் பருவத்தில் முதலில் பிரித்தானிய மார்க்ஸிய விஞ்ஞானிகளான ஜே.பி.ஸ்.ஹல்தேன் (J.B.S Haldane), ஜே,டி, பெர்னால் (J.D.Bernal), ஜோசப் நீதாம் (Joseph Needham) போன்றவர்களின் எழுத்துக்கள் மூலமாகவும் பிறகு நேரடியாக மார்க்ஸ் மற்றும் ஏங்கல்ஸ் மூலமாகவும் சந்தித் தேன். என்னை அது அறிவார்த்தமான முறையிலும் அழகியல்முறையாலும் உடனேயே கவர்ந்தது. அன்றிலிருந்து இயற்கை மற்றும் சமூகத்தின் இயங்கியல் நோக்கு என்பது என்னுடைய ஆய்வின் முக்கிய கருப்பொருளாக விளங்குகிறது. முழுமை, தொடர்பு மற்றும் சூழல், மாற்றம், வரலாற்றின் உண்மைத்தன்மை, முரண்பாடு, காலஒழுங்கின்மை, சமச்சீரின்மை, நிகழ்ச்சிப் போக்குகளின் பல மட்டங்கள் ஆகியவைகளின் மீது இயங்கியல் தரும் தனி முக்கியத்துவத்தின் ஆனந்தத்தில் திளைத்திருக்கிறேன். அப்பொழுதும் இப்பொழுதும் எங்கும் நிறைந்து காணப்படும் சுருக்கவாதத்திற்கு (reductionism) புத்துணர்ச்சி யூட்டும் எதிர்பலமாக இயங்கியல் திகழ்கிறது.

ஒரு எடுத்துக் காட்டு : பழப்பூச்சியை (Drosophila) அதன் இயற்கைச்சூழலில் (வெறும் ஆய்வுக்கூட பாட்டில்களில் மட்டுமல்ல) கண்காணிக்க ரோசாரியோ கொடுத்த ஆலோசனையை ஏற்று பழப்பூச்சியின் ஆய்வை ப்யூர்டோ ரீக்கோவில் என் வீட்டருகிலேயே தொடங்கினேன். என்னுடைய ஆய்வு முன் வைக்கும் கேள்வி : பழப்பூச்சி இனங்கள் தங்களுடைய சுற்றுச் சூழலின் மாறுதல்களை (காலத்தைப் பொறுத்தும் (temporal gradients) இடத்தைப் பொறுத்தும் (spatial gradients) எவ்வாறு எதிர் கொள்கின்றன? வெவ்வேறு பழப்பூச்சி இனங்கள் ஒரே மாதிரி யான சுற்றுச்சூழல் சவால்களுக்கு பல எதிர் வினைகளை ஆராய்வதிலிருந்து தொடங்கினேன். ஒரே நாளில் க்வானிகா (Guanica) என்ற பாலை வனத்திலிருந்தும் எங்களது பண்ணை அமைந்துள்ள மலைத்தொடரின் முகட்டில் உள்ள மழைக் காட்டிலும் பழப்பூச்சிகளை சேகரித்தேன். சில இனங்களால் உயர் வெப்பநிலைகளுக்கு இரண்டு-மூன்று நாட்களிலேயே தம்மை உடலியக்கவியல்ரீதியாக (physiological) தகவமைத்துக்கொள்ள முடிந்தது. மேலும் 3000 அடி (சுமார் 20 மைல்) உயரநிலை மாறுபாட்டால் இவைகளின் வெப்பச் சகிப்புத்தன்மையில் ஏற்படும் மாற்றங்கள் வெகு சிறிய அளவிலேயே மரபணு மாற்றங்களாய் வெளிப்பட்டது. வேறு சில இனங்கள் தங்களின் வெவ்வேறு வாழ் விடங்களை பொறுத்து தனித்துவ மரபணுக்கள் கொண்ட துணை - இனக்குழுமங்களாக (sub-population) திகழ்ந்தது. வேறு சில இனங்களோ கிடைக்கப்பெறும் சுற்றுச்சூழல் வரம்பில் ஒரு பகுதிக்கு மட்டுமே தங்களை தகவமைத்து அதை வாழ்விடங்களாக மாற்றிக்கொண்டது. பாலை வனத்து இனங்களில் ஒன்று, மழைக்காட்டின் பழப்பூச்சி வெப்பத்திற்கு காட்டும் சகிப்புத் தன்மையைவிட அவ்வளவு மேம்பட்டதாக ஒன்றும் தோன்றவில்லை. ஆனால் அது மழைக் காட்டின் இனங்களைக் காட்டிலும் குளிரான, ஈரமான மைக்ரோ தளங்களாக (சுற்றுச் சூழலின் ஒரு சிறிய பகுதி: அதன் உடனடி சுற்றுப் புறத்திலிருந்து மிகவும் குறிப்பிடத்தகுந்த மாற்றங்களை உள்ளடக்கிய பகுதி) தேர்வு செய்து, காலை 8 மணிக்கு மேல் சென்று மறைந்து கொள்வ தால் மேம்பட்டதாகத் திகழ்ந்தது. இக்கண்டு பிடிப்புகள் என்னை, “துணைச்சாய்வு வீதத்தேர்வு (cogradient selection)” மற்றும் “எதிர் சாய்வு வீதத் தேர்வு (countergradient selection)” என்ற இரண்டு கருத்தாக்கங்களுக்கு இட்டுச் சென்றது. துணைச் சாய்வு வீதத்தேர்வில் சுற்றுச் சூழல் மாற்றங்களின் நேரடி தாக்கம் இனத்திற்குள் மரபணு மாற்றங் களை அதிகரிக்கும். எதிர்சாய்வு வீதத்தேர்வில் மரபணு வேறுபாடுகளே, சுற்றுச் சூழலின் நேரடித் தாக்கங்களை ஈடு செய்துவிடும். நான் வாழும் அதிக வெப்பநிலை கொண்ட பூமிப் பகுதியானது

ஒரு வறண்ட பிரதேசம் என்பதால், இயற்கைத் தேர்வு (Natural Selection) க்வானிகாவின் (Guanica) பழப்பூச்சிகளின் அளவை அதிகரிக்கும் வகையில் செயல்பட்டது. ஆனால் அவைகளின் வளர்ச்சியில் வெப்ப நிலை செலுத்தும் விளைவோ அவற்றின் அளவை குறைப்பதாக இருந்தது. இதன் பயனாய் கடல்மட்ட பாலைவனத்திலிருக்கும் பூச்சியும் மலைமுகட்டில் அமைந்துள்ள மழைக் காட்டிலிருக்கும் பூச்சியும் அதனதன் இயற்கை வாழ்விடங்களில் வளரும்போது இரண்டும் ஒரே அளவில் தான் உள்ளது. ஆனால், க்வானிகாவின் (Guanica) பூச்சிகளோ மழைக்காட்டின் பூச்சிகள் வளரும் அதே வெப்பநிலையில் வளரும்போது அளவில் பெரியதாக வளருகிறது.

இந்த ஆய்வில் நிகழ்வுகள் பல்வேறு நிலைகளில் நடந்தேறுவதையும் அவை ஒவ்வொன்றிற்கும் அதற்கே உரிய விதிகள் உள்ளதையும் ஆனால் எல்லாமே ஒன்றோடு ஒன்று தொடர்புடையது என்பதையும் வலியுறுத்தி உயிரியியல் துறையில் நிலவும் சுருக்கவாதச் சார்பை கேள்விக்குட் படுத்தியுள்ளேன். என்னுடையது இயங்கியல் சார்பு : உடலியக்கவியல், நடத்தையியல் மற்றும் மரபணு நிலைகளின் தழுவல்களுக்கிடையே யான தொடர்புகள். நிகழ்முறை (process), மாறுந் தன்மை (Variability) மற்றும் மாற்றம் (change) ஆகியவற்றின் மீது நான் தரும் முன்னுரிமையே என்னுடைய ஆய்வுரையின் நிகழ்ச்சி நிரலை முடிவு செய்கிறது.

சுற்றுச்சூழல் என்பது எப்போதுமே நிலையில்லாத ஒன்றாக விளங்கும்போது எவ்வாறு பழப்பூச்சி இனங்கள் சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு தங்களை தகவமைத்துக் கொள்கின்றன என்பதே ஆய்வின் விசாரணை. என்னுடைய ஆய்வுரையை தொடங்கியபோது இந்த பின்வரும் எளிய அனுமானம் ஒன்று என்னை திகைப்படையச் செய்தது: அதாவது சுற்றுச்சூழல் சில நேரங்களில் சிறிய அளவிலான பழப்பூச்சிகள் வளர்ச்சிக்கு ஆதரவாக இருக்கிறது என்றும் மீதி நேரங்களில் பெரிய அளவிலான பழப்பூச்சிகளுக்கு ஆதரவளிக்கிறது என்றும் வைத்துக்கொள்வோம். இவ்வாறு இருவேறு அதீத எதிர்நிலையை ஒரு உயிரினம் எதிர்கொள்ளும் போது அது இந்த அதீத நிலைகளுக்கு இடைப்பட்ட ஒரு நிலையை தேர்ந்தெடுத்து சமரசம் செய்து கொள்ளும் என்பதே அந்த அனுமானம். ஆனால் இது இருவேறு எதிர் கருத்தாக்கங்கள் நிலவும்போது உண்மை இவை இரண்டிற்கும் இடை நிலையில்தான் (அதன் சராசரியாகத்தான்) இருக்கும் என்ற நைந்து போன தாராளவாத வாதத்தின் சிந்தனையற்ற பிரயோகத்தின் வெளிப்பாடு ஆகும். எனது ஆய்வுக் கட்டுரையில் இடம் பெற்றுள்ள தொகுதிகளின் பொருந்தும் தன்மை பற்றிய ஆய்வில் (study of fitness sets), இடை நிலைத் தேர்வு எப்போது உகந்த நிலையாக (optimum) கருதப்படுகிறது என்பதையும் எப்போது அது மிக மோசமான விருப்பத் தெரிவாகக் கருதப் படுகிறது என்பதையும் கூர்ந்தாராய்ந்திருந்தேன். ஆய்வின் சுருக்கமான முடிவு: மாற்றுகள் (alter natives) மிகப்பெரிய வேறுபாடுகளை கொண்டிரா விட்டால், இடைநிலையையே (சராசரியையே) உகந்த நிலையாகக் கொள்ளலாம். ஆனால் மாற்றுகள் (alternatives) அப்பழப்பூச்சி இனங்களின் சகிப்புத்தன்மையின் வீச்சைக் (tolerance range) காட்டிலும் அதிக வேறுபாடுகளை கொண்டிருக்குமானால், அப்போது ஏதேனும் ஒரு அதீத நிலை (extreme) மட்டும் அல்லது சில சமயங்களில் அதீதங்களின் கலவைகளும் கூட கோரத் தக்கவைகளாக அமையலாம்.

மக்கட்தொகை மரபியலில் (population genetics) இயற்கைத் தேர்வுப் பற்றிய ஆய்வுகள் அனைத்தும் எப்போதுமே சுற்றுச்சூழல் நிலையானது என்ற அனுமானத்தை கொண்டதாகவே இருக்கும். ஆனால் நான் அதன் நிலையற்ற தன்மையின் மீது விருப்பம் உள்ளவனாக இருந்தேன். நான் இரண்டு விடயங்களை முன்மொழிந்தேன் : ஒன்று, சுற்றுச்சூழல் மாற்றம் என்பது பரிணாம சூழலியலின் பல கேள்விகளுக்கான விடையாக இருக்க முடியும். இரண்டு, உயிரினங்கள் வெறும் அதிக வெப்பநிலை, களர் நிலம் போன்ற சுற்றுச்சூழலின் குறிப்பிட்ட சில அம்சங்களுக்காக மட்டும் தங்களை தகவமைத்துக் கொள்வதில்லை. மாறாக அது சுற்றுச்சூழலின் படிவங்களையும் (pattern) அதன் மாறுந்தன்மை, அதன் நிலையின்மை, நாம் கவனிப்பாய்வு மேற்கொள்ளும் அச்சிறுநிலத்தின் அளவை மற்றும் சுற்றுசூழலின் வெவ்வேறு அம்சங்களுக்கிடையேயான ஒப்புமைத் தொடர்பு (correlations) - போன்றவைகளையும் பொறுத்துதான் அமையும். மேலும், சுற்றுச்சூழலின் இந்த அமைவு முறை என்பது உயிரினங்களுக்கு புறத்தேயான, அப்படியே இயற்கையால் வழங்கப்படுகிற ஒரு விடயம் அல்ல. உயிரினங்கள் தங்களது சுற்றுச் சூழலை தாங்களே தேர்ந்தெடுத்து, உருமாற்றி அதை வரையறையும் செய்கிறது.

நான் ஆய்விற்குட்படுத்தும் விடயங்கள் என்னவாக இருந்தாலும் (பரிணாம சூழலியல், விவசாயம் அல்லது சமீப காலமாக பொது சுகாதாரம்) என்னுடைய அடிப்படையான விருப்பம் என்பது பல்வேறு கூறுகளைக் கொண்ட நுட்பமான கூட்டு அமைப்புகளது சிக்கலான அமைப்புகளின் இயங்குநிலையினை (dynamics of complex systems) புரிந்துகொள்ள முயற்சிப்பது. மேலும் நான் ஏற்றுக்கொண்ட அரசியல் கடப்பாடானது எனது ஆய்வின் பொருத்தப்பாட்டை நானே கேள்விக்குட்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது. பெர்டோல்ட் பிரெக்ட் (Bertolt Brecht) அவரின் கவிதைகள் ஒன்றில் இவ்வாறு கூறுவார், "நாம் உண்மையாகவே நடுக்கமூட்டுகிற ஒரு காலத்தில் வாழ்கிறோம். மரங்களைப் பற்றிய உரையாடல் என்பது பெரும்பாலும் ஒரு குற்றச் செயலாக மாறியிருக்கும் காலங்களில்... ஏனெனில் அவ்வாறு பேசுவதன் மூலம் நம்மிடையே நடக்கும் பெரும் அநீதிகளை காணாதவர்கள் போல் அமைதியாக இருக்க முடிகிறதே". ஐயத்திற்கிடமின்றி பிரெக்ட்-இன் மரங்கள் பற்றிய குறிப்பு தவறானது: இன்று நாம் மரங்களை பற்றி பேசும்பொழுது நாம் அநீதிகளை புறக்கணிப்பதில்லை. ஆனால் மனிதகுல வேதனைகளை உதாசீனப்படுத்தும் கல்வி புலமையோ பாண்டித்தியமோ நெறியற்ற செயல்பாடு எனும் அவரின் கருத்து முற்றிலும் சரியானது.

வறுமையும் ஒடுக்குமுறையும் நீண்ட ஆயுளையும் உடல் நலத்தையும் இழக்கச் செய்கின்றன; மனித எல்லைகளை, சாத்தியங்களை சுருங்கச் செய்கின்றன; ஆற்றல்மிக்க திறமைகளை எல்லாம் செழுமையடைவதற்கு முன்பே மட்டுப்படச் செய்கின்றன. ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் போராட்டங்களுக்கு ஆதரவளிக்கும் எனது நிலைப்பாட்டாலும் மாறுந்தன்மை (Variability) மேல் இருந்த எனது ஈடுபாட்டாலும் மக்களின் உடலியக்கவியல் ரீதியான மற்றும் சமூகப் பாதிப்புகள் பற்றிய விஷயங்களில் எனது கவனத்தை செலுத்தத் தொடங்கினேன்.

ஊட்டச்சத்தின்மை, மாசுப்பட்டுப்போன சூழல், சமூகப் பாதுகாப்பின்மை, பற்றாக்குறையான சுகாதார பராமரிப்பு போன்ற பல காரணங்களால் ஏற்படும் அழுத்தங்களை (stress) உடலே சரிசெய்து கொள்ளும் திறனைப்பற்றி நான் ஆராய்ந்து வருகிறேன். தொடர்ச்சியான அழுத்தங்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் உடல்களில் உள்ள (உடலை) நிலைப்படுத்தும் இயக்க அமைப்புகளின் அடிப்படைகளைத் தகர்த்து, அம்மக்களை மேலும் தங்களது சுற்றுச்சூழலில் ஏற்படும் சிறிய அளவிலான மாற்றங்களுக்கும் பாதிக்கப்படக் கூடியவர்களாக மாற்றுகிறது. இவைகள் இரத்த அழுத்தம், உடல் நிறை குறியீட்டெண் (body mass index), ஆயுள் எதிர்பார்ப்பு (life expectancy) போன்றவைகளின் அதிகரிக்கும் மாறுந்தன்மையில் (Variability) (சொகுசுடன் வாழும் மக்கள் கூட்டத்தில் இது சீரானதாக) வெளிப்படுகிறது. வறுமையின் பாதிப்புகளை ஆராயும் பொழுது வெவ்வேறு மக்கள் குழுமங்களுக்கிடையே நிலவும் தனித்தனி நோய்களை ஆராய்ந்தால் மட்டும் போதாது. ஒரு குறிப்பிட்ட கிருமியோ, மாசுபடுத்திகளோ (pollutants) குறிப்பிட்ட பெயரால் அறியும் நோய்களை தோற்றுவித்தாலும் சமூக நிலைமைகள் மருத்துவரீதியாக தொடர்பே இல்லாத நோய்களுக்கிடையே இணைப்பை ஏற்படுத்தி மேலும் பாதிப்புகளை அதிகமாக பரவ வழிவகை செய்கிறது. எடுத்துக் காட்டாக: ஊட்டச்சத்தின்மை, தொற்று அல்லது மாசானது குடலின் பாதுகாப்பு அரண்களை உடைக்க வல்லவை. ஆனால் இதில் ஏதேனும் ஒரு காரணத்திற்காக ஒருமுறை உடைந்துவிட்டால் அவை மாசிபடுத்திகள், கிருமிகள் மற்றும் ஒவ்வாமை ஊக்கிகள் (allergens) படையெடுக்கும் உறைவிடமாக மாறிவிடும். ஆகையால் ஊட்டச்சத்து குறைபாடுகள், தொற்றுநோய்கள், அழுத்தம் மற்றும் நச்சுத்தன்மைகள் இவை அனைத்தும் தொடர்பே இல்லாத பல வகையான வியாதிகளை ஏற்படுத்த வல்லவைகள்.

தொற்றுநோய்கள் பற்றி 1960களில் இருந்து நிலவும் கருத்து என்பது பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டால் இவ்வியாதிகள் மறைந்துவிடும் என்பதாகும். 1990களில் நான் இந்தக் கருத்தாக்கங்களை நிராகரிக்க "புது மற்றும் மீள் எழுச்சி பெற்ற நோய்களைப் பற்றி ஆராயும் ஹார்வார்டு குழுமம்" ஒன்றை தொடங்க உதவி புரிந்தேன். எங்கள் வாதத்தின் ஒரு பகுதி சூழலியலை அடிப்படையாகக் கொண்டது: தனது மாறிவரும் சூழலுக்கேற்ப (காடழிப்பினாலும் பாசனத் திட்டங்களினாலும் போர் மற்றும் பஞ்சம் காரணமாகவும் மக்களின் இடப் பெயர்வு) நோய் பரப்பும் உயிரினங்களின் வேகமான தகவமைவு பற்றியது அது. மேலும் அதே வேகத்தில் பூச்சிக்கொல்லி

களுக்கும் உயிர்க்கொல்லிகளுக்கும் தங்களை தகவமைத்துக் கொள்ளும் நோய்க்கிருமிகளிடத் திலும் கவனத்தைச் செலுத்தினோம். அதுமட்டு மல்லாமல், பயிர் நோயியல் (plant pathology) மற்றும் கால்நடை ஆய்வுகளிடத்தில் இருந்து மருத்துவ ஆராய்ச்சியின் பௌதிக, நிறுவன மற்றும் அறிவு சார்ந்த விலக்கலை விமர்சித்தோம். இந்த தனிமைப் படுதல் நடந்திராவிட்டால், இன்று நாம் மலேரியா, காலரா மற்றும் எய்ட்ஸ் போன்றவைகளின் எழுச்சிகள் மட்டுமல்ல, ஆப்பிரிக்க பன்றிக் காய்ச்சல் (swine fever), பூனை லுகேமியா (feline leukemia), சிட்ரஸின் டிரிஸ்டேசா நோய் (tristeza disease) மற்றும் பீன் கோல்டன் மொசைக் வைரஸ் ஆகியவை பொங்கியெழுதலில் புதைந்துள்ள ஒரு விசாலமான மாதிரியுருவை விரைவிலேயே கண்டறிந்திருக்கலாம். வளர்ந்து வரும் பொருளா தார ஏற்றத்தாழ்வு, நிலப் பயன்பாடுகளில் நிகழ்ந்து வரும் மாற்றங்கள், பொருளாதார வளர்ச்சி, மனித குடியேற்றங்கள், குடித்தொகை மாற்றங்கள் (demography) போன்ற வைகளால் நோய்தொற்று யியலிலும் மாற்றங்கள் நிகழும் என்பதை நாம் உணரவேண்டும். தகவமைவு பரிணாம வளர்ச்சி (Adaptive evolution) தரும் வெளிச்சத்திலிருந்து பார்க்கும்போது பயிர், விலங்கு மற்றும் மனித நோய்க்கிருமிகளை உயிர்க்கொல்லிகள், தடுப் பூசிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் கொண்டு சமாளித்துவிடலாம் என நம்புவது மடமையிலும் மடமை. பொருளாதார வளர்ச்சியானது உலகத்தை செழுமையை நோக்கி கொண்டு செல்லும்; தொற்று நோய்களை ஒழித்துக்கட்டிவிடும் எனும் வளர்ச்சி யாளர்களின் எதிர்பார்ப்பு பொய்ப்பிக்கப்பட்டு வருகின்றது.

தொற்றுநோய்களின் மீளெழுச்சியென்பது சூழலிய-சமூக அவலமெனும் பொது நெருக் கடியின் கூட்டறி குறியின் (eco-social distress syndrome) ஒருவகை வெளிப்பாடு மட்டுமே. பல நிலைகளில் எங்கும் நிரம்பியிருக்கும் இந்த நெருக்கடி உணர்த்துவதெல்லாம் நம் மனித இனத் தினிடையேயும் மனித இனத்திற்கும் இயற்கைக்கு மிடையேயும் நிலவுகின்ற உறவுகளின் செயல் பிறழ்ச்சி (dysfunction)யேயாகும். இச்செயல் பிறழ்ச்சியென்பது நோய்களின் வினை மற்றும் எதிர்வினை அமைவுமுறை கொண்ட கூட்டமைப்பு, உற்பத்தி மற்றும் பாலின உறவுகள், குடித்தொகை மாற்றங்கள், நமது இயற்கை வளங்களின் சிதைவு மற்றும் அடாவடியான அழித்தல், மாறிவரும் நிலப்பயன்பாடு மற்றும் குடியேற்றங்கள், பூகோளத்தின் பருவநிலை மாற்றங்கள் என எல்லா வற்றையும் உள்ளடக்கியது. இது இதற்கு முன்பு சந்தித்த நெருக்கடிகளில் மிகவும் ஆழமானது - உயரே இருக்கும் வளி மண்டலத்திலிருந்து பூமியின் அடியாழம் வரை, இன்னும் பரந்து விரியும் வெளி களில், நீண்டகாலத்திற்கு நிலைக்கக் கூடியதாகவும் நமது வாழ்வின் இன்னும் அதிகமான மூலை முடுக்குகளில் ஊடுருவுவதாகவும் திகழ்கின்றது. இந்த நெருக்கடி என்பது மனித இனத்திற்கு பொது வானதாகவும் உலக முதலாளித்துவத்திற்கு தனித்துவமானதாகவும் என இரண்டுமாகவும் உள்ளது. ஆகையால் இதுவே எனது அறிவிய லுக்கும் எனது அரசியலுக்கும் முதன்மை அக்கறையாக உள்ளது.

இம்முழு உலகின் எளிதற்ற, பல்வேறு கூறு களைக் கொண்ட நுட்பமான தன்மையை அப்படியே புரிந்துகொள்ள முயல்பவர்கள் பல நேரங்களில் திணறிப்போகக்கூடும். அதற்காக சிக்கலை தவிர்க்கிறேன் எனும் பெயரில், ஒரு அமைப்பை (அதன் சூழமைவிலிருந்து விலக்கி) அதன் கூறுகளாய் தனித்தனியே பிரித்து ஒரு தருணத்தில் ஒரு கூறின் பிரச்சனையை மட்டும் தான் தீர்க்க முயலுவேன் எனும் அணுகுமுறை பெருங்கேட்டைதான் விளைவிக்கும். அறிவியல் தொழில்நுட்பத்தின் மிகப்பெரிய தோல்விகள் அனைத்தும் இவ்வாறு பிரச்சனைகளை மிகவும் குறுகிய கண்ணோட்டத்தோடு முன்வைத்ததா லேயே நிகழ்ந்துள்ளது. பசுமை புரட்சியை முன் மொழிந்த விவசாய விஞ்ஞானிகள் பூச்சிகளின் பரிணாம வளர்ச்சியை பற்றியோ அல்லது பூச்சி களின் சூழலியலைப் பற்றியோ கருத்தில் கொள் ளாததால் பூச்சிக்கொல்லிகள் பூச்சிகளை கட்டுப் படுத்தும் என எதிர்பார்த்தனர். ஆனால் பூச்சிக் கொல்லிகளின் பயன்பாட்டால் பூச்சிகளின் பிரச்சனைகள் அதிகரித்தபோது அவர்கள் எதிர்பாரா அதிர்ச்சியில் மூழ்கினர். அதேபோல இவர்களுடைய உயிர்கொல்லிகள் புது வகை யான கிருமிகளை உருவாக்குகிறது, பொருளா தார முன்னேற்றம் வறுமையை உருவாக்குகிறது; வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகள் வெள்ளத்தை அதிகரிக்கவே செய்கின்றது; பிரச்சனைகளை அதன் செறிவான பல கூறுகள் கொண்ட தன்மைகளிலிருந்து மட்டுமே தீர்க்க வேண்டும். இந்த பல கூறுகளைக் கொண்ட அமைப்புகளை புரிந்துகொள்வது எப்படி என்பதே நம்முன் நிற்கும் இன்றைய நடைமுறை மற்றும் கோட்பாட்டுரீதியிலான அவசரப் பிரச்சனை.

இந்த அக்கறையே என்னுடைய அரசியல் செயற்பாடுகளைத் தீர்மானிக்கிறது; இடதுசாரி இயக்கங்களுக்குள் எனது பணி என்பது இயற்கையுடனான நமது உறவை மனிதகுல விடுதலைக்காக நடக்கும் உலகளாவிய போராட்டங்களிலிருந்து பிரித்துப் பார்க்க இயலாது என வாதிடுவது. சூழலியல் இயக்கங்களுக்குள் எனது பணி என்பது "இயற்கையின் ஒத்திசைவு (Harmony of Nature)" எனும் முற்காலத்திய சூழலிய வாதிகளின் கருத்தியலை எதிர்ப்பது மற்றும் இன்றைய செயல்பிறழ்ச்சிக்கான காரணங்களை சமூக உறவுகளில் (Social relations) கண்டடைய வலியுறுத்துவது ஆகும். அதே வேளையில் என்னுடைய அரசியலே என்னுடைய அறிவியல் நெறிமுறைகளை (scientific ethics) தீர்மானிக்கிறது. சமூக அநீதியை சகித்துக் கொள்கிற, சரியென நிறுவுகிற, உயர்த்திப் பேசுகிற அத்தனை கோட்பாடுகளும் தவறானவையே என்பதை நம்புகிறேன்.

அறிவுசார் வாழ்க்கையின் கட்டமைப்பை பற்றிய இடதுசாரிகளின் விமர்சனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி அறக் கட்டளைகளின் கலாச்சாரத்திற்கு எதிர்பலமாகத் திகழ்கின்றன. 1960 - 1970களில் அன்றைய (வியட்னாம்) யுத்த எதிர்ப்பு அமைப்புகள், ஆளும் வர்க்கத்தின் ஒரு உறுப்பாய் இருந்து செயல்படும் பல்கலைக்கழகங்களது இயல்பை ஒரு பிரச்சனையாக கையிலெடுத்தது. இதன் மூலம் அறிவுசார் சமூகத்தையே (கோட்பாட்டு மற்றும் நடைமுறை ரீதியிலான முக்கியத்துவம் வாய்ந்த) ஒரு ஆய்வுபொருளாக மாற்றினர். எம்.ஐ.டி பல்கலைக்கழக வளாகங்களில் நடக்கும் இராணுவ ஆராய்ச்சிகளை கண்டித்து 1967இல் நடந்த ஆய்வாளர்களின் வேலை நிறுத்தத்திலிருந்து தொடங்கிய "மக்களுக்காக அறிவியல்" எனும் இயக்கத்தில் நான் இணைந்து கொண்டேன். அதன் உறுப்பினராக பசுமை புரட்சியையும் மரபணு தீர்மானவியலையும் (Genetic Determinism) எதிர்க்க உதவினேன். யுத்த எதிர்ப்பு செயல்பாடு என்பது என்னை போர் குற்றங்களை (முக்கியமாகப் போரின்போது மரங்கள் மற்றும் செடிகளின் இலைகள் உதிர்வதற்காக பயன்படுத்திய பயிர் கொல்லிகளின் (defoliants) பயன்பாட்டை பற்றி) விசாரிப்பதற்காக வியட்நாம் கொண்டு சென்றது. அங்கிருந்து "வியட்நாமிற்காக அறிவியல்" எனும் இயக்கத்தை ஒருங்கிணைக்கும் செயல்பாட்டிற்கு நகர்த்தியது. வியட்னாம் காடுகளில் பயன்படுத்தப்பட்ட ஏஜெண்ட் ஆரெஞ்சு (Agent Orange) எனும் பயிர்க் கொல்லி அங்கு வாழும் வியட்னாமிய விவசாய சமூகங்களில் பிறப்பு குறைபாடுகளை (Birth Defects) ஏற்படுத்தியதைக் கண்டு போரில் அதன் பயன்பாட்டை வன்மையாக கண்டித்தோம். போரின்போது பயன்படுத்திய இரசாயன பயிர்க் கொல்லிகளிலேயே ஏஜெண்ட் ஆரெஞ்சுதான் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது.

ப்யூர்டோ ரிக்கோவின் விடுதலை இயக்கம் எனக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வை ஊட்டியது. அது "கட்டமைப்பு சீர்திருத்தம்" போன்ற பல சொற்சிலம்புகளால் பேரரசின் நலன் காக்கத் துடித்து செயல்படும் எனது பல்கலைக்கழகத்தினுள் எனது செயல்பாடுகள் எவ்வாறானதாக இருக்க வேண்டும் என தீர்மானிப்பதற்கு பேருதவியாய் அமைந்தது. என் மனைவியின் கூர்மையான உழைக்கும் வர்க்க பெண்ணியப் பார்வையானது அங்கே முற்றும் முழுமையாக வியாபித்திருந்த மேட்டிமைத்தனம் (elitism), பாலின அடிப்படையிலான பாகுபாடு (Sexism) ஆகியவை பற்றிய தொடர்ச்சியான விமர்சனத்தின் மூலாதாரமாக விளங்கியது. போட்டி மனப்பான்மை கொண்ட, தனிநபரின் நலனை மட்டுமே பேணும், ஒரு சுரண்டல் சமூகத்திற்கு, மாற்று உள்ளது என்பதை கியூபாவுடனான தொடர் செயல்பாடுகள் தெள்ளத்தெளிவாக எனக்குப் படம் பிடித்துக் காட்டியது.

பொதுவாக கல்விசார் சமூகம் அசட்டை செய்யும் பிரச்சனைகளை சமூக இயக்கங்களும் (குறிப்பாக ஒதுக்கப்பட்ட சமூகங்களுக்கிடையே இயங்குபவர்கள்) மற்றும் பெண்கள் நலன் சார்ந்த இயக்கங்களும் தொடர்ந்து எழுப்பி வருகின்றன : மாசசூசெட்ஸின் ஹூபர்ன் நகர தாய்மார்கள் தங்கள் சுற்றத்திலிருக்கும் குழந்தைகளுக்கு மட்டும் அதிக அளவில் இரத்தப் புற்று நோய் தாக்குவதைக் கண்டறிந்தது, கறுப்பின மற்றும் லத்தீன் அமெரிக்க மக்கள் வாழும் பகுதிகளில் மட்டும் அதிக அளவில் நச்சுக் கழிவுகள் குவிக்கப்படுவதை எதிர்த்து நூற்றுக் கணக்கான சுற்றுப்புறச் சூழலியக்கங்கள் நீதிக்காகப் போராடுவது, புற்று நோய் மற்றும் பலவிதமான வியாதிகளுக்கான சூழலியல் காரணிகளின் பங்கு பற்றி பேசிவரும் "பெண்கள் சமுதாயத்தின் புற்றுநோய்க்கான திட்டம்" என்ற இயக்கம், என பல்வேறு இயக்கங்கள் பல விடயங்களை தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில் நமது பல்கலைக்கழகங்களோ புற்றுநோய் விளைவித்து

குற்றமிழைத்த மரபணுக்களை தேடும் படலத்திலேயே தேங்கிக் கிடக்கின்றன. இச்சமூக இயக்கங்களின் செயற்பாடுகளும் முன்னெடுப்புகளுமே எனது கோட்பாடு மற்றும் நடைமுறைசார்ந்த ஆய்வுகளுக்கு ஒரு மாற்று நிகழ்ச்சிநிரலை பேணுவதற்கு உதவி புரிகின்றது.

பல்கலைக்கழகத்தினுள் எனது சகாக்களிடமும் கல்வி நிறுவனத்திடமும் ஒரு முரண்பாடுடைய உறவுமுறையே நிலவுகிறது - ஒத்துழைப்பு மற்றும் மோதல் என இரண்டிற்குமான கலவை. உடலாரோக்கியம் சார்ந்த ஏற்றத்தாழ்வுகள், தொடரும் ஏழ்மை போன்றவைகளை பற்றிய அக்கறைகளை நாங்கள் பகிர்ந்து கொள்வோம். ஆனால் காப்புரிமை பெறும் வகையிலான மூலக்கூறுகளை கண்டடையும் கார்ப்பரேட் நிறுவனங்கள் நிதியளிக்கும் போக்கை பற்றியும் தனது பேரரசின் நலனுக்காக பாடுபடும் ஏ.ஐ.டி. (சர்வதேச வளர்ச்சிக்கான இயக்கம்) போன்ற அரசாங்க முகமைகளைப் (government agencies) பற்றியும் எப்போதுமே மோதிக்கொள்வோம்.

கல்விச் சமூகத்தில் வழக்கமாக எது 'வெற்றிகரமான பணி வாழ்க்கை' என கருதப்படுகிறதோ அதற்காக நான் எப்போதுமே ஆசை கொண்டது கிடையாது. அறிவியற்சமூகம் சிறந்த அறிவியலாளர்களைக் கண்டறிந்து ஊக்குவிக்க கட்டமைத்து வைத்திருக்கும் முறையான அமைப்புகளினுள் எனக்கான அங்கீகாரத்தை நான் தேடியதில்லை. அதுபோலவே எனது தொழிற்சார் சமூகத்தினரிடையே நிலவும் பொதுவான கற்பிதங்கள் எதையும் ஏற்றுக்கொள்ளாமல் செயல்பட முயற்சிக்கிறேன். இது எனது (ஆய்வு மற்றும் செயல்பாடுகள் சார்ந்த) விருப்பத்தெரிவுக்கு பரந்த ஒரு சுதந்திரத்தை கொடுக்கின்றது. ஆகவே தேசிய அறிவியல் அகாடெமியில் (National Science Academy) நான் இணைய மறுப்புத்தெரிவித்த போது இக்கடினமான முடிவை எடுத்ததற்கு ஆறுதல் கூறியும் எனது தைரியத்தை பாரட்டியும் பல கடிதங்கள் வந்தன. ஆனால் நேர்மையாக சொல்ல வேண்டும் என்றால் இம்முடிவு கடினமான ஒன்றாக இருக்கவில்லை. ஏனெனில் இது நான் சார்ந்த சிகாகோவின் "மக்களுக்காக அறிவியல்" இயக்கத்தினுள் விவாதித்து எடுக்கப்பெற்ற ஒரு கூட்டு அரசியல் நிலைப்பாடு. வியட்னாம்-அமெரிக்க போர்களில் அகாடெமி அளிக்கும் உதவியை, ஒத்துழைப்பிற்கு எதிராக ஒரு பொது நிலைப்பாடு எடுப்பது, அவர்களிடம் இணைந்து செயலாற்றி அவர்களின் முடிவுகளில் உள்ளிருந்து செல்வாக்கு செலுத்த முயற்சிப்பதைக் காட்டிலும் பயனுள்ளதாக அமையும் என நாங்கள் தீர்மானித்தோம். டிக் லேவாண்டின் (Dick Lewontin) இதை முன்பே செய்ய முயன்று தோல்வியுற்று பூருஸ் வேலாஸுடன் (Bruce Wallace) வெளியேறியிருந்தார்.

கணிதம் மேற்கொள்வது என்பது எப்போதுமே எனக்கு மகிழ்வு தரும் ஒரு செயல்பாடு. தெளிவற்ற விடயங்களை தெளிவுள்ளதாக்குவது அதன் பணிகளில் முக்கியமான ஒன்றாகக் கருதுகிறேன். நான் எப்போதுமே இடைநிலைப்பட்ட சில கணிதங்களை (mid-level maths) முறைசாரா வழிகளில் பயன்படுத்தி ஒரு நிகழ்வின் புரிதலை ஊக்குவிக்க முயலுவேனே தவிர இதுதான் நடக்கும் என ஜோசியம் கூற பயன்படுத்த மாட்டேன். இன்று கணித ஒப்புருவாக்கம் (Mathematical Modelling) என்பதன் நோக்கம் துல்லியமான சமன்பாடுகளை (precise equations) கொண்டு துல்லியமான கணிப்புகளை (precise predictions) கண்டறிதல் ஆகும். இது பொறியியலில் சரி. அதுபோல உலகத்தின் முழுக்கட்டுப்பாடும் தங்கள் கைகளில்தான் உள்ளது என நம்பி தங்கள் எஜமானர்களின் முயற்சிகளுக்கும் முதலீடுகளுக்கும் பங்கம் ஏற்படாதவாறு ஒரு உகந்த சூழ்நிலையை உருவாக்க பல திட்டங்கள் தீட்டும் ஆளும் வர்க்கத்தினரின் ஆலோசகர்களுக்கு இக்கணித ஒப்புருவாக்க முறை சரிப்படும். ஆனால் இவர்களை எதிர்ப்பவர்களுக்கு அதுபோன்ற எந்த மாயையும் இல்லை. இந்த முறையைக் கொண்டு நாம் செய்ய உகந்த காரியம் என்பது இந்த சமூக கட்டமைப்பின் வரையறைகளை எங்கே நீட்டிக்கலாம் என முடிவுசெய்வது. இதற்கு பண்புசார் கணிதமே (Qualitative Mathematics) மிகவும் பயன்படும். என்னுடைய ஆய்வில் பயன்படுத்திய மடக்கு பகுப்பாய்வு (loop analysis) இந்த வகையைச் சாரும். பண்புசார் மற்றும் அளவுசார் பகுப்பாய்வுகள் (Qualitative and Quantitative Mathematics) எதிரெதிரானவைகள், அளவுசார் கணிதம் பண்புசார் கணிதத்தைக் காட்டிலும் சிறந்தது போன்ற கூற்றுகளை நிராகரித்து, எந்தக் கணித கருவிகள் பல்வேறுக் கூறுகளை கொண்ட ஒரு கூட்டும நிகழ்வை (complex phenomena) புரிந்து கொள்ள, கருத்துருவாக்க முயல உதவுகிறதோ அதை நான் பயன்படுத்தி வந்திருக்கிறேன்.

அரசியல் செயல்பாடு என்பது நிச்சயமாக அடக்குமுறைகளை கட்டவிழ்க்கும் எந்திரங் களின் கவனத்தை நம் மேல் ஈர்க்கத்தான் செய்யும். நான் இவ்விடயத்தில் ஒரு அதிர்ஷ்டசாலி. மற்றவர்களைக் காட்டிலும் மிகச் சில அடக்கு முறைகளுக்கு மட்டுமே உள்ளாகியுள்ளேன். பலர் தங்களது வேலையிழந்து, பல ஆண்டுகள் சிறைவாசப்பட்டு வன்முறைகளுக்குள்ளாகி தாங்களும் தங்கள் குடும்ப உறுப்பினர்களும் துன்புறத்தல்களுக்குள்ளாகி நாடுகடத்தப்பட்டு என பலவகை இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர். இவர்கள் பெரும்பாலும் ப்யூர்டோ ரிகாடர்கள், ஆப்பிரிக்க அமெரிக்கர்கள், பூர்வகுடி செவ்விந் தியர்கள் போன்றவர்களின் விடுதலை இயக்கத் தவர்களாக இருந்தனர், அதில் ஃப்ளோரிடா மாகாணத்தில் கைது செய்யப்பட்டு இன்று வரை சிறையில் அரசியல் கைதிகளாக இருக்கும் ஐந்து கியூப தீவிரவாத எதிர்ப்பாளர்களும் அடங்குவர்.

சுரண்டல் என்பது மக்களை துன்புறுத்திக் கொல்கிறது. இனவாதமும் பாலின வேறுபாடும் உடல்நலனை அழித்து உயிரைக் குலைக்கிறது. இன்றைய முதலாளித்துவத்தின் பேராசை, மிருகத்தனம் மற்றும் அதன் ஆரவாரத்தன்மை எனக்கு துன்பத்தை தருவதாகவும் ஆத்திரமூட்டுவ தாகவும் உள்ளது. சில நேரங்களில் என்னை ஆசு வாசப்படுத்திக்கொள்ள ஜோனதன் ஸ்விஃப்டின் "நிதானமிழந்த மோசமான தருணத்தில் ஒரு நாட்டுப்பாடல்" -லிருந்து அதன் கடைசி வரிகளைப் பாடுவேன் :

"தேம்ஸ் நதியின் படகோட்டியை போல
துடுப்பு போடுகிறேன் நான்
அவர்களை வசைபாடுகிறேன்

எப்போதுமே சிரிக்கும் துறவியை போல
எனது வெஞ்சினத்தை
கேலிப் பேச்சுக்களால் கழிக்கின்றேன்

ஆனால் இதை உணர்ந்தே ஆகவேண்டும்
சமயம் வாய்த்தால் - நான்
தூக்கிலேற்றிடுவேன் அவர்களை"

எனது கல்வி சார் செயல்பாடுகளும் அரசியல் செயல்பாடுகளும் எனக்கு நான் விரும்பும் மனிதர்களுடன் என்னை அறிவார்ந்த முறையில் உற்சாகப்படுத்தும் ஆய்வுகளை சமூகத்திற்கு பயனுள்ள செயல்களை செய்த மகிழ்ச்சியான மற்றும் வெகுமதியான ஒரு வாழ்க்கையையே பெரும்பகுதிக்கு அளித்துள்ளது.

குறிப்பு : ஜான் மோண்ட்கோமேரி பிரவுன், மிசாவ்ரி சினாடின் லுதேரன் எபிஸ்கோபல் ஆயராக இருந்து பின்பு மார்க்ஸியராக மாறி யதால் திருச்சபையிலிருந்து வெளியேற்றப் பட்டார். 1930களில் "மதத்திற்கு எதிரான கொள்கை" என்ற காலாண்டு இதழை பதிப்பித்தார்.

ஏ.ஐ.டி. (AID - Aid for International Development) தங்களது மூலவுத்தி நலன்களுக்காக (Strategic Interests) தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றாம் உலகநாடுகளில் சுகாதாரம் மற்றும் வளர்ச்சிக்கான திட்டப் பணிகளை மேற் கொள்ளுகிறது. அதன் தனிப்பட்ட சில திட்டப் பணிகள் சில நேரங்களில் உதவியாகவும் அதில் பங்குபெறுபவர்கள் மனிதாபிமான அக்கறையின் பேரிலேயே உதவிபுரிபவராக அமைவர். ஆனால் அந்த அமைப்பு வெனிசுவேலாவின், ஹைதியின் மற்றும் கியூபாவின் புரட்சிகளுக்கு எதிராகச் செயல்படும் கிளர்ச்சியாளர்களுக்குத் தொடர்ந்து ஆதரவாக செயல்படும் ஒரு தீவிர வாத அமைப்பும் கூட. ஒரு கட்டத்தில் உருகுவே மற்றும் பிரேசிலின் காவலதிகாரிகளுக்கு LEAP (சட்டத்தை அமல்படுத்த உதவும் திட்டம்) என்ற பெயரில் கைதிகளை எவ்வாறு சித்தரவதை செய்வது என்பதை கற்றுக் கொடுத்தனர்.

**தமிழில் - பிரதீப் குமார்**
**நன்றி - மன்த்லி ரிவ்யூ, நியூயார்க், ஜன, 2008**

❖

அனுபவங்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது போராட்டங் களின் வடிவங்களையும் வழிமுறைகளையும் அப்படியே ஒரு குறிப்பிட்ட நிலமைகளி லிருந்து மற்றொரு நிலமைக்கு ஒரு நாட்டி லிருந்து மற்றொரு நாட்டிற்கு யாந்திரீகமாக மாற்றி ஏற்றுமதி செய்வது என்பதல்ல. இந்த நிலமை நமது கட்சிகளில் அடிக்கடி ஏற்படுகிறது........ எல்லாவகையான வாய்வீச்சுக்களை, பழகி சலித்துப்போன சூத்திரங்களை பயன்படுத்துவதை, பகட்டுத் தனத்தை, குறுட்டுத்தனமான கோட்பாட்டு முறைகளை ஒதுக்க வேண்டும்.

**- டிமிட்ரோவ்**

# மாட்டுக் கறியும் பார்ப்பனியமும் இந்துத்துவ பாசிசமும்
## - சில வரலாற்று உண்மைகள்

- விவேக்

*குறிப்பு:* இக்கட்டுரையில் தரப்பட்டுள்ள தமிழ் இலக்கியச் சான்றுகள் அருணனின் "தமிழரின் தத்துவ மரபு" (முதல் பகுதி) என்ற நூலிலிருந்து ஏறக்குறைய / அப்படியே எடுத் தாளப்பட்டுள்ளன.

மாட்டுக் கறியை மூலதனமாக வைத்து கசாப்புக் கடை அரசியலை நடத்தி வருகின்றன ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள். தாத்ரி படுகொலை, ஜம்முவில் மாடுகளை ஏற்றிச் சென்ற ஓட்டுநர்கள் கொலை என முஸ்லீம்களுக்கு எதிரான மதவெறி தாக்கு தல்களுக்கு "கோ மாதாவை" பகடைக்காயாக பயன்படுத்துகின்றனர். இந்துக்களின் உணர்வை "பசுவதை" புண்படுத்துவதாகவும் "பாரத"ப் பாரம்பரியத்திற்கு எதிரானதெனவும் முழங்கி முஸ்லீம்களுக்கெதிராகவும் தலித்துகளுக்கெதி ராகவும் பகைமை உணர்வைப் பரப்பி வருகின்றனர். நாடு முழுக்க பசுவதை தடைச் சட்டம் கொண்டு வர வேண்டுமென பெருங்கூச்சல் போட்டு வருகின்றனர்.

உண்மையில், ஆர்.எஸ்.எஸ். தூக்கிப் பிடிக்கும் பிராமணிய சக்திகளால் எல்லாக் காலத்திலும் மாட்டுக்கறி மறுக்கப்பட்டதா? இவர்களின் புனித நூலான வேதம் மாட்டுக்கறியைத் தடை செய் துள்ளதா? இதற்கு தெட்டத் தெளிவான பதில், "இல்லை." என்பதுதான். ஆம், வரலாறு காட்டும் உண்மை இதுதான்.

### வேத வேள்வியும் மாட்டுக் கறியும்

கால்நடை மேய்ப்பு இனக் குழுக்களாக இந்தியா வுக்குள் வந்த ஆரிய குலங்கள் (வேதத்தின் படைப் பாளர்கள்) மாடு உள்ளிட்ட புலால் உணவை விரும்பி உண்பவர்களாகவே இருந்தன. வேதங் களில் பல பிராமண "ரிஷிகள்" மாட்டுக் கறியின் பெருமையைப் பேசியதற்கு ஏராளமான எடுத்துக் காட்டுகள் உள்ளன. வேத பார்ப்பனியம் வேள்வி களை (யாகங்களை) தனது அடிப்படையாகக் கொண்டது. பழங்குடி மக்களின் சடங்கான தீயில் விலங்குகளை இட்டுப் பகிர்ந்துண்ணுவது, பின்னர் வேள்வி என்ற பெயரில் பார்ப்பன பூசாரிகள் தமது பங்காக விலங்குகளையும் இதர உணவுப் பொருட்களையும் பெறும் சடங்காக மாறியது. பழங்குடி மக்களின் உபரியைச் சுரண்டும் ஒரு வழிமுறையாகின வேள்விகள். இந்த வேள்வி களில் தேவர்களுக்கு பலியிடுவதாக சொல்லிக் கொண்டு பார்ப்பனர்கள் மாடு, ஆடு, குதிரை போன்ற விலங்குகளை தீயிலிட்டுச் சுட்டுத் தின்றனர். வேதங்களில் மாட்டு இறைச்சியின் சுவையை சிலாகித்துப் பாடும் பாடல்கள் உள்ளன. ஆர்.எஸ்.எஸ். மற்றும் பார்ப்பனியக் கும்பல்கள் இந்த வரலாற்று உண்மையை மறைத்து விட்டுத் தான், கோமாதாவை வைத்து போலி அரசியலை நடத்துகின்றன. இந்த உண்மையை வெளியிட்ட பல வட இந்திய வரலாற்று ஆய்வா ளர்களையும் கூட இவர்கள் மிரட்டுகின்றனர்.

### வேதம்-வேள்விகளை எதிர்த்து எழுந்த சமண-பௌத்த மதங்கள்

அக்காலத்தில் வேத பார்ப்பனியத்தின் வேள் விகளையும் வருணாசிரமக் கொள்கையையும் (பிராமண, சத்திரிய, வைசிய இரு பிறப்பாளர்கள் சூத்திரர்களை ஒடுக்கிய) கடுமையாக எதிர்த்தவை சமண - பவுத்த மதங்களே. விவசாயத்திற்கு முக்கிய கருவிகளாயிருந்த விலங்குகள் வேள்விகளில் அழிக்கப்படுவதை எதிர்த்ததன் மூலம் சமண மும் பவுத்தமும் சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவின. இவ்விரு மதங்களும் சில வேறுபாடுகளுடன் புலால் உணவை மறுத்து கொல்லாமையைப் பேசின. கொல்லாமை, கள்ளுண்ணாமை, துறவு ஆகியன சமண-பவுத்த மத போதகர்களால் கடைபிடிக்கப்பட்டு மக்களிடையே நற்குணங் களாக பெயர் பெற்றன.

வேத பார்ப்பனியத்தை எதிர்த்துக் கிளம்பிய பௌத்தமும் சமணமும் ஒரு சில நூற்றாண்டுக் காலத்திற்கு இந்தியாவின் பெரும் பகுதியில் ஆதிக்க மதங்களாக விளங்கின. மக்களிடையே

பெரும் செல்வாக்கைப் பெற்றன. அதே சமயம், ஆள்வோரின் (அரசர்கள்) ஆதரவு பெற்ற மதங் களாகவும் விளங்கின. வேத மதமும் பார்ப்பனி யமும் இவற்றிற்குக் கீழான நிலைக்குத் தள்ளப் பட்டன. அசோகனால் புகழ்பெற்ற மௌரியப் பேரரசும் ஹர்ஷப் பேரரசும் புத்தமத சார்பு அரசுகளாக இருந்தன. தெற்கிலோ சங்கம் மருவிய காலம் முதல் பக்தி இயக்கக் காலகட்டம் வரை சமணமே ஆதிக்க மதமாக விளங்கியது. மொத்தத்தில், வேத பார்ப்பனியம் இக்காலத்தில் இரண்டாம் நிலையிலேயே இருந்து வந்தது.

### சாதிய நிலவுடைமை சமூகத்துடன் அரியணை ஏறிய புதிய பார்ப்பனியம்

வேத மதத்தின் தொடர்ச்சியென கூறிக் கொண்ட புதிய பார்ப்பனியம் சாதி அடிப்படையிலான நிலவுடைமைச் சமூகத்தின் வளர்ச்சியுடன்தான் ஆதிக்கத்துக்கு வந்தது. ஆனால் இச்சமயத்தில் இது பழைய வேள்வி அடிப்படையிலான வேத மதத்திலிருந்து வேறுபட்ட ஒரு புதிய வடிவை எடுத்திருந்தது. பார்ப்பனர்களை முதன்மையா கவும் தீண்டத்தகாதவர்கள் என்று கூறி ஒடுக்கப் பட்ட மக்களை அடிமையாகவும் பெரும் எண்ணிக்கையிலான சூத்திர சாதிகளை கடைசி யாகவும் கொண்ட சாதியமைப்பை நியாயப் படுத்தும் புதிய வருணாசிரம தத்துவத்தையும் தீட்டு, தூய்மை கோட்பாட்டையும் இந்த புதிய பார்ப்பனியம் தனது உள்ளடக்கமாகக் கொண் டிருந்தது. வடக்கில் பார்ப்பனர் சாதி இதர இரு பிறப்பாளர்களான சத்திரிய, வைசிய சாதிகள் கணிசமான எண்ணிக்கையில் இருந்தன. தெற்கிலோ, விரல்விட்டு எண்ணக்கூடிய பார்ப் பனரல்லாத சாதிகளைத் தவிர்த்த அனைவருமே சூத்திரர்களாகத்தான் கருதப்பட்டனர். கிராம அளவில் தொழில் அடிப்படையில் சாதிகளை ஒழுங்குபடுத்திய பார்ப்பனிய சாதியம் இந்தி யாவின் நிலவுடைமை அமைப்பின் அடிப் படையில் அமைந்தது. இக்காலத்தில், பார்ப்பனிய சாதி முறையில் ஏற்றுக் கொண்ட மற்றும் வேத-உறைவிடங்களை பின்பற்றுவதாக கூறிக் கொண்ட சைவ-வைணவ மதங்கள் வன்முறை மூலமாக சமண-பவுத்த மதங்களை வீழ்த்தின. தமிழகத்தில் கழுவேற்றங்களும் அனல்-புனல் வாதங்களும் சமண-பவுத்த மதங்களை சுவடு கூட தெரியாத அளவுக்குத் துடைத்தெறிந்தன. சமண-பவுத்த பள்ளிகளும் யாழிகளும் தகர்க்கப் பட்டு சிவ-திருமால் கோவில்களாயின. பக்தி இயக்கம் இந்த மாற்றங்களை நிறைவேற்றும் கருவியாகச் செயல்பட்டது.

இக்காலகட்டத்தில்தான் பார்ப்பனியம் மாட்டை தெய்வமாக்கியது. இது நிலவுடை மையின் விவசாய முறையுடன் பொருந்தியது. முன்னர் அவர்களின் வேள்வி நெருப்பில் சுட்டுத் தின்னப்பட்ட மாடுகளுக்கு இப்போது பார்ப்பனர்கள் தெய்வ அந்தஸ்தை வழங்கினர். மறுபுறம், சமண-பவுத்த துறவிகளின் புலால் மறுப்பை தந்திரமாகத் திருடி பார்ப்பனர்கள் தம்மையும் புனிதர்களாக்கிக் கொண்டனர். மக்களால் உயர் பண்பாக கருதப்பட்ட சமணர்-பௌத்தரின் புலால் உண்ணாமைக் கொள்கை யைப் பயன்படுத்தி, பிறப்பால் உயர்ந்தவர் பார்ப்பனர் என்ற கற்பிதத்தை மேலும் உறுதிப் படுத்திக் கொண்டனர். தமது புனித விலங்கான மாட்டை உண்பவர்களை சமூகத்தின் கீழான நிலையினராகக் காட்டினர். இதர விலங்குகளின் இறைச்சியை உண்டோர் இடைநிலை சாதிகளில் இருந்தனர். இவர்களும் பார்ப்பனியக் கருத்தாக் கத்தின்படி மாட்டுக்கறி தின்பதை தீட்டாகவே கருதினர். பார்ப்பனியம் தனது சாதியமைப்புக்கு ஏற்ப உணவின் அடிப்படையில் புலால் உண்ணா தவர், மாட்டுக்கறி தவிர்த்த புலால் உண்பவர் மற்றும் மாட்டுக்கறி தின்பவர் என்ற ஒரு கருத் தியல்ரீதியான படிநிலையை உருவாக்கியது. சமண மதத்தில் எவ்வுயிருக்கும் தீங்கிழைக்கக் கூடாதென்ற ஒரு உயர் ஒழுக்கமாகக் கருதப் பட்ட கொல்லாமை, புதிய பார்ப்பனியத்தால் மனிதர்களை பிறப்படிப்படையில் பிரிக்கும் மனிதநேயமற்ற சாதிய முறையின் தீட்டுக்களில் ஒன்றாகச் சிறுமைப்படுத்தப்பட்டது.

மாட்டைக் (பசுவை) கொல்வது ஒரு மிகப் பெரிய குற்றமாக பார்ப்பனிய சட்டத்தால் கருதப்பட்டது. பெரும்பான்மை மக்களான சூத்திரர்-தாழ்த்தப்பட்டோரையும் சமூகத்தின் பாதியான பெண்களையும் கொல்வதை ஒரு சாதாரண விசயமாகக் கருதிய ஒரு சம்பிரதாயம் மாட்டைக் கொல்வதை பெருங்குற்றமாகக் கருதியது. இது அதன் கோட்பாட்டு மோசடியை வெளிப்படுத்துகிறது. அனைத்து உயிர்களையும் துன்புறுத்தக் கூடாது என்ற சமணக் கோட்பாட் டோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் பார்ப்பனிய அகிம்சையின் மோசடிப் பண்பு தெளிவாக வெளிப்படும். இங்கு இன்னொரு விசயத்தையும் குறிப்பிட வேண்டும். பார்ப்பனர்கள் கொலையே

செய்தாலும் கூட அவர்களுக்கு மரணதண்டனை யைத் தரக்கூடாது என்ற பார்ப்பனியச் சட்டத் தையும் இணைத்துப் பார்த்தால் இவர்களுடைய அகிம்சையின் அயோக்கியத்தனம் நமக்குப்புரிய வரும். உண்மையில், புதிய பார்ப்பனியத்தின் புலாலுண்ணாமையும் பசுவதைத் தடையும் சாதிய ஒழுங்கைப் பராமரிக்கும் தீட்டு என்பதற்கு மேல் வேறொன்றுமில்லை. அதில் மனித நேயமோ உயிர்களிடம் அன்பு செலுத்தும் அறமோ துளியும் இல்லை.

நிலவுடைமை சமூகமும் பார்ப்பனிய சாதிய முறையும் நீண்ட காலமாக நீடித்து வருவதன் விளைவாக சூத்திரர்கள் மற்றும் இரு பிறப்பா ளர்கள் இடையே மாட்டுக்கறி உண்பது இழிவானது என்ற கருத்து ஆழமாக நீடித்து வருகிறது. மறு புறம், சாதிமுறையில் கீழே தள்ளப்பட்ட தாழ்த் தப்பட்ட மக்களில் பெரும்பான்மையினரும் பல பழங்குடிகளும் மாட்டுக்கறியைத் தமது உணவாகக் கொள்வது தொடர்ந்து இருந்து வருகிறது. பார்ப்பனிய கோட்பாட்டை ஏற்காத கிறித்தவர்களும் முஸ்லிம்களும் கூட மாட்டுக் கறியை தமது உணவாக உட்கொள்ளுகின்றனர். இன்றைய சூழலில் நகர்ப்புறங்களின் பெரும் பான்மை அடித்தட்டு மக்களுடைய உணவாக மாட்டுக்கறி உள்ளது.

நாம் ஆர்.எஸ்.எஸ்-மற்றும் பார்ப்பனிய கும்பலின் "மாட்டுக்கறி" அரசியலின் நோக்கத் தைப் பார்க்கும் முன்னர் வேத பார்ப்பனர்கள் மாட்டுக்கறி தின்றதற்கான தமிழ் இலக்கிய ஆதாரங்களை சிறிது பார்ப்போம்.

வேதியர்கள் மாட்டுக்கறி தின்றதைக் காட்டும் சில இலக்கிய ஆதாரங்கள் நாம் வேத காலப் பார்ப்பனர்கள் மாட்டுக்கறி உண்பதை நிரூபிக்க வேதங்களைப் புரட்ட வேண்டிய அவசியமில்லை. பண்டையத் தமிழ் இலக்கியங்களே அவற்றிற்கு சாட்சியாக உள்ளன. அவற்றில் சில காட்சிகளை மட்டும் காண்போம். சமண காப்பியமான நீலகேசி வேதப் பார்ப்பனர்களைப் பார்த்து இப்படிக் கேட்கிறது.

"வசுக்கல் வருத்திரர் மீத்ரரொரு
இவர் முதலாம் பிறர்க்கும்
பசுக்களோடு எருமைகள் குதிரைகள்
புலியோடு நாய் முதள
இசு கழிந்தன பல கொலைகளும்
இரங்கலிர் கொன்று அவரை
அசிப்பவர் போன்ற நீர் ஆயினும்
அருவினையா நமக்கே"

இதன் பொருள், "வசுக்கள் உருத்திரர், பீதிரர் ஆகியோருக்காக என்று சொல்லிக் கொண்டு வேள்வியில் சிறிதும் இரக்கமின்றி பசு, எருமை, குதிரை, புலி மற்றும் நாய் போன்ற விலங்குகளைக் கொலை செய்கிறீர்கள். அந்த தேவர்களுக்கு ஊட்டுவது போல நடித்து நீங்களே புசிப்பீர். எனவே, இந்தத் தீவினை உங்களையே சாரும்."

இது வடநாட்டில் மட்டுமல்லாமல் அன்றைய தமிழகத்திலும் வேத பார்ப்பனர்கள் வேள்வி என்ற பெயரில் மாடு உள்ளிட்ட பல விலங்கு களைக் கொன்று தின்றதையே காட்டுகிறது.

அதே நீலகேசி அந்த வேள்விகளையே கீழ் வருமாறு வேள்விக்குள்ளாக்குகிறது.

"நண்பரை நுதலியும் மனசுவரை
நுதலியும் அமிர்தோடு நடந்த
உண்பார்க்கு அல்லது அவர்களுக்கு
ஆம் என உரைக்குரல் யார்
பண்பீலீ தேவதை நுதலில்
கொலையினில் பல் வினைதான்
உண்பல வகையினின் அடைந்தவை
விளையுங்கள் உன் நமக்கு என்றான்"

"தன் நண்பன் நீடுழி வாழவேண்டும் என்று ஒருவன் அமிர்தம் உண்டான். இன்னொருவனோ தனது எதிரி அழிந்து போகட்டும் என நஞ்சு அருந்தினான். இந்த இரண்டின் பலனும் உண்ட வர்களுக்குத்தானே போகும். அந்த நண்பர் களுக்குப் போகும் என யார் சொல்வார்கள். அவ்வாறே தேவர்களுக்காக செய்யப்பட்ட கொலையாள் என்று சொன்னாலும் அதன் தீவினைப் பயன் உங்களையே சேரும்." என வேதவாதியைப் பார்த்து நீலகேசி சொல்கிறான்.

இதிலிருந்து வேள்விகள் ஏமாற்று வேலை என்பதையும் அவை வேதியர்களின் மாமிச இச்சைக்கான பெரிய அரும்புகழாகவே விளங்கின என்பதையும் அம்பலப்படுத்தியுள்ளது நீலகேசி.

இன்னொரு இடத்தில் நீலகேசி வேதத்தைத் தாக்கித் தகர்க்கையில்,

"......................................
கொலை மண்ணும் மருவுதலின்
ஐயம்இல் தீக்கதி செலுத்துவது"

என்று வேதத்தை சாடுகிறான். இங்கே வேள்விக் கொலைகளையே தனது சாரமாகக் கொண்டிருந்த வேத பார்ப் பனியத்தை நீலகேசி சரியாகவே தோலுரித்துக் காட்டியுள்ளது. மாட்டுக்கறி வெறியை அம்பலப் படுத்துகிறது. அக்கதை இதோ...

வாரணாசியில் அபஞ்சிகன் என்ற மறை ஓம்பாளன் இருந்தான். அவனுடைய மனையாளின் பெயர் பார்ப்பினி சாலி. அவள் ஒழுக்கம் தவறி நடந்துவிட்ட காரணத்தால் அந்தப் பாவம் போக்க "குமரி ஆடிய வருவாள்." வரும் வழியில் குழந்தை பிறந்து விடுகிறது. எனினும் "ஈன்ற குழந்தைக்கு இரங்கலாகி" மறைவான தொரு இடத்தில் அதை விட்டு விட்டுச் சென்று விடுகிறாள்.

பசியால் குழந்தை அழுததைக் கேட்டு "ஓர் ஆ(பசு) வந்து அணைத்து" ஆதரவு தந்தது. நாக்கால் நக்கிக் கொடுத்து பாலும் கொடுத்தது. இப்படி அந்தக் குழந்தை புத்திரன் ஆனது. அப்போது அவ்வழியே வந்த இளம்பூதி என்கிற "மறை ஓம்பாளனும்" அவனது மனையாளும் குழந்தை யைக் கண்டு அதை எடுத்துக் கொள்கிறார்கள். "ஆ மகன் அல்லன் என் மகன் என்றே" கொஞ்சுகிறான் அவன்.

இளம்பூதியின் இல்லத்தில் குழந்தை வளர்கிறான். உபநயனத்திற்கு முன்னரே அவன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குகிறான். சிறுவன் ஒரு நாள் அந்த ஊரிலுள்ள இன்னொரு அந்தணர் வீட்டிற்குச் செல்கிறான். அங்கே அவன் கண்ட காட்சியை மணிமேகலை விளக்குகிறது.

"ஆங்கு புலைசூழ் வேள்வியில்

வெரூஉம் பகை அஞ்சி வெய் தமர்த்துப் புலம்பிக்

கொலை நவில் வேட்டுவர் கொடுமரம் அங்கு

அஞ்சி நின்று அழைக்கும் ஆ துயர் கண்டு நெஞ்சு நடுச்சூழல் நெடுங்கண் நீர் உருத்து"

இதற்கு பொ.வே. சோமசுந்தரனார் கொடுத் துள்ள விளக்கவுரையை அப்படியே தருவோம்-

"அவ்விடத்தே அப்பார்ப்பனர்கள் தாம் மறுநாள் ஊன் தின்பதற்கு ஏதுவாக வேள்வி செய்ததாக ஒரு சூழ்ச்சி செய்து நிகழ்த்தும் வேள்விக் களத்திலே கொன்று தின்பதற்காக நிறமிக்க மலர் மாலைக் கொம்பின் கண் சுற்றப்பட்டு தன்னைக் கொல்பவரும்; தான் பெரிதும் அஞ்சி உய்திக் காணாமல் வெய்தாக பெரு மூச்செறிந்து வருந்தி கொலைத் தொழிலை மிகுதியாகச் செய்கின்ற வேடரின் வில்லிற்கு அஞ்சி ஓடிப் போய் அவர் விரித்த வலையில் அகப்பட்டுக் கொண்ட மான்போல அஞ்சி அவரால் கட்டப் பட்ட வேள்வித்தூண் மருங்கே நின்று அம்மா! அம்மா! என இடையறாது கதறி அழைக்கின்ற ஓர் ஆவினது துன்ப நிலையைக் கண்டு தனது நெஞ்சம் நடுங்கி நெடிய தன் கண்ணால் துன்பக் கண்ணீர் சொரிந்து."

அந்தக் காலத்தில் தமிழகத்தின் வேதியர்களும் வேள்வியில் பசுவைக் கொன்றார்கள். பசுவின் மாமிசத்தை உண்பதற்காகவே பசுவைக் கொன்றார்கள் என்பது தெளிவாகிறது. புத்த சமயம் இதைக் கண்டு கொந்தளித்தது. தனது எதிர்ப்பை அந்தச் சிறுவன் மூலம் இலக்கிய மாக்குகிறார் சாத்தனார். அன்று இரவு அந்தப் பசுவை அவிழ்த்துக் கொண்டு ஊரை விட்டுக் கிளம்பிவிடுகிறான். அந்தணர்கள் விசயம் அறிந்து அவனையும் பசுவையும் வளைத்துக் கொள்கிறார்கள். "புலைச் சிறுமகனே போக்கப் பகுதி என அலைக்கோல் அதனால் அறைந்தனர் கேட்ப" என்பது நடக்கிறது. அதாவது மரணத் திலிருந்து பசுவை காப்பாற்றியவனை "புலைச் சிறுமகனே" என்று திட்டியிருக்கிறார்கள். கோல் கொண்டு அடித்திருக்கிறார்கள். அடிபட்டாலும் பசுவைக் காப்பாற்றிய மனநிறைவோடு "நோவன செய்யுமின்" என அச்சிறுவன் அந்தணர்களுக்கு புத்தி சொல்லுகிறான். அவர்களுக்கு கோபம் வருகிறது. தங்களின் வேள்வியை இகழ்ந்ததன் மூலம் புனித வேதத்தையே இகழ்ந்துவிட்டதாகக் குமுறு கிறார்கள். "அருமறை நன்னூல் அறியாது இகழ்ந்தனன்" என்கிறார்கள்.

இதிலிருந்து மாடுகள் உள்ளிட்ட விலங்குகளை கொல்லும் வேள்வி முறையையே தங்களது வேத உட்பொருளாக வேதியர்கள் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகிறது.

சுருக்கமாகச் சொல்வதனில், வேதியர்கள் வேள்வி என்ற பெயரில் மாடு உள்ளிட்ட விலங்கு களைக் கொன்று தின்றுள்ளனர். இந்த வேள்வி களே வேதத்தின் உட்பொருள் எனக் கருதி உள்ளனர்.

இதை பண்டைத் தமிழ் இலக்கியத்தின் சில காட்சிகள் நமக்கு படம் பிடித்துக் காட்டியுள்ளன.

ஒரு பாசிச ஆட்சியைக் கட்டியமைப்பதன் பகுதியே ஆர்.எஸ்.எஸ்-இன் மாட்டுக்கறி அரசியல்.

ஒரு புறம் வரலாற்றாசிரியனாகப் பார்க்கையில் வேத பார்ப்பனீயமானது மாட்டுக்கறி உண்பதை தடை செய்யவில்லை என்பதோடு வேள்விகளில் பார்ப்பனர்கள் மாட்டுக்கறி உண்பதை நாம் கண்டோம். அதே போல், ஆர்.எஸ்.எஸ்-ஆல் இந்துச் சமூகம் என்றழைக்கப்படும் மக்களின் பகுதியாக உள்ள தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மாட்டுக்கறியை உணவாகக் கொண்டுள்ளனர். இத்தகையதொரு சூழ்நிலையில், ஆர்.எஸ்.எஸ். இந்துத்துவ கும்பல் மாட்டுக்கறியை வைத்து நடத்தும் வெறுப்பு அரசியலின் நோக்கம் என்ன? பார்ப்பனீய சாதியம் மக்களிடையே ஊட்டி வளர்த்துள்ள மாட்டின் புனித மதிப்பீடுகளைப் பயன்படுத்திக் கொண்டு முஸ்லீம்களுக்கெதிரான மதவெறியை தூண்டுவதுதான் இவர்களின் நோக்கம். முஸ்லீம் எதிர்ப்பை ஒரு மையப் புள்ளியாகக் கொண்ட இந்துத்துவ பாசிச கருத்தியலை பெரும் எண்ணிக்கையிலான மக்களிடம் வேரூன்ற வைக்க முயற்சிக்கின்றனர். உலக ஏகாதிபத்திய பொருளாதார நெருக்கடியின் சுமையை மக்கள் தலைமேல் சுமத்த விரும்பும் ஆளும் வர்க்கங்கள் ஒரு அப்பட்டமான பாசிச (சர்வாதிகார) ஆட்சியை நிறுவ விரும்பி

பாரத் மாதா கீ!! ஜெய்!!

பாரத் மாதா கீ!! ஜெய்!!

என்ற முழக்கத்தை இந்திய குடிமகனுக்கான குடியுரிமைச் சீட்டாக மாற்றிவிட்டார்கள் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள். இந்த முழக்கத்தை கூவ மறுப்பவர்கள் வேறு நாடுகளுக்குப் போய் விடலாம் என்கிறார் மராட்டிய முதல்வர் பட்னாவிஸ். காவி கட்டிய முதலாளி ராம் தேவோ "கழுத்தை வெட்டுவேன்" என்று மிரட்டுகிறார்.

பாரத் மாதா கீ ஜெய் என்றால் என்னவென்றே புரியாத இளங்கோக்களும் கருப்புசாமிகளும் என்ன செய்வார்கள்? இப்படி புரியாமல் தவிக்கும் தமிழர்களுக்காக இந்த முழக்கத்தை மொழி பெயர்த்து விடுவோம். "இந்திய தாய்க்கு வெற்றி" - இது பாரத் மாதா கீ ஜெய் என்பதன் தமிழாக்கம்.

"ஏம்பா... நாம் தமிழ்த்தாய் வாழ்த்து வேறு பாடிகினு கீறோம். நம்பளையும் நாடு கடத்திடுவானுங்களா?" என ஏழுமலை கேட்கிறார். "பதில் சொல்லுங்க ஜீ." "இல்ல ஜீ... இப்ப இல்ல. இப்ப முசுலீம்களுக்காகத்தான் இந்த விசயத்த எடுத்துண்டிருக்கோம். உங்க முறை வர கொஞ்ச நாளாகலாம்" என மோடிஜீயின் மனசாட்சி பேசக்கூடும்.

"நமக்கு வாயிலயும் நொய்ய மாட்டேங்கிது. புரியவும் மாட்டேங்கிது. இத்த எப்டிபா கூவுறது?" என்று கேட்கிறீர்களா? அப்படிக் கூவாவிட்டால் ஜீக்களின் இலக்கணப்படி நீங்கள் தேசத் துரோகிகள்... நாட்டுப் பற்றில்லாதவர்கள்... பிரிவினைவாதிகள்... "இந்த ஆர்.எஸ்.எஸ். நீங்க எல்லாம் வெள்ளக்காரன எதுத்த போராட்டத்துல கலந்துக்கவே இல்லியாமே!

இவங்கள்ளாம் தேசபக்தி பேசலாமா?" என்று கேட்கிறீர்களா? நீங்கள் தேசத்துரோக (124 - இந்திய தண்டனைச் சட்டம்) வழக்கை எதிர் கொள்வது நிச்சயம். இந்த சட்டத்தை போட்டது வெள்ளைக்காரன். அச்சமயம் தண்டனை அடைந்தது தேசபக்தர்கள் என்பதுதான் முரண்நகை.

"சரீங்க ஜீ... பாரத்து மாதான்னு நாட்டைத் தானே சொல்றீங்க. இங்க 2000 வருசமா மனுசன பொறப்பு அடிப்படையில் மேல, கீழன்னு பிரிச்சு வச்சுகிறீங்க. கருவறைக்குள்ள ஒரு சாதிக்காரன்தான் நுழைய முடியும். வேதம் அவந்தான் படிக்க முடியும். சூத்திரன் தாசி மகன்றீங்க. 5 இல் 1 பங்கு மக்கள தீண்டத்தகாதவங்கன்னு இரண்டாந்தர குடிமகனா ஒதுக்கி வச்சிருக்கீங்க. என் ஜாதி பொண்ண கல்யாணங் கட்டிக்கினன்னு வெட்றானுங்க. சாப்பாடும் தண்ணியுங்கூட ஒன்னா பொளங்குறதில்ல. நமக்குள்ளயே சமத்துவமில்ல. ஒற்றுமயில்ல. இதுல எப்டி ஜீ ஜெய்னு கூவுறது? ஏன் ஜீ? ஒரு வேள இந்த ஏற்றத்தாழ்வையும் ஒழுங்குமுறையையும் நாங்க மறக்குறதுக்குத்தான் அப்டி கூவச் சொல்றீங்களா? பதில் சொல்லுங்க ஜீ!"

"ஒரு சந்தேகம் ஜீ. உங்க தேசபக்த ஆட்சியில், பாரத மாதா மேனி முழுக்க டொயோடா, பிஎம் டபிள்யூ, ஹோண்டா, சுசுகி, ஆடின்னு அந்நியக் காராதான் ஜீ ஓடுது. நாம் அன்றாடம் பயன் படுத்தும் சோப்புல இருந்து எண்ணெய் வரைக்கும் 90% பொருட்கள் யுனிலீவர், ப்ராக்டர் அண்டு

கேம்பிள், ப்ரூக் பாண்டுனு வெளிநாட்டுக் கம்பெனிங்கதான் ஜீ விக்கிறான். திரேதா யுகமா... இல்ல கிருதா யுகமா... சரி இதோ ஒரு யுகத்துலேயே விண் ஓடங்கள்ல ரிஷிகள் பறந் தாங்கன்னு அரசியல் மாநாட்டுலயெல்லாம் பேசுறீங்க ஜீ. சந்தோசம். ஆணாக்க, சண்டை விமானத்துக்கு அமெரிக்காகிட்டயும் பிரான்சு கிட்டயும் கெஞ்சறீங்க. மருந்து முதல் மசுருக்கு போடுற சாயம் வரைக்கும் அந்நியக் கம்பெனி கள்தான் ஆதிக்கம் பண்றான். கேவலம்... குடிக்கிற தண்ணீர், குளிர்பானமும் கூட கோக், பெப்சி கைக்கு போயிடுச்சு. ஒவ்வொருத்தனும் வருசத் துக்கு பல இலட்சம் கோடிய அவன் நாட்டுக்கு எடுத்துனு போறான். நீங்க வேற பல இலட்சம் கோடிய வரி விலக்கு தர்றீங்க. வெள்ளக்காரன எதுக்கும்போது அந்த கோசத்தையும் போட்ட தாகக் கேள்வி. இப்பவும் பல நாட்டுக்காரன் நம்மள கொள்ளையடிக்கிறான். இப்ப போயி பாரத் மாதா ஜீ ஜெய்யின்னு கூவுனா மாதாவ கிண்டல் பண்ற மாதிரி இல்லீங்களா ஜீ. பதில் சொல்லுங்க ஜீ!''

“இன்னொரு டவுட் ஜீ. நம்ம மோடி ஜீ ஆ ஊன்னா வெளிநாட்டு மூலதனம் வரணும்னு கூவுறார். “இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள் (Make in India)ன்னு எல்லா வெளிநாட்டுக் காரனயும் கூப்பிடுறார். நாடு நாடா போயி எங்க நாட்டுல முதலீடு பண்ணுங்கன்னு கெஞ்சுறார். இதுதான் பாரத் மாதா ஜீ ஜெய்யா- பதில் சொல்லுங்க ஜீ!''

“சரிங்க ஜீ... விவசாயிங்க நெலத்த பன்னாட்டு - உள்நாட்டு முதலாளிங்களுக்குப் புடுங்கித்தர ஒரு சட்டத்த கொண்டு வந்தீங்களே. பழங்குடிகளோட காடுகளில் புடுங்கித்தர, மாவோயிஸ்ட் எதிர்ப்புன்னு சொல்லிகிட்டு பயல அனுப்புறீங்களே. மாறாக ஏழைகளோட குடிசைகள இடிச்சுட்டு வெளிநாட்டு மால்கள் கட்டுறீங்களே. இந்த நெலமெல்லாம் பாரத மாதா இல்லியா? பாரத மாதாவை வெளிநாட்டுக் காரனுக்கு பட்டா போட்டு தர்றீங்களே ஜீ. இதெல்லாம் கூட பாரத மாதா கீ ஜெய்தானா? பதில் சொல்லுங்க.''

“சரீங்க ஜீ.... லட்சக்கணக்கான தொழிலா ளிங்க வேல இழந்துகினு இருக்கும்போது, 90% தொழிலாளி, ஒப்பந்த, தற்காலிக தொழிலாளியா வாய்க்கும் வயத்துக்கும் போராடிகினு இருக்கும் போது, தொழிலாளர் உரிமைகளைப் பறிக்க புது சட்டம் போடுறீங்க. லட்சக்கணக்கான விவசாயிங்க தற்கொலை பண்ணிகினு சாகும்போது, வெதைக்கும் வெளிநாட்டு கம்பெனிய சார்ந் திருக்கும் வகையில் BT காட்டன், கத்தரிக்காக்கு அனுமதி தர்றீங்க. ஊறுகா வரைக்கும் வெளி நாட்டு மூலதனத்த அனுமதிச்சு பலகோடி சிறு தொழில் செய்யுறவங்கள போண்டியாக்குறீங்க. ஒங்க பாரத மாதா வெள்ளக்காரியா ஜீ. பதில் சொல்லுங்க ஜீ.''

“சரீங்க ஜீ... இப்ப எனக்கு ஒரு விசயம் தெளிவா புரிஞ்சிரிச்சு ஜீ. பாரதியார் நடிப்பு சுதேசினு பாடுனாரு. அவங்க வாரிசுதான நீங்க?''

மறுபுறம், இதே விசயத்தை வைத்து தாழ்த்தப் பட்ட மக்களையும் பழங்குடிகளையும் கீழான வர்களாக சித்தரிக்கும் பார்ப்பனீய கருத்தியலை மேலும் பலப்படுத்த முயற்சிக்கின்றனர். இதன் நீட்சியாக மாட்டிறைச்சி அல்லாத இறைச்சியை உண்ணும் சூத்திர சாதி மக்களையும் மட்டம் தட்டும் பார்ப்பனீய மேலாதிக்க வெறியுடன் பா.ஜ.க.வின் ஆட்சி நடைபெறும் மாநிலங் களில் ‘புனித நாட்களில்’ அனைத்து இறைச்சி விற்பனைக்கும் தடையை விதிக்கின்றனர். இந்துத்துவ பாசிசமும் பார்ப்பனியமும் பிரிக்க முடியாதவை என்பதுடன் மாட்டுக்கறியில் தொடங்கி இதர இறைச்சிக்கும் நீளும் அவர்களின் நீட்டு அரசியல் பெரும்பான்மை மக்களை கருத்தியல்ரீதியாக கீழ்மைப்படுத்து வதும் ஒரு பாசிச முயற்சியே. இதில் “புனிதம்”, “பாரதப் பண்பாடு”, “கோமாதா” போன்ற முழக்கங்கள் எல்லாம் மக்களை ஏமாற்று வதற்கான மோசடிகளேயன்றி வேறல்ல.

**(தோழர் விவேக் மதுரை சிறையில் இருக்கும் போது அனுப்பிய கட்டுரை)**

———— ❖ ————

ஊழியர்களை தேர்ந்தெடுப்பதில் நமது பிரதான அளவுகோல் எதுவாக இருக்க வேண்டும்?

குறிப்பிட்ட சந்தர்ப்ப சூழ்நிலையில் ஒருவர் தனது பொறுப்புநிலையை சுயேச்சை யாகக் கண்டுகொள்ளும் ஆற்றல், முடிவுகளை எடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கும் பயப் படாதிருத்தல். பொறுப்புகளை ஏற்றுக்கொள் வதற்கு பயப்படும் ஒருவர் தலைவரல்ல.

**- டிமிட்ரோவ்**

# இந்திய முதலாளித்துவத்தின் வளர்ச்சி

- ஸ்டிஃபான் ஏங்கல்*
தமிழில் : சரவணன் வீரையா

*(இந்திய துணைக் கண்டத்தில் இந்தியாவின் புதிய ஏகாதிபத்திய ஆதிக்கம்)*

(*ஆக. 2017இல் வெளியான*★★ On the Emergence of the New-Imperialist Countries by Stefan Engel *என்ற நூலிலிருந்து)*

*இந்தியா 1947இல் பிரிட்டனில் இருந்து தனது தேசிய சுதந்திரத்தை பெற்ற பிறகு, ஒரு வளம் நிறைந்த மற்றும் மக்கள்தொகை நிறைந்த நாடாக தொழில்மயமாக்கல் மற்றும் மூலதன பொருட்களின் உற்பத்திக்கு ஒரு விரிவான அடித்தளமிட்டது. இதற்காக பெரிய அளவிலான நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டன.*

*1956க்குப் பின்னர் சமூக ஏகாதிபத்திய சோவியத் ஒன்றியத்தின் புதிய காலனியத்துவத்திற்கு இந்தியாவின் சுயாதீனமான வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டது. இந்த சமயத்தில் இந்தியாவும் குறிப்பிடத்தக்க வகையில் அதிகாரத்துவ-முதலாளித்துவ அம்சங்களை வளர்த்ததானது அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் எதிர்கால வெளிப்பாடுக்கான ஒரு எதார்த்தமான அடிப்படையாகும்.*

*"பசுமை புரட்சி" மூலம் விவசாயத்தின் முதலாளித்துவ தொழில்மயமாக்கல் ஆரம்பிக்கப்பட்டது. 1976ஆம் ஆண்டில் வந்த கொத்தடிமை தொழில்களை ஒழிக்கும் சட்டம் அதற்கு தேவையான பண்ணை தொழிலாளர்களை விடுதலை செய்தது. உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் பொருட்களுக்கான இந்திய உள்நாட்டு சந்தையின் மகத்தான வளர்ச்சியை அமைத்தது இதுவே ஆகும். இந்தக் காலத்தில் எண்ணெய், எரிவாயு, பெட்ரோல், நிலக்கரி, எஃகு மற்றும் அலுமினியத் துறைகளில் இந்திய மூலப்பொருள் நிறுவனங்கள் நிறுவப்பட்டன. அவர்களில் பெரும்பான்மையானவைகள் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களாக இருந்தாலும் இன்னும் மற்ற நாடுகளிலிருந்து நிதிரீதியாகவும் தொழில்நுட்பரீதியாகவும் ஏகாதிபத்தியவாதிகளை நம்பியிருந்தனர்.*

*1991இல் நடந்தேறிய சமூக ஏகாதிபத்திய சோவியத் ஒன்றியத்தின் தகர்வு சர்வதேச நிதி மூலதனத்திற்கு அதன் புதிய தாராளவாதக் கொள்கை மற்றும் இந்தியாவின் நலன்களை உறுதிப்படுத்துவதற்கான உறுதியான முன்நிபந்தனை ஆகும்.*

*"புதிய பொருளாதார கொள்கை"யை மத்திய நிதி அமைச்சர் மன்மோகன் சிங் 1995இல் உலக வர்த்தக அமைப்பின் மூலம் இந்தியாவில் உலகளாவிய சந்தைக்கான கதவினை திறந்துவிட்டார். இந்த கொள்கையானது பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்கலுக்கு ஏற்பாடு செய்தது. மன்மோகன் சிங், பெரிய அளவில் வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவுதல்* (SEZ) *ஆகியவற்றை ஊக்குவித்தார். "சிறப்புப் பொருளாதார மண்டல சட்டம்" 2005இல் நிறைவேற்றப்பட்டதிலிருந்து 2017ஆம் ஆண்டுக்குள் புதிய* SEZ *களின் எண்ணிக்கை 421 ஆகவும் 1.7 மில்லியன் ஊழியர்களுடனும் 4486 ஆக அதிகரித்துள்ளது.*

*ஏராளமான தொழில்துறை, வங்கி, வணிகர் மற்றும் விவசாய மூலதனம் ஆகியவற்றை ஏற்கனவே தன்வசமாக்கியிருந்த இந்திய ஏகபோக முதலாளித்துவம், தனியார்மயமாக்கல் மற்றும்* SEZ*களின் உருவாக்கம் ஆகியவற்றிற்கான அரசின் செயல்திட்டங்களிலிருந்து பயனடைந்தன.*

*உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு 1995 முதல் 2007 வரை*

---

★ *மார்ச் 2017 வரை 37 ஆண்டுகள் ஜெர்மன் மார்க்சிய - லெனினிய கட்சியின் தலைவராக இருந்தவர்.*

★★ *2016இல் நடைபெற்ற ஜெர்மன் மார்க்சிய - இலெனினியக் கட்சியின் பத்தாவது பேராயத்தில் விவாதிக்கப்பட்ட இந்த ஆய்வானது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

1.2 சதவீதத்திலிருந்து 2.1 சதவீதமாக உயர்ந்தது. இது 75 சதவீத அதிகரிப்பு. 2004இல் பிரதமர் பதவிக்கு சோனியா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே இந்தியாவின் பங்குச் சந்தைப் பரிவர்த்தனை 135 ஆண்டுகளில் மிகவும் வியத்தகு சரிவுக்கு தள்ளப்பட்டது. அரசாங்கமானது தனியார் மயமாக்கலுக்கான வழியை கைவிட்டுவிடலாம் என்பதற்கு பின்னால் சர்வதேச நிதி மூலதனத்தின் கரிசனம் இருந்தது. இந்தச் சூழ்நிலையில் இந்தியாவின் ஏகபோக முதலாளித்துவம் பிரதம மந்திரி பதவியை "கைவிடுமாறு" சோனியா காந்தியை வலியுறுத்தியது. மன்மோகன் சிங் பிரதம மந்திரியாக ஆனபோது பங்குச் சந்தை மேல்நோக்கிச் சென்றது. இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் அரசின் கட்டுப்பாட்டின் மீது இந்திய ஏகபோக முதலாளித்துவ வர்க்கம் மற்றும் சர்வதேச ஏகபோகங்களுக்கும் இடையிலான போட்டியில் முன்னணி இந்திய ஏக போகங்கள் அதிகரித்தளவில் தீர்மானகரமான செல்வாக்கினை அடைந்தது.

இது உலக அரங்கில் இந்தியாவின் வளர்ந்து வரும் பாத்திரத்தின் வேகமான வளர்ச்சியால் தொடர்ந்து இருந்தது. 2006 ஆம் ஆண்டில் அமெரிக்கா அதிகாரப்பூர்வமாக இந்தியாவை ஆறாவது அணு சக்தி வல்லரசு என அங்கீகரித்தது. விரைவான வளர்ச்சியைப் பெற்ற தகவல் தொடர்பு களும் இணையதளமும் இந்திய ஏகபோகங்கள் சிறப்பாக போட்டிபோடக்கூடிய சாதகமான நிலைமைகளை உருவாக்கின. அவற்றில் பெரும் எண்ணிக்கையிலான சிறப்பான பயிற்சி பெற்ற ஐ.டி. வல்லுநர்கள் அவர்கள் வசம் இருந்தனர்.

தீவிர நவீன தொழில்துறை பகுதிகளுக்கு முற்றிலும் மாறாக, நாட்டின் பெரும் பகுதிகள் பெரும் வறுமையால் ஆதிக்கம் செலுத்தப் படுகின்றன. அவை பின்தங்கியுள்ள மற்றும் அரை நிலவுடைமை கிராமப்புற உற்பத்தியில் நீடிக்கின்றன. இது இந்தியாவின் புதிய ஏகாதி பத்திய தன்மையை சந்தேகிக்க சில இடது பொருளாதார வல்லுனர்களை தூண்டுகிறது.

இதேபோன்ற சூழ்நிலையில், 1917இல், லெனின் ரஷ்யாவின் ஏகாதிபத்திய தன்மையைப் பற்றி கூறியதாவது:

மேலும், ரஷ்யாவின் விஷயத்தில், ஏகாதிபத்தியத்தை ஒரு (ஏகாதிபத்தியம் பொதுவாக ஒத்திசைவற்ற முழுமையே ஆகும்) ஒத்திசைவான முழுமை (Coherent whole) என முன்வைப்பது தவறானது. ஏனெனில் ரஷ்யாவில் இயற்கை அல்லது அரை - இயற்கை பொருளாதாரத் திலிருந்து முதலாளியத்திற்கு மாறிச்செல்லும் நிலையிலேயே இன்னமும் பல துறைகளும் உழைப்புப் பிரிவினைகளும் இருக்கின்றன. ("கட்சித்திட்ட திருத்தத்துடன் தொடர்புடைய மூல அம்சங்கள்", ஏப்ரல் - மே 1917இல் எழுதப்பட்டது, லெனின், நூல் திரட்டு, தொகுதி 24, ஆங்கிலப் பதிப்பு, பக்.425)

இந்திய தொழில் கழகங்கள் இப்பொழுது பிற நாடுகளின் மீதான புதுக் காலனிய சார்புத் தன்மையை அதிகரித்து வருகின்றன. இலங்கையில் மிகப்பெரிய எண்ணெய் தயாரிப்பாளராக இந்தியன் ஆயில் நிறுவனம் உள்ளது.

ஏர்டெல் நிறுவனமானது 2015ஆம் ஆண்டில் 15 ஆப்பிரிக்க நாடுகளின் செல்பேசி வலைப் பின்னலை (நெட்வொர்க்கை) எடுத்துக் கொண்டது. துருக்கி, மலேசியா, சீனா, பிரிட்டன் மற்றும் நெதர் லாந்து உள்ளிட்ட நாடுகளில் இந்திய ரசாயன ஏக போக நிறுவனமான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான உலகளாவிய அளவில் இழைகள் (fiber) மற்றும் பாலியெஸ்டர் உற்பத்திக்கான முக்கிய உற்பத்தித் தளங்கள் உள்ளன. ஏற்றுமதிகள் 121 நாடுகளுக்கு செல்கின்றன.

உலக சந்தையில் முன்னணியில் உள்ள இந்திய நிறுவனங்களாக டிராக்டர் உற்பத்தியில் மஹிந்திரா, தொழில்நுட்ப துறையில் விப்ரோ மற்றும் மின்மாற்றி உற்பத்தியில் க்ராம்ப்டன் கிரீவ்ஸ் (Crompton Greaves) ஆகிய நிறுவனங்கள் உள்ளன.

இந்திய எஃகு நிறுவனமான ஆர்சலார்-மிட்டல் (Arcelor-Mittal) 2007இல் நிறுவப்பட்ட குறுகிய காலத்தில் உலகம் முழுவதும் மிகப்பெரிய எஃகு உற்பத்தியாளராக அது தீவிரமாக முன்னேறியுள்ளது. லுக்சம்பர்க்கில் இருந்து உலகின் இரண்டாவது மிகப்பெரிய எஃகு நிறுவனமான ஆர்சலார் நிறுவனத்தை மிட்டல் ஸ்டீல் எடுத்துக்கொண்ட போது இது துவங்கப்பட்டது. 2016இல் 41 மில்லியன் டன் உற்பத்தி மற்றும் உலகளாவிய அளவில் 1,99,000 ஊழியர்களோடும் ஆர்சலார்-மிட்டல் ஐரோப்பாவின் மிகப்பெரிய எஃகு உற்பத்தியாள ராகவும் இந்திய ஏகபோக டாட்டா ஸ்டீலின் 24 மில்லியன் டன் உற்பத்தித் திறன் மற்றும் 70,000 ஊழியர்களின் வருடாந்திர உற்பத்தித்

திறனை விட அதிகமாக உள்ளது. மனிதர்களையும் சூழலையும் சுரண்டும் இரக்கமற்ற முறைகளில், 30,000க்கும் அதிகமான சுரங்கத் தொழிலாளர்கள் கஜகஸ்தான், உக்ரைன், போஸ்னியா, கனடா, அமெரிக்கா, மெக்ஸிக்கோ, பிரேசில் மற்றும் லைபீரியாவில் ஆர்சலார்-மித்தலுக்கு வேலை செய்கின்றனர்.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களை தனியார் மயமாக்குதல் மற்றும் விரிவாக்கம் ஆகியவற்றிற்கு எதிரான பரந்த வெகுஜன எதிர்ப்பை மன் மோகன் சிங் சந்தித்தபோது இந்து பாசிசத்துடன் உறவு கொண்ட நரேந்திர மோடியின் அரசாங்கம் 2014இல் பதவி ஏற்றது. அவரது "மேக் இன் இந்தியா" என்ற திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் என்பன இந்திய ஏகபோகங்களை குறிப்பாக விரிவாக்குவதற்கான கட்டமைப்பு நடவடிக்கை களும் முதலீடுகளுமே ஆகும்.

வெளிநாடுகளில் முதலீடு செய்யும் முதலீட் டாளர்களின் பாதுகாப்புக்கான நடவடிக்கைகள், சர்வதேச ஏகபோக நிறுவனங்களுக்கான வரி விதிப்பு நடவடிக்கைகள் ஆகியவையும் இந்த நோக்கத்திற்காக சேவையாற்றின.

2016 வாக்கில் 58 இந்திய நிறுவனங்கள் உலகெங் கிலும் 2,000 மிகப்பெரிய நிறுவனங்கள் என்ற குழுவிற்குள் நுழைந்தன. இது ஜெர்மனியின் 51ஐ காட்டிலும் அதிகம்.

இந்திய சுரங்கத் துறையின் குழுமமான அதானி 11.5 பில்லியன் யூரோக்களை ஆஸ்திரேலியாவில் கார்மைக்ஹேல் நிலக்கரி சுரங்கத்தில் முதலீடு செய்து வருகின்றது. இது ஆண்டுதோறும் 60 மில்லியன் டன் உற்பத்தி செய்யப்படுகின்ற உலகெங்கிலும் மிகப் பெரிய சுரங்கங்களில் ஒன்றாகும். இந்த முதலீட்டில் இரயில் பாதை அமைத்தல் மற்றும் 99 வருட குத்தகையிலான நிலக்கரி துறைமுகமான அபோட் பாயின்ட் (Abbot Point) கட்டிடமும் அடங்கும். ஆஸ்திரேலிய அரசாங்கம் 2017இல் இந்த தற்பெருமைக்கான (Megalomaniac) திட்டத்தை அங்கீகரித்தது.இந்த திட்டமானது பரந்த நிலப் பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டத்தை குறைத்து கடற்கரையிலிருந்து விலகி அமைந்துள்ள கிரேட் பேரியர் ரீஃப் (Great Barrier Reef ) என்ற பவளப்பாறை பகுதிகளை முற்றிலும் அழித்து விடும். மோடி அரசாங்கம் வலிய 370 நிலக்கரி மின்சக்தி நிலையங்களை கட்டியெழுப்புகிறது; பத்து புதிய அணு உலைகளை கட்டமைக்க விரும்புகிறது. மோடி வெளிப்படையாக இந்துத் துவா சித்தாந்தத்துடன் தனது அரசாங்க திட்டத்தை நியாயப்படுத்துகிறார். இது முழு இந்திய துணைக் கண்டத்தின் "புவிசார்" பண்பாட்டு ஒற்று மையையும் உள்ளடக்கிய இந்து சாம்ராஜ் யத்தின் நோக்கமாகும்.

இது ஏகாதிபத்திய அபிலாசைகளுக்கு ஒரு சித்தாந்த அடிப்படையை வழங்குகிறது.

நேபாளத்தில் இந்தியாவானது சர்வதேச சட்டத்திற்கு முரணாக 2015இல் பொருளாதாரத் தடையை விதித்தமை, அந்நாட்டில் தெராயில் பிரிவினைவாத இயக்கங்களை ஆதரித்தமை யுடன் சட்டமியற்றுதலில் நேரடியாக தலை யிட்டமை என இந்தியாவின் ஆதிக்கத்தில் உள்ள இந்து அரசாக மாற்றுவதற்கு முனைகிறது. இந்து தேசியவாதம், ஒரு ஆக்கிரோஷமான கம்யூனிச எதிர்ப்பு சித்தாந்தமானது; மார்க்சிச-லெனினிச மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களின் அறிவிக்கப்பட்ட எதிரி.

2016ஆம் ஆண்டில் இந்திய அரசு, இராணுவ செலவினங்கள் என 55.9 பில்லியன் அமெரிக்க டாலர்களாகக் கொண்டுள்ளது. இது ஏற்கனவே பிரான்ஸ் மற்றும் பிரிட்டனின் இராணுவ செலவினங்களைத் தாண்டிவிட்டது. 2013இல் இந்தியாவில் முதலாவது விமானம் கட்டும் தளம் துவங்கப்பட்டது. 2016ஆம் ஆண்டில் முதல் மறுபயன்பாட்டிற்கான விண்வெளி விமானம் தொடங்கப்பட்டது.

மோடி ஜப்பான் மற்றும் அமெரிக்காவுடன் இணைந்து நேரடியாக சீனாவுக்கு எதிராக "மூலோபாய" கூட்டணிகளில் நுழைந்தார். உலக மேலாதிக்கத்திற்கான உரிமை கோரலில் அமெரிக்காவிற்கு சீனா அச்சுறுத்தலாக இருப்ப தால் கிழக்கு ஆசியாவில் அமெரிக்காவானது இந்தியா மீதே சார்ந்துள்ளது. ஏகாதிபத்தியங் களுக்கு இடையிலான இக்கூட்டணியானது இந்தியா தனது சீனப் போட்டியாளருக்கு எதிராக தனது நலனை சுதந்திரமாக அறுதியிடுவதையும் கொண்டுள்ளது. பரஸ்பர நன்மைக்காக இது ஒரு தற்காலிக மற்றும் முரண்பாடான கூட்டு ஆகும்.

அமெரிக்காவானது ஏகாதிபத்திய மேனிலை வல்லரசாக இன்னமும் ஆதிக்கத்தை செலுத்தி னாலும் இந்தியாவானது முன்பு அமெரிக்காவை

ஒரு சார்பாக மேலும் மேலும் சார்ந்திருந்ததானது மாறி மாறி ஒன்றையொன்று ஊடுருவிச் செல்வதற்கான (interpenetration) வழியை வழங்குகிறது. உள்நாட்டு அரசியலில் இந்தியாவின் புதிய ஏகாதிபத்திய விரிவாக்க முனைவானது பல இலட்ச சர்வதேச தொழிற்துறை பாட்டாளி வர்க்கப்படை மற்றும் கோடிக்கணக்கான கிராம மக்களின் வர்க்கப் போராட்டத்தை அடக்கு வதையே முதன்மையான குறிக்கோளாக கொண்டு இருக்கிறது.

❖

# பாட்டாளி வர்க்க ஐக்கிய முன்னணி அல்லது பாஸிஸ்டு எதிர்ப்பு மக்கள் முன்னணி

*சில தோழர்கள் தேவையில்லாமல் எதைத் தொடங்குவது-பாட்டாளி வர்க்க ஐக்கிய முன்னணியா அல்லது பாஸிஸ்டு எதிர்ப்பு மக்கள் முன்னணியா என்னும் பிரச்னையைப் போட்டு மூளையைக் குழப்பிக் கொள்கிறார்கள்.*

*சில தோழர்கள், ஒரு உறுதியான பாட்டாளி வர்க்க ஐக்கிய முன்னணியை உருவாக்காமல் அதுவரை பாஸிஸ்டு எதிர்ப்பு மக்கள் முன்னணியை அமைக்கும் வேலையை ஆரம்பிக்க முடியாது என்று கூறுகிறார்கள்.*

*இதர சில தோழர்கள் வாதிடுகிறார்கள்: பாட்டாளி வர்க்க ஐக்கிய முன்னணியை ஸ்தாபிப்பதற்கு சமூக-ஜனநாயகத்தின் பிற்போக்குப் பகுதியிலிருந்து பல நாடுகளில் கடும் எதிர்ப்பு இருப்பதால், உடனடியாக முதலில் மக்கள் முன்னணியைக் கட்டுவதைத் தொடங்குவோம், பின்னர் அதன் அடிப்படையில் ஒன்றுபட்ட தொழிலாளி வர்க்கத்தை வளர்க்கலாம், அதுதான் நல்லது என்கிறார்கள்.*

*இரு தரப்பாரும் ஒன்றைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள். ஒன்றுபட்ட பாட்டாளி வர்க்க முன்னணியும், பாஸிஸ்டு எதிர்ப்பு மக்கள் முன்னணியும் உயிருள்ள தர்க்க ரீதியான போராட்டத்தில் இணைக்கப்பட்டவைகளாகும். அவை ஒன்றையொன்று ஊடும்பாவும்போல் பின்னப்பட்டதாகும், பாஸிஸத்தை எதிர்த்து நடைபெறும் நடைமுறை போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் அவை ஒன்றிலிருந்து ஒன்றிற்குச் செல்லக் கூடியதாகம். அவைகளை ஒன்றையொன்று வேறுபடுத்தும் சீனச்சுவர் ஒன்றுமில்லை.*

*பாஸிஸ எதிர்ப்பு மக்கள் அணியின் தலைமையான சக்தியாக உள்ள தொழிலாளி வர்க்கத்தின் செயல் ஒற்றுமையை அடையாமல் ஒரு உண்மையான பாஸிஸ எதிர்ப்பு மக்கள் முன்னணியை ஸ்தாபிப்பது சாத்தியமாகும் என்று கருத முடியாது. அதே சமயத்தில் பாட்டாளி வர்க்கத்தின் ஒன்றுபட்ட அணி மேலும் வளருவதற்கு அது பாஸிஸத்தை எதிர்த்துள்ள ஒரு மக்கள் முன்னணியாக மாற்றம் பெற்றால்தான் பெரும்பாலும் சாத்தியமாகும். கணிசமான அளவில் அதைச் சார்ந்தே இருக்கிறது....*

*அது எப்படியிருப்பினும் பாட்டாளி வர்க்கம் குறைவான எண்ணிக்கையில் உள்ள, விவசாயிகளும் நகரப்புறத்துக் குட்டி பூர்ஷுவாக்களும் அதிகமாக உள்ள எல்லா நாடுகளிலும்கூட ஒன்றை நாம் மறந்துவிட முடியாது, அங்கு தொழிலாளி வர்க்கம் தன்னுடைய ஒரு உறுதியான ஐக்கிய முன்னணியை அமைப்பதற்கு ஒவ்வொரு முயற்சியையும் செய்ய வேண்டியது இன்னும் அதிகமாக அவசியமாகும். அதன்மூலம் அது சகல உழைக்கும் மக்களின்பால் ஒரு தலைமையான அம்சமாக இடம் பெற ஏதுவாகும்.*

**- ஐக்கிய முன்னணி தந்திரம், டிமிட்ரோவ் (தமிழில்: ஏ.சீனிவாசன்), பக்.153, பிப்ரவரி 1976**